
ஆனந்த நாவல்
விலை ரூ.50/
பாலகுமாரன்
புத்தம்புதிய மெகா நாவல்
கங்கை கொண்ட சோழன் 3








# 21

தருமபாலர், விசாரதத்தர் என்ற அந்த இரண்டு புத்த பிட்சுக்களும் அலண்டு போய் கிடந்தார்கள். கடல் பயணம் இவ்வளவு கடினமாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. படகோட்டிகள் தைரியமாக இருந்தாலும் கரை சேருமா என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. ஓயாது புத்த நாமம் சொன்னார்கள். சில சமயம் வாய் விட்டு அலறினார்கள். கரை தொட்டதும் விக்கி, விக்கி அழுதார்கள்.

நேரே போய் ஸ்ரீ விஜயத்து கன்மியிடம் தங்களை ஒப்படைக்க வேண்டும் என்று பாரபரத்தார்கள். ஆனால் ஸ்ரீ விஜயத்து கன்மியும் இல்லை, கடாரத்து கன்மியும் இல்லை. இரண்டு தூதுவ அதிகாரிகளும் இராஜேந்திர சோழர் உத்தரவின் பேரில் தஞ்சாவூர் போய் விட்டார்கள். திருவாரூர் வழியாக, அம்மன்பேட்டை வழியாக மேற்கே நடக்கின்ற தேர் சாலையில் நடந்தால் தஞ்சாவூர் போய் விடலாம் என்று சொல்ல, அவர்கள் விரைவான நடையாய் தஞ்சாவூர் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

மழிக்கப்பட்ட தலையும், சவரம் செய்யப்படாத முகமுமாய் அவர்கள் பார்ப்பதற்கு விநோதமாக இருந்தார்கள். அவர்களுடைய துறவு ஆடை மிக அழுக்கடைந்ததாய் இருந்தது. எப்பொழுதும் போல அவர்களும் பாடி காவல் வீரர்களால் தென் புறம்படியில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அகழிக்கு அந்தப் பக்கம் நிறுத்தி வைக்கப் பட்டார்கள்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

அவர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

தயங்கினார்கள். அந்த தயக்கம் அபத்தமாக இருந்தது. ஆனால் ஒரு புத்த பிட்சு பொய் சொல்வதற்கில்லை என்பதால் உண்மையை சொல்ல வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

"நாங்கள் ஸ்ரீ விஜயத்திலிருந்து வருகிறோம்" சோழ வீரர்கள் சட்டென்று குனுக்குற்றார்கள்.

"என்ன எங்கிருந்து?"

"ஸ்ரீ விஜயத்திலிருந்து"

"எதற்காக வந்திருக்கிறீர்கள்?"

"இராஜேந்திர சோழரை பார்த்து சில செய்திகள் சொல்ல வேண்டும் என்று"

"என்ன செய்திகள்"

"இராஜேந்திர சோழனிடம் தான் சொல்ல வேண்டும்"

"முடியாது. இப்பொழுது இங்கே சொல்லப்பட வேண்டும். இல்லாவிட்டால் உங்களை நான் என்ன செய்வேன் என்று தெரியாது.

"ஸ்ரீ விஜயத்தில் நிலைமை நன்றாக இல்லை"

"என்ன நிலைமை"

"அரசியல் நிலைமை"

"எதனால் நன்றாக இல்லை"

"தந்தை இறந்தபிறகு மகன் ஆட்சிக்கு வந்தார். மகனுக்கு சாமர்த்தியம் இல்லை. எனவே உள்ளுக்குள் கலவரங்கள் துவங்கி அவர் மீது படை எடுப்பு நடந்து, அந்த படை எடுப்பை ஓரளவு எதிர்கொண்டிருக்கிறார். ஆனால் அந்த படை எடுப்பு தாண்டி வேறு சில விஷயங்கள் நடந்து விட்டன"

"என்ன"

"சோழ தேசத்து வணிகர்கள் சித்ரவதை செய்யப்பட்டார்கள்"

"எப்படி?"

"சவுக்கால் அடித்தும், பிரம்பால் அடித்தும் கொடூர முறையில் நடத்தப்பட்டார்கள்"

"வேறென்ன கொடூரம்"



"கைகளை நெருக்கி ஒன்றாக கட்டினார்கள்"

"பிறகு"

"கால் கட்டை விரலை நசித்தார்கள்"

"இப்படிப்பட்ட செயல்களை செய்துவிட்டு அவர்களை நோக்கி வந்திருக்கிறீர்களே, அந்த தேசம் நோக்கி வந்திருக்கிறீர்களே, என்ன துணிச்சல்"

"எங்களிடம் பொய் சொல்லுவதற்கோ, மறைப்பதற்கோ எதுவும் இல்லை. இரண்டு தேசத்திற்கும் நல்ல உறவு நீடிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். ஸ்ரீ விஜயத்து கண்மிகளையும், கடாரத்து கண்மிகளையும் சந்திக்க வேண்டும் என்று தான் நாங்கள் விருப்பப் பட்டோம். எங்களுக்கு முன்னே அவர்கள் போய் விட்டார்கள் என்பதால் நாங்கள் பின் தொடர்ந்து வந்தோம்"

"உங்களை இந்த விதமாக நாங்கள் அனுப்ப முடியாது. இப்பொழுதே உங்களை கைது செய்கிறோம். புத்த பிட்சு என்பதால் பின் கை கட்டி, கண்களைக் கட்டி உங்களை இழுத்துப் போகப் போவதில்லை. மாறாக ஒரு சிறு தேரில் ஏற்றி வீரர்கள் புடை சூழ உங்களை அனுப்புவோம். நீங்கள் அங்கு போய் யாரை சந்திக்க வேண்டுமோ, அதற்குண்டான விஷயத்தை சொல்லி சந்திக்க முயற்சி செய்யுங்கள்" என்று தலைவன் உத்தரவிட்டான்.

"இவர்கள் கையை தேரோடு பிணைக்க வேண்டுமா" என்று வீரன் கேட்க, "வேண்டாம். பிணைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாய் தப்பித்துப் போக முயற்சித்தால், இறங்கி கத்தி இறக்கி, கொன்று விடு. புத்த பிட்சு என்று பார்க்காதே" என்று கட்டளை இட்டான்.

அந்த புத்த பிட்சுக்களுக்கு தூக்கி வாரிப் போட்டது.

ஸ்ரீ விஜயத்தில் இப்படிப்பட்ட அவமரியாதை கிடையாது. சோழ தேசத்தில் புத்த பிட்சுக்களுக்கு நல்லவிதமான மரியாதைகள் இல்லை என்பதை பலவிதமாக தெரிந்து கொண்டார்கள். வழியில் ஒரு உற்சவ சிலை வந்து கொண்டிருக்க அதற்கு எதிரே முரசுகள் முழங்க, தாள வாத்தியங்கள் முழங்க இரண்டு பெண்மணிகள் துள்ளி குதித்து நடனமாடிக் கொண்டிருந்தார்கள். சுற்றி பெரிய கூட்டம் இருந்தது. அவர்களை ஒதுக்கிக் கொண்டு இவர்கள்

போனார்கள்.

"மொட்டை போகிறதடா, மொட்டை போகிறதடா" என்று பல குழந்தைகளும், பெரியவர்களும் கூறினார்கள்.

புத்த பிட்சுக்களை மொட்டைகள் என்று ஸ்ரீ விஜயத்தில் சொல்வது இல்லை. ஆனால் சோழ தேசத்தில் சொல்கிறார்கள். புத்த பிட்சுக்களுக்கு மரியாதை இல்லை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

"என்ன முட்டாள்தனம் இது. உங்களை யார் வரச் சொன்னது" கேசவன் தலையில் அடித்துக் கொண்டான்.

நிமலன் சுழன்று போய் நாற்காலியில் உட்கார்ந்தார்.

"தேவை இல்லாத வம்பு. நாங்கள் தப்பித்து எப்படி வெளியே போகப் போகிறோம் என்று பயந்திருக்க, இப்படி வந்து நிற்கிறீர்கள். நீங்கள் என்ன ஸ்ரீ விஜயத்து தூதுவர்களா, அதற்குண்டான முத்திரை மோதிரமும், அதற்குண்டான அடையாளங்களும் இருக்கின்றனவா. நீங்களாக வந்து ஒரு விஷயத்தைச் சொன்னால் இராஜேந்திர சோழர் கேட்டு விடுவாரா. இராஜேந்திர சோழரை என்னவென்று நினைத்துக் கொண்டிருக் கிறீர்கள். யாரும் அணுக முடியாத இடத்தில் இருக்கிறார். அதற்கு முன்பு நீங்கள் ஆறு அதிகாரிகளை சந்தித்தாக வேண்டும். அந்த அதிகாரியும் உங்களை இராஜேந்திர சோழரிடம் அழைத்துப் போக மாட்டார்கள்.

ஒன்று புரிந்து கொள்ளுங்கள். இது சோழ தேசம். ஸ்ரீ விஜயம் அல்ல. புத்த பிட்சு வந்தால் எழுந்து நிற்க மாட்டார்கள். மாறாக உங்களை பிரம் பால் அடித்து குப்புறப் படுக்க வைப்பார்கள். மிக மோசமான காலத் தில், மிகக் கேவலமான முறையில் வந்து நிற்கிறீர்கள்.

உடையை சரி செய்து கொள்ளுங்கள்" என்று வேகமாக உத்தரவுகள் கொடுக்க, அவருக்காக பணி அமர்த்தப்பட்ட வேலை ஆட்கள் அந்த புத்த பிட்சுக்களுக்கு உதவி செய்தார்கள்.

தொண்டை மண்டல அந்தணரிடம் போய் யார் வந்திருக்கிறது என்று விரிவாக தெரிவிக்க, தொண்டை மண்டலத்து அந்தணர்கள் அவர்களை, அருகே நின்று குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அங்க அடையாளங்களை எடுத்துக் கொண்டார்கள்.

"உங்கள் கைகளில் ஒரு ஓலையை கட்டப் போகிறோம்.



அந்த ஓலையை நீங்கள் கவனமாக வைத்திருக்க வேண்டும். நீங்கள் இப்போதைக்கு சோழ தேசத்தின் கைதி. எந்தவித அடையாளமும் இல்லாமல் கடல் மார்க்கமாக வந்திருக்கிறீர்கள். உங்களை உளவாளிகள் என்று நாங்கள் தீர்மானிக்கலாம். ஆனால் புத்த பிட்சுவாக இருப்பதால் அப்படி தீர்மானிக்கவில்லை. ஒரு வேளை அரசாங்கம் அப்படி தீர்மானித்தால் உங்களுக்கு சிறை தண்டனை நிச்சயம்.

இப்போதைக்கு சந்தேகப்படும் படியான நபர் என்று ஒரு ஓலை உங்கள் கையில் இருக்கும். அதை கழட்டக் கூடாது. அதை கழற்றினாலும் மிகப்பெரிய தண்டனை உண்டு" என்று சொன்னார்.

புத்த பிட்சு 'சரி' என்று தலையசைத்தார்.

உடம்பு அசதி தீர அவர்கள் வெந்நீரில் குளித்தார்கள். வேறு காவி உடை கேட்டு வாங்கி அவர்களுக்கு போர்த்தி விட்டார். சவரம் செய்த முகத்தோடு மிகச் சுத்தமாக இருந்தார்கள். தியானம் செய்தார்கள். உணவு உண்டார்கள். படுத்து தூங்கினார்கள்.

அவர்கள் வருகை அருண்மொழிப் பட்டனுக்கு சொல்லப்பட்டது.

அருண்மொழிப் பட்டன் கிருஷ்ணன் ராமனிடமும், பரமன் மழபாடியிடமும் சொல்ல, அவர்களை நாமே சந்திக்கலாம். அரசர் சந்திக்க வேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் செய்தார்கள்.

"ஆனால் அரசரிடம் தெரிவிப்பது நல்லதல்லவா"

"ஆமாம். தெரிவிக்காமல் இருப்பது சரியல்ல. புத்த பிட்சுக்கள் வந்திருக்கிறார்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லுங்கள். சொல்லிப் பாருங்கள்" அருண்மொழி அலுப்போடு பேசினான்.

"என்ன"

"உடனே பாய்ந்து ஓடி வந்து விடுவார்." அவருக்கு புத்த பிட்சுக்கள் மீது மிகப் பெரிய கோபமும், சந்தேகமும் உண்டு"

"எங்களுக்கும் தெரியும். சமாதானப்படுத்திப் பார்க்கலாம்"

ஆனால் சமாதானம் ஆகவில்லை.

"உடனே இங்கு இழுத்து வா" என்று சொல்லப்பட்டது. அவர்களை தூக்கத்திலிருந்து எழுப்பி மாலை நேரம் இராஜேந்திர சோழர் முன்பு நிறுத்தி வைத்தார்கள். கன்னிகளையும் வரவழைத்து வேறொரு அறையில் வைத்தார்கள்.

"என்ன சமாச்சாரம், எங்கிருந்து வருகிறீர்கள்"

புத்த பிட்சுக்கள் தாங்கள் வந்த நோக்கத்தையும், தாங்கள் கண்ட காட்சியையும், அதனால் மனம் பாதிக்கப்பட்டதையும் அதற்கு நிவாரணமாக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்ததையும், அதனால் தனியாக, துணிச்சலாக ஒற்றைப் பாய்மரம் போன்ற நாவாய் ஏறி வந்ததையும், இங்குள்ள கன்னிகளிடம் விஷயம் சொல்லி இன்னும் தெளிவாக, யோசித்து உங்களிடம் வரலாம் என்று இருந்தோம். ஆனால் நடுவழியில் கைது செய்யப்பட்டோம்.

"உங்கள் கன்னிகள் என்ன சொன்னார்கள்"

"அவர்களுக்கு இன்னும் அதிக விஷயம் தெரிந்திருக்கிறது. அவர்கள் இதற்கெல்லாம் காரணம் தலைமை பிட்சு என்று சொல்கிறார்கள். எங்களுக்கு தலைமை பிட்சு அப்படி இருப்பார் என்று தோக்கம் இல்லை அவர் சமாதானப் படுத்தக் கூடும்.

கடாரத்து மக்கள் ஸ்ரீ விஜயத்தின் மீது கோபமாக இருக்கிறார்கள். ஸ்ரீ விஜயம் என்பது கடாரம் சேர்ந்தது தான், நடுவே கணவாய் இருக்கிறது. அந்த கணவாய் இருப்பதால் கடாரத்து மக்கள் தாங்கள் தனி ராஜ்ஜியம் என்றும், ஸ்ரீ விஜயம் தனி ராஜ்யம் என்றும் பேசிக் கொள்கிறார்கள். அப்படியே நடந்துக் கொள்கிறார்கள்"

"உண்மையில் அப்படி இல்லை அல்லவா"

"உண்மையில் அப்படி இல்லை"

"ஏன் அப்படி ஆயிற்று"

"ஸ்ரீமாறன் விஜயோத்துங்க வர்மன் இருந்தபொழுது கடாரத்தின் மீது அவருடைய ஆளுமை பலமாக இருந்தது. அவர் திடீரென்று இறந்து போனார்"

"என்ன காரணம்"

"உடல்நலம் சரியில்லை"

"ஏன் உடல்நலம் சரியில்லை?"



"தெரியவில்லை"

"கொல்லப்பட்டிருக்கலாமா?"

"இல்லை. அதற்குண்டான வாய்ப்பு இல்லை, புத்த பிட்சுக்கள் தான் உதவி செய்தார்கள். அவர்கள் தான் சிகிச்சை செய்தார்கள்"

"புத்த பிட்சுக்களே கொன்றிருக்கலாமா"

"அப்படியும் வாய்ப்பு இல்லை"

"ஏன் வாய்ப்பு இல்லை. புத்த மதமாக ஸ்ரீ விஜயத்தை மாற்ற வேண்டும். இந்து தேசமாக இருக்கின்ற ஸ்ரீ விஜயத்தை புத்த மதத்திற்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் புத்த பிட்சுக்களுக்கு உண்டல்லவா"

"உண்டு"

"அவர்கள் இதை நடத்தி இருக்கலாமா" இராஜேந்திரர் கேள்வி மீது கேள்வி போட அவர்கள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

"அப்படியும் நடந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆனால் நடந்தது அப்படி அல்ல.

கடாரத்து மக்கள் படைஎடுத்து கணவாய் தாண்டி ஸ்ரீ விஜயத்துக்குள் நுழைந்தார்கள். சங்கிராம விஜயோத்துங்கவர்மன் அதை எதிர்த்தார். கடுமையாக போரிட்டார். கடார மக்கள் பின் வாங்கினார்கள். ஆனால் கடார மக்களுக்கும் ஸ்ரீ விஜய மக்களுக்கும் இடையே தீராத பகை மூண்டு விட்டது. இந்தப் பகையை தீர்த்துக் கொள்ள கருதியே, ஸ்ரீ விஜயத்துக்கு வருகின்ற சோழ தேசத்து கப்பல்களை எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கடாரத்து கப்பல் கொள்ளைக் காரர்களால் நடந்தது.

கடாரத்து போர் வீரர்கள் அந்த கப்பல் கொள்ளைக்காரர்களுக்கு காசு கொடுத்து, சோழ தேசத்து கலன்களை உடைக்கச் சொன்னார்கள்"

"ஏன் சீன தேசத்து கலன்களை உடைக்க வில்லை"

"முடியாது"

"ஏன்?"

"அதில் வில் எறிகின்ற வீரர்கள் உண்டு. சீன தேசத்து கப்பல்கள் விரைவானவை. மிகப் பெரியவை, சோழ தேசத்து கப்பல்கள் சக்கானை

உடைத்தால் போதும். உட்கார்ந்து விடும். எனவே அவர்கள் எளிதாக உடைக்கக்கூடிய சோழ தேசத்து நாவாய்களை கைப்பற்றினார்கள். உள்ளுக்குள் இருந்த பொருள்களை கொள்ளை அடித்தார்கள். சுக்கானை உடைத்து பாய் மரத்திற்கு தீயிட்டு கடலில் மூழ்கடித்தார்கள்"

"இப்பொழுது இதனால் என்ன லாபம்"

"சீன தேசம் பண்டங்களை ஏற்றிக் கொண்டு ஸ்ரீ விஜயத்திற்கு வருவதற்குக் காரணம் சோழ தேசம் தான். இப்படி நாலு நாவாய்களை உடைத்தால் சோழ தேசம் வராது என்பது அவர்களுடைய எண்ணம்"

"இதற்கு என்ன வழி?"

"நீங்கள் மிகச் சிறந்த தளபதிகளை அங்கு அனுப்பி விஜயோத்துங்க வர்மனிடம் பேச வேண்டும்"

" மன்னரிடம் பேச வேண்டுமா. தலைமை புத்த பிட்சுவிடம் பேச வேண்டுமா"

"இரண்டு பேரிடமும் பேசலாம்"

"எதற்காக புத்த பிட்சுவிடம் பேசுவது. புத்த பிட்சுவுக்கும், அரசியலுக்கும் என்ன சம்மந்தம். ஆக சங்கிராம விஜயோத்துங்க வர்மனை ஆட்டி வைப்பது உங்கள் தலைமை பிட்சு. சரியா?"

"அப்படி நேரடியாக சொல்ல முடியாது. ஆனால் கடாரம் படை எடுத்து வரும் என்ற எச்சரிக்கையை, எங்கள் தலைமை பிட்சு சொன்னார்"

"அவருக்கு எப்படி தெரிந்தது"

"அங்குள்ள புத்த பிட்சுக்கள் இங்கு செய்தி சொல்கிறார்கள்"

"ஆக புத்த பிட்சுக்கள் எல்லா இடத்திலும் உளவாளிகளாக இருக்கிறார்கள். நீங்கள் வந்ததும் சோழ தேசத்தின் நிலைமை என்ன என்று உளவு பார்க்கத்தான் என்று நான் கருதக் கூடாதா"

"உண்மையில் அப்படி இல்லை. புத்தர் மீது ஆணையாக அப்படி இல்லை"

"இந்த ஆணை சொல்லி விட்டால் நான் பயந்து விடுவேனா. உங்கள் இரண்டு பேரையும் சிறையில் அடைக்கிறேன். உங்களுக்கு



பின்னாலேயே இந்த புத்த பிட்சுக்கள் வந்திருக்கிறார்கள். உங்கள் மீதும் எனக்கு சந்தேகம் இருக்கிறது" கன்னிகளை நோக்கி இராஜேந்திரர் பேச, அவர்கள் தலைகுனிந்து நின்றார்கள்.

"நாங்கள் ஒரு தர்மசங்கடமான நிலையில் நிற்கிறோம். எங்களுடைய அனுமதி இல்லாமல் தான் இவர்கள் வந்திருக்கிறார்கள்"

"அது தெரிகிறது. ஆனால் ஒரு புத்த பிட்சு நினைத்தால் ஒரு அரசியலில் எப்படி வேண்டுமானாலும் நுழைந்து விடலாம் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கிறீர்களே. அது தான் ஆத்திரமாக இருக்கிறது.

சோழ தேசத்தில் பல சைவ மடங்கள் இருக்கின்றன. பல வைணவ மடங்கள் இருக்கின்றன. எவையும் அதனதன் வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறதே தவிர, அரசியலில் நுழையவில்லை. அரசியலுக்கு அழைத்தாலும் வருவதில்லை. அப்படி இருக்க புத்த பிட்சுக்கள் அரசியலில் நுழைகிறார்களே இது என்ன அயோக்கியத்தனம். நாளை நான் வேங்கியை நோக்கி கிளம்புகின்றேன் எப்படியும் வருவதற்கு ஆறு மாதம் ஆகலாம். மேலும் தொடரலாம். அதுவரை நீங்கள் எங்களுடைய தேசத்தில் அதிதியாக இருங்கள். நீங்கள் மிகக் கவனமாக கண் காணிக்கப் படுவீர்கள். ஒரு மாளிகையிலேயே இருக்கும்படி வற்புறுத்தப்படுவீர்கள். அதாவது உங்கள் நால்வருக்குமே நான் வீட்டுக் காவல் வைக்கிறேன்.

யாரேனும் தப்பிக்க முயற்சி செய்தால் சிரச்சேதம் செய்வது என்னுடைய ஆணை.

கிருஷ்ணன் ராமன் அவர்களே இவர்களை சிறைக் கைதிகளாக ஒரு மாளிகையில் அடைத்து வையுங்கள், வேண்டும் மட்டும் உணவு கொடுங்கள். எங்கேயும் போகக் கூடாது என்று சொல்லுங்கள்"

"மன்னா. எங்களை அப்படி அடைத்து விட வேண்டாம். எங்களுக்கு விடுதலை கொடுங்கள். நாங்கள் உடனடியாக ஊர் திரும்புகின்றோம்" புத்த பிட்சுக்கள் கெஞ்சினார்கள்.

"ஊர் திரும்பி என்ன செய்வீர்கள்"

"இராஜேந்திர சோழர் நினைத்தால் எதையும் சாதிப்பார். அவர்

வேங்கி நோக்கி போய்க் கொண்டிருக்கிறார். மறுபடியும் இந்தப் பக்கம் திரும்பும் போது ஸ்ரீ விஜயத்தின் மீது படை எடுப்பார் என்று சொல்கிறோம்"

"எந்த நம்பிக்கையில் சொல்கிறீர்கள்"

"உங்களுடைய வணிகர்கள் பட்ட வேதனையை நான் கண்ணால் பார்த்தேன். முடிந்த அளவு தடை செய்தேன். அந்த முரடர்கள் கேட்கவில்லை"

"ஆக, எங்கள் சோழ வீரர்களுக்காக நீங்கள் பரிந்து வந்தீர்களா"

"ஆமாம் மன்னா, சத்தியமாக பரிந்து வந்தேன்" விசாரதத்தர் பேசினார்.

"எங்களுடைய வணிகர்கள் இதை உங்களிடம் சொல்வார்களா"

"நிச்சயமாக, உங்கள் வணிகத் தலைவரை எங்களுக்கு தெரியும். எங்களுடைய பெயரும் அவருக்குத் தெரியும். அவரை வரவழையுங்கள். அவரைக் கேளுங்கள். நாங்கள் தடுத்து நிறுத்தியதும், இதைச் செய்வது மகாபாபம் என்று சொன்னதும் அவருக்குத் தெரியும்"

வணிகர் அரை நாழிகையில் வரவழைக்கப் பட்டார். உள்ளே படி ஏறினார்.

"அடே விசாரதத்தர், தருமபாலர்" என்று கூவினார். வணக்கம் சொன்னார்.

"வணிகத் தலைவரே, இவர் சொல்வது உண்மையா, உங்களை சித்ரவதை செய்யக்கூடாது என்று தடுத்தார்களாமே"

"ஆமாம், வெகுவாக முயற்சித்தார்கள். அவர்களுடைய கையில் இருக்கின்ற கத்தியை பிடுங்கி கீழே போட்டார்கள். ஆனால் இவர்களை புறம் தள்ளி விட்டு, அவர்கள் முன்னேறி மறுபடியும் எங்கள் கைகளை சிதைத்தார்கள். இவர்கள் மறுபடியும் முன்னேற இவர்களை நோக்கி வாட்கள் நீண்டன. புத்த பிட்சுக்களுக்கு எதிராக வாள் நீட்டப் படாது. ஆனால் கடாரத்தைச் சேர்ந்த அவர்கள் வாளை நீட்டி புத்த பிட்சுவை ஓரமாக உட்கார வைத்து விட்டார்கள்"

"ஆக, இவர்களுடைய எண்ணம் நல்ல எண்ணம் என்கிறீர்களா?"



"நிச்சயமாக இவர்கள் நல்லவர்கள். இவர்களுக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. ஆனால் ஸ்ரீ விஜயம் அமைதியாக இருக்க வேண்டும் அது தான் எண்ணம். இவர்கள் அமைதியான ஒரு தேசத்தில் தான் புத்த மதத்தை பரப்ப முடியும் என்று நினைக்கிறார்கள். புத்த மதத்தை பரப்புவது இவர்களுடைய எண்ணம்"

"இவர்களை கைது செய்து அடைக்கவா, திருப்பி அனுப்பி விடவா" வியாபாரி தலை குனிந்து யோசித்தார்.

"இவர்களால் நமக்கு எந்த கெடுதலும் இல்லை. இவர்களை கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இவர்களுக்கு நம்மை பற்றிய பல விவரங்கள் கொடுத்து, நம்முடைய படைகளை பற்றிய விஷயங்களை கொடுத்து ஸ்ரீ விஜயம் நோக்கி அனுப்பலாம். மிகச் சிறந்த நாவாய்கள் நம்மிடம் இருக்கிறது என்று சொல்லலாம். சோ தேசத்திலிருந்து வந்த நாவாய்களை காட்டலாம்.

சோழ தேசத்து நகருக்குள் ஸ்ரீ விஜய கள்ளிகளாக, கடாரக் கள்ளிகளாக வந்திருக்கின்ற இந்த இருவரும் இன்னும் சிறந்தவர்கள். இவர்களுக்கு நம்முடைய வணிகக் குழு மீது நல்ல அன்பு உண்டு. உண்மையில் இவர்கள் இருவரும் இந்துக்கள். புத்தர்கள் அல்ல. புத்த விகாரையில் தங்கி இருந்தாலும், இறை வழிபாடு செய்கிறார்கள். நாகை பட்டினத்து கோவிலுக்கு அடிக்கடி தானம் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டாயிரம் கழஞ்சு, சினக் கழஞ்சுகள் இவர் கோவிலுக்கு கொடுத்திருக்கிறார்கள்" என்று குருதத்தனை நோக்கி வணிகர் கை காட்டினார்.

"நல்லது, வணிகரின் வாக்கை எடுத்துக் கொள்கிறேன், உங்களை சிறை பிடிக்கவில்லை. நீங்கள் தாராளமாக ஊர் திரும்பி போகலாம். அதற்கேற்ற பருவம் வரும் வரை நாகையில் தங்கி இருக்கலாம், நாகை விகாரம் தாண்டி வேறு எங்கேயும் நீங்கள் நால்வரும் போகக் கூடாது. அங்கேயே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த இரண்டு புத்த பிட்சுக்களும், சங்கிராம விஜயோத்துங்க வர்மனை நேரில் சந்தித்து வெகு நிச்சயம் உள்ளே நுழைந்து ஸ்ரீ விஜயத்தை அழிப்பேன் என்று சொல்லுங்கள், இதை ஆணையிட்டு இருக்கிறேன் என்று சொல்லுங்கள், இதை சபதம் செய்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்.

நீங்கள் போய் வரலாம். என்னுடைய அன்பளிப்பாக சோழ தேசத்து புதிய கழஞ்சுகள்" என்று சொல்லி, சமீபத்தில் புத்தர் சிலையை உருக்கி கொடுக்கப்பட்ட கழஞ்சுகளை கொடுத்தார்.

"இந்த கழஞ்சுகள் புத்தம் புதியவை"

"ஆமாம், பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது"

"முழங்கை உயர புத்தர் சிலை இலங்கையிலிருந்து கொண்டு வந்தோம்"

"ஆமாம், நீங்கள் எடுத்துப் போனதாக கேள்விப் பட்டோம்"

"அந்த சிலையை உருக்கி, அதில் அடித்த காசு இது. போய் சங்கிராம விஜயோத்துங்க வர்மனிடம் சொல்லுங்கள்"

ஆளாளுக்கு இருபத்தைந்து கழஞ்சுகள் கொடுக்கப்பட்டது. அவர்கள் குனிந்து வணங்கினார்கள். விடை பெற்றார்கள்.

"சிறையில் அடைக்க தேவையில்லை என்கிறீர்களா மன்னா"

"இல்லை. இவை வெறும் பதர்கள். பதர்களை சிறையிலிட்டு என்ன செய்வது. நம் எண்ணம் ஸ்ரீ விஜயம் நோக்கி இருக்க வேண்டும். அதற்கு முன்னால் வேங்கியில் நமது குழந்தையை பட்டமளிப்பு விழா செய்ய வேண்டும். வேங்கிக்கு எப்படி போவது என்பது பற்றி இனி யோசிக்க வேண்டும். நாளை காலையில் வேங்கி நோக்கி போக வேண்டும். எனவே இப்பொழுது போய் விட்டு மறுபடியும் இதே நேரம் வந்து சேருங்கள். அப்பொழுது வேங்கி தேசத்து படை எடுப்பை பற்றி விரிவாக பேசுவோம். எப்படி படை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தெளிவாக இருக்கிறது. உங்களிடம் சொல்வது மட்டும் தான் இருக்கிறது"

சபை மௌனமாக இருந்தது.

"அருண்மொழி என்ன நினைக்கிறாய்?"

"எது பற்றி மன்னா"

"இந்த நால்வரையும் விடுவித்தது உனக்கு ஒப்புமையானதா?"

"நிச்சயம் ஒப்புமையானது. இவர்களை வைத்துக் கொண்டு நாம் எதையும் சாதிக்க முடியாது. சிறையில் உண்டு பொழுதை கழித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களை சிறை வைத்ததே



நாம் செய்த பெரிய குற்றமாக இருக்கும். எனவே இவர்களை சந்தித்தோம். விடுவித்தோம் என்பது தான் நல்ல மதிப்பு.

"நீங்கள் சொன்னது போல நாகை விகாரத்தில் இவர்கள் சிறை வைக்கப்படட்டும். இவர்கள் எங்கும் போகக் கூடாது என்று நம்முடைய ஆட்கள் இரகசியமாக காவல் காக்கட்டும். மீறி நகர்ந்தால் மடக்கி உள்ளே இழுத்து போடட்டும்"

"கிருஷ்ணன் ராமன் அவர்களே இந்த வேலையை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல, சபை கலைந்தது.

அவசர அவசரமாக எல்லா தளபதிகளும் அவர்கள் வீடு நோக்கி போனார்கள்.

அரண்மனைக்குள் நுழைந்து பரவையின் அறைக்குள் நுழைந்த பொழுது கட்டிலில் உட்கார்ந்திருந்த வீரமாதேவி எழுந்து வந்து அவரை வழி மறித்தார்.

"என்ன வீரமாதேவி, என்ன கோபம்?"

"நான் கோபமாக இருக்கிறேன் என்று யார் சொன்னது"

"நீ வழிமறிக்கின்ற விதத்திலேயே தெரிகிறது"

"என்னை அழைத்துக் கொண்டு போகப் போவதில்லையா"

"எங்கே"

"போருக்கு"

"எதற்காக"

"ஏன்? எத்தனை போர்களில் நான் கலந்து கொண்டு இருக்கிறேன். இந்த போரில் மட்டும் என்ன குறைவு?"

"குறை இருக்கிறது. உடல்நலம் சரியில்லை. எனவே நீ வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறேன்"

"உங்கள் அருமை தங்கையை நோகாமல் கூட்டி வந்தேனே, அதற்கு உண்டான பரிசா?"

"இல்லையே, நோகாமல் கூட்டி வரவில்லை. கூட்டி வந்த பிறகு நொந்து நூலாகிப் போனாய். உன்னை உயிரோடு பார்ப்போமா என்று பதறி விட்டேன். என்னை விட அதிகம்

பதறியது பரவையும், முக்கோணகிழானடிகளும்"

"நான் கர்ப்பிணியோ என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் நான் கர்ப்பிணி என்று எனக்கு தெரியாது. இது கலைந்து போனதற்கு இப்படிப்பட்ட தண்டனையை கொடுக்காதீர்கள். நான் ஏற்கனவே துக்கத்தில் இருக்கிறேன். நீங்களும் அருகில் இல்லையென்றால் எனக்கு பைத்தியம் பிடித்து விடும்"

"நிச்சயமாக உன்னை வேங்கி தேசத்திற்கு அழைத்துப் போகப் போவது இல்லை"

வீரமாதேவி முகத்தை பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"குந்தவையை போல நீயும் நாடகமாடாதே வீரமாதேவி. உன்னை அழைத்துப் போக விரும்புபவன் நான் என்று உனக்குத் தெரியும். பல போர்களில் உன்னை தயார் செய்து அழைத்துப் போயிருக்கிறேன். இப்பொழுது உன் உடல்நலம் சரியில்லை. உனக்கு வேறு சில வேலைகள் இருக்கின்றன. உன் உடல்நலம் தேறியதும் இடையறாது தஞ்சை பக்கம் சுற்றி வர வேண்டும். பாண்டிய தேசத்தை கவனிக்க வேண்டும். இலங்கையிலிருந்து படைகள் வருகின்றனவா என்று கவனிக்க வேண்டும். அம்மாதிரியான இடங்களுக்கு நீ பயணப்பட வேண்டும். நீ பயணப்படுவதற்கு துணையாக..."

"பரமன் மழபாடியார் இருப்பார். அப்படித்தானே"

"ஆமாம்"

"வயதானவர்களுக்கு துணையாக நான். எனக்கு துணையாக வயதானவர்கள், போருக்கு மட்டும் நீங்கள் கிளம்பி போய் விடுவீர்கள்"

"உன்னால் போர் முனைக்கு வர முடியாது. மறுபடியும் உடல் நலக்குறைவு வந்து சேரும். உன்னை இடைஞ்சலில் மாட்டி விட்டு என்னால் நிம்மதியாக போர் செய்ய முடியாது"

"அப்படியானால் யாரை அழைத்துப் போகப் போகிறீர்கள்?"

"இதுவரை அப்படி ஒரு எண்ணம் இல்லை, ஆனால் நீ கேட்ட பிறகு ஒரு எண்ணம் வருகிறது"

"என்ன?"



"பரவையை அழைத்துப் போனால் என்ன?"

"ஹா. எனக்குத் தெரியும். இந்த மாயக்கள்ளி மயக்கி வைத்திருக்கிறாள் என்று தெரியும்"

"அப்படியா, அப்படி மயக்கி வைத்திருக்கிறேன் என்று அவள் சொன்னாளா, பரவை நீ என்னை மயக்கி வைத்திருக்கிறாயா, என்னோடு போர் முனைக்கு வருவதற்கு ஆயத்தங்கள் செய்திருக்கிறாயா?"

"ஒரு பாவமும் அறியாதவள். போர் முனைக்கு என்னை அழைத்துப் போவீர்கள் என்று கற்பனை கூட நான் செய்ததில்லை. இப்போதும் கூட வேண்டாம் என்றால் நிம்மதியாக இருப்பேன். வர வேண்டும் என்றால் உங்கள் கட்டளைக்கு கீழ்படிந்து வருவேன்"

"வரவேண்டும் பரவை. நிச்சயம் வர வேண்டும். சோழ தேசத்து மகாராணிகள் உறங்கி சுகிப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறதென்று தெரிய வேண்டும். உன்னை வெறும் நடனமணியாக நான் கருதவில்லை. போர் முனையின் கோரத்தை, போர் முனையின் வேகத்தை, ஆத்திரத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டும். உனக்கு துணையாக வீரர்களோடு வைத்தியர்கள் வருவார்கள். அந்த வைத்தியர்களை பார்த்து பேசி, அந்த வைத்திய முறையைப் பற்றி மெல்லியதாகக் கற்றுக் கொண்டு, அந்த வைத்தியர்களை, படைகளின் எல்லா பக்கத்திற்கும் அனுப்ப வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு உனக்கு இருக்கிறது.

இதை எல்லாம் நான் கவனிக்க முடியாது, எனக்கு நேரமில்லை. எனவே, என்னோடு நீ பயணப்படாது, வைத்தியர் குழுவோடு நீ பயணப்படுவாய். அதாவது எனக்கு முன்பே நீ போய்விட வேண்டும். உனக்கும் எனக்கும் மூன்று காத இடைவெளி இருக்கும்"

"நான் எதன் மீது சவாரி செய்ய வேண்டும். குதிரையிலா?"

"இல்லை, யானையில். அம்பாரி போட்டு திரைச்சீலை போட்ட யானையில் நீ வர வேண்டும். அதற்குள் நீ படுத்து உறங்கலாம். வைத்தியம் சம்பந்தப்பட்ட ஓலைகளை படித்து வரலாம். கீழே இறங்கி வைத்தியர்களோடு பேசலாம். என்ன விதமான வேதனைகள்

மறவர்களுக்கு உண்டாகும் என்பதை கேட்டு தெரிந்து கொள்ளலாம். நீ வர வேண்டும் என்பது முக்கியம். இது என் கட்டளை" இராஜேந்திர சோழர் பரவையை விட்டு விட்டு வீரமாதேவியிடம் வந்தார்.

தோளை அணைத்தும் கொண்டார்.

"உன்னை வெறுப்பேற்றுவதற்காக நான் பரவையை அழைத்துப் போகவில்லை. நீ செய்ய வேண்டிய காரியத்தை அவளை செய்யச் சொல்லி இருக்கிறேன். இந்த முறை பெரும் படை வரப் போகிறது. அதற்கு எதிர்ப்பும் கடினமாக இருக்கும்"

"எதிர்ப்பு இருக்காது என்று சொன்னார்களே"

"யார் சொன்னது?"

"போர் வீரர்கள் சொன்னார்கள்"

"எப்படி சொன்னார்கள். வேங்கி இந்நேரத்தில் காலியாகி இருக்கும்"

"விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் ஓடிப் போயிருப்பான். ஜெயசிம்மன் ஓடிப் போயிருப்பான். ஜெயசிம்மன் பதுங்கி இருப்பான் என்றெல்லாம் சொல்கிறார்கள்"

"அப்படி நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது. இல்லாது போகவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனோடு நின்று விட வில்லை. இராஜராஜ நரேந்திரனின் பட்டாபிஷேகத்தோடு முடிந்து விடவில்லை. அதைத் தொடர்ந்தும் போர் இருக்கும்"

"யாரோடு"

"ஒட்டர்களோடு"

"பிறகு"

"...ங்கர்களோடு"

"பிறகு"

"கோசல தேசம்"

"அத்தனை தொலைவு ஏன் போக வேண்டும்?"

"அவர்களெல்லாம் கீழைச் சாளுக்கியத்தை விழுங்க முயற்சிக்



கிறார்கள். மேலைச் சாளுக்கியத்தின் தூண்டுதலுக்கு ஏற்ப உள்ளே வந்து கலவரம் செய்கிறார்கள். தூங்க வொட்டாது செய்கிறார்கள். கீழைச் சாளுக்கிய மக்களை பயமுறுத்துகிறார்கள். எனவே, மேலைச் சாளுக்கியத்தை அடக்கியது போல அவர்களையும் அடக்க வேண்டும்"

"உடனே மேலைச் சாளுக்கியம் நோக்கி திரும்ப வேண்டியது தான்"

"மேலைச் சாளுக்கியம் நோக்கி வேங்கியிலிருந்து திரும்புவதில்லை, நேரே நான் வேங்கிக்கு போகப் போவதில்லை"

"பிறகு"

"அரையன் இராஜராஜனோ, அல்லது உத்தம சோழ மிலாடுடையாரோ, இராஜராஜ பிரம்மராயனோ அதை நோக்கி போவார்கள். நான் அருண்மொழி, வந்தியத் தேவரோடு திரும்பி வேறு பக்கமாக நகர்ந்து திருவள்ளூர் வழியாக மேலைச் சாளுக்கியத்தின் உள்ளே நுழைந்து இரட்டை பாடியை தாக்கி, மானிய கேடயத்தை தாக்கி எரியூட்டி விட்டு, மேலைச் சாளுக்கியத்தின் முதுகெலும்பை உடைத்து விட்டு, மேலைச் சாளுக்கிய மன்னன் இருக்கின்ற இடத்திற்கு நான் கீழைச் சாளுக்கியம் போய் சேர்ந்து விடுவேன்"

"ஆக இரண்டு முனை தாக்குதல்"

"ஆமாம். இரண்டு முனைக்கூட அல்ல. மூன்று முனை. குடகிலிருந்து மனிஜா நமக்காக படை எடுத்து வருவான். அவன் கல்யாணி வரையில் போவான், வழியில் தெரிகின்ற அத்தனை மேலைச் சாளுக்கிய ஊர்களையும் சூறையாடுவான். தீக்கிரையாக்குவான். இந்த முறை மிகக் கடுமையான போர் இருக்கும். மேலைச் சாளுக்கியம் தலை தூக்க வொட்டாது செய்ய வேண்டும். ஜெயசிம்மன் எங்கு தப்பி ஓடினாலும், இழுத்து வந்து சிரம் கொய்ய வேண்டும். இதையெல்லாம் முடிந்த பிறகு தான் பட்டாபிஷேகம். அது நடக்கும்போது வேறு சில விஷயங்களும் நடக்கும்"

"தெரியும், என்னவென்று தெரியும்" வீரமாதேவி பதில் சொன்னாள்.

"என்ன தெரியும்?"

"உங்கள் மகள் அம்மங்காதேவியை அவருக்கு திருமணம் செய்து முடிக்க போகிறீர்கள். மிகச் சிறந்த அரசியல் உறவை ஏற்படுத்தப் போகிறீர்கள். கீழைச் சாளுக்கியத்து மக்களுக்கு அந்த திருமணத்தின் மூலம் நம்பிக்கை ஏற்படுத்தப் போகிறீர்கள், தன் மகளை காப்பாற்ற இராஜேந்திர சோழர் எப்போதும் வருவார், அவர்கள் காப்பாற்ற தாங்களும் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருப்பார்கள். எனவே திருமணத்திற்கு அவளை இப்போதே அழைத்துப் போகப் போகிறீர்களா?"

"இல்லை. அங்கு போய் வெற்றி பெற்ற பிறகு ஓலை அனுப்புவேன். அப்போது அம்மங்கா தேவியுடன் நீயும் வரலாம்" திடமாக அவர் சொல்லி முடிக்க, வீரமாதேவி துள்ளி குதித்தாள்.

உடனே ஓடிப்போய் அவரை இறுக்க கட்டிக் கொண்டாள். உதடுகளில் முத்தமிட்டாள்.

"அதுமட்டுமல்ல, அம்மங்கா தேவியுனுடைய அன்னையார் முக்கோணகிழானடியும் வருகிறார். வீர இராஜேந்திரனும், இராஜ ராஜதித்தனும் வரலாம். அது தவிர மற்ற சகோதரிகளும் வரலாம். எனவே நமது குடும்பத்தில் பெரும்பகுதி அங்கு இருக்கும். தஞ்சையை கிருஷ்ணன் ராமனும், பரமன் மழபாடியாரும் கவனித்துக் கொள்வார்கள்.

ஜடவர்ம சுந்தரபாண்டியன் என்ற என்னுடைய இரண்டாவது இளவல் மதுரையை கவனித்துக் கொள்வான். அவன் அங்கு நின்று சோழ தேசத்தின் எல்லையை பலப்படுத்துவான். எந்த கவலையும் இல்லாமல் வேங்கி தேசத்தை வென்று விட்டு வரலாம்"

"அதற்குப் பிறகு ஒட்டதேசம் போவீர்களே, நானும் வரலாமா"

"தெரியவில்லை, ஒட்டதேசம் நான் போகவா, வேறு யாரையேனும் அனுப்பவா அல்லது ஒட்டர்கள் நம்மீது படை எடுத்து வருவார்களா எதுவும் தெரியவில்லை. வேங்கி தேசம் வரையில் நான் போகிறேன். அது உறுதி.

வேங்கி தேசம் போன பிறகு அம்மங்கையோடு நீயும் வந்து சேர். ஒரு வார கால பயணம். அருமையாக வந்து விடலாம்" அவர் சொல்ல எல்லோரும் சந்தோஷமானார்கள்.

அந்த செய்தி அந்தப்புரம் முழுவதும் பரவியது.



அவர்கள் அம்மங்கா தேவியை அழைத்து வந்து இராஜராஜ நரேந்திரனை சந்திக்க வைத்தார்கள். இராஜராஜ நரேந்திரன் மண்டியிட்டு அம்மங்கா தேவியை வணங்கினான்.

"சோழகுல இளவரசிக்கு என் தாழ்மையான வணக்கங்கள். நான் வெறும் ஆளாய் உங்களை திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. வெற்றி பெற்ற பிறகு உங்களை கைப்பிடிக்க விரும்புகின்றேன். என் வெற்றிக்கு தயவுசெய்து நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். நான் ஒரு நல்ல புருஷனாக உங்களுக்கு இருப்பேன். சோழ தேசத்தின் மீது விசுவாசத்துடன் இருப்பேன்.

தாயாரைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என் தாயாரை இனி ஒருபொழுதும் நான் வேங்கிக்கு அழைத்துப் போகப் போவதில்லை" என்று உறுதிபட தெரிவிக்க, அம்மங்கையின் முகம் மலர்ந்தது.

குந்தவைக்கு செய்தி போயிற்று.

"அப்படியா, திருமணமா, சரி. அதற்கு முன்னால் நான் செத்துப் போகிறேன். திருமணத்தை இன்னும் விமரிசையாகச் செய்யுங்கள்" என்று உரக்கக் கத்தினாள்.

இந்த முறை முக்கோணகிழானடி போய் முன் நின்று கொண்டாள்.

"மிகக் கவனமாகப் பேசவும், இல்லையெனில் நடப்பதே வேறு" என்று பயமுறுத்தினாள்.

"ஆள் ஆளுக்கு எகிறுகிறீர்களே, நான் யாரென்று உங்களுக்குத் தெரியாதா?"

"உன் காலை உடைத்தாகி விட்டது, வாயை மூடிக் கொண்டு இரு. உன் வாழ்க்கையை நீயே உன் தலையில் மண் அள்ளி போட்டுக் கொள்ளாதே" என்று முக்கோணக்கிழானடி சீற, அவள் மௌனமானாள்.

அவளுக்குள் வேறு ஒரு சீற்றம் பொங்கி எழுந்தது. அம்மங்கையை கொன்று விட்டால், புத்தி பேதலித்துப் போனாள். அவளுக்கு யாரையாவது கொல்ல வேண்டும்.

ஆனால் சோழ தேசத்து மகாராணிகள் மிகக் கெட்டிகாரர்கள்.

குந்தவை இருக்கும் இடத்திலிருந்து வெகுதூரம் தள்ளி வேறு ஒரு இடத்தில் அம்மங்கையை குடி வைத்தார்கள். அரண்மனையில் அம்மங்கை இருப்பதாக ஒரு பேச்சு இருந்ததே தவிர அம்மங்கை அந்த அரண்மனையிலேயே இல்லை. அவள் குடந்தைக்கு அருகே உள்ள பழையாரை அரண்மனையில் பாட்டியுடனும், தன் சித்தியுடனும் இருந்து விட்டாள்.

ஆனால் கொல்லுகின்ற வாய்ப்பு சிங்கத்திற்கு மட்டுமா கிடைக்கும். சில சமயம் நரிக்கும் கிடைத்து விடும். அதற்குண்டான சந்தர்ப்பங்களை நரி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.



# 22

"நமது அரசன் நம்மை நிம்மதியாக இருக்க விட மாட்டான் என்று நினைக்கிறேன்"

திண்ணையில் நாற்பது அந்தணர்கள் உட்கார்ந்திருக்க எதிர்பக்க திண்ணையில் திண்டில் சாய்ந்து கொண்டு கால் நீட்டிக் கொண்டிருந்த விஸ்வநாத சாஸ்திரிகள் கண் மூடிக் கொண்டு பேசினார். மிக முக்கியமான விஷயங்களை பேசும் போது அவர் கண்களை மூடிக் கொள்வது வழக்கம்.

"என்ன விஷயம், காலையில் தூதுவர்கள் வந்தார்களே"

"ஆமாம், ஓலை வந்திருக்கிறது. ஓலையில் செய்தி வந்திருக்கிறது"

"என்ன செய்தி"

"நாமெல்லாம் காசிக்கு போக வேண்டுமாம்"

"எதற்காக? அப்படி ஒரு சங்கல்பம் இல்லையே"



"செய்து கொள்ள வேண்டுமாம்"

"சங்கல்பமா"

"ஆமாம்"

"எதற்காக"

"உங்கள் பித்ருக்களுக்கு நீர் கடன் செய்ய வேண்டாமா, இங்கேயே காவிரிக் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தால் நல்லதா. எனவே நீங்கள் கடற்கரை ஓரமாகவே நடந்து வேங்கி தேசம் போய் அங்கிருந்து வேறு பக்கமாக திரும்பி காசி தேசம் போக வேண்டும். காசியில் குளித்து நீராடி பித்ருக்களுக்கு என்றும், தண்ணீரும் வார்த்து, அதே போல இராஜராஜ சோழருக்கும் பித்ரு காரியம் நிறைவேற்றி கங்கை நீரோடு திரும்பி வர வேண்டும்"

"இஷ்டம் இருந்தால் தானே போவேன்"

"உங்களுடைய இஷ்டத்தை யாரும் இங்கு கவனிக்கவில்லை. "உங்களுடைய இஷ்டத்தை யாரும் இங்கு கவனிக்கவில்லை. நீ போக வேண்டும் என்பது" அரசருடைய கட்டளை

"இராஜராஜருக்காகவா"

"இல்லை, உன் தந்தையாருக்கும் தான்"

"என் தந்தை கேட்கவில்லையே"

"இராஜராஜ சோழர் கேட்பாராக இருக்கும். அவர் கேட்கும் பொழுது இராஜேந்திர சோழர் சொல்லி இருப்பாராக இருக்கும். இராஜேந்திர சோழர் உனக்கு கட்டளை இடுகிறார். மாட்டேன் என்றா சொல்லப் போகிறாய்"

"எப்படி முடியும் என்று கேட்கப் போகிறேன்"

"ஏன் முடியாது என்று கேட்பார்"

"அவ்வளவு தொலைவு பயணப்படுவதற்கு நான் என்ன மறவனா, குதிரை வீரனா, நடந்து நடந்து காசி வரை எப்படிப் போவது?"

"உன்னை யாரும் நடந்து போகச் சொல்லவில்லையே"

"பிறகு"

"நல்ல மாட்டு வண்டிகள் வைத்துக் கொள்ளலாம். தேர்

வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்"

"குறுந்தேரில் நின்ற வண்ணம் காசி வரை போக வேண்டுமா"

"வேண்டாம். குதிரையில் போ"

"குதிரை ஓட்டத் தெரியாதே"

"பழக்கப்படுத்திக் கொள்"

"போய்த் தான் ஆக வேண்டுமா"

"உத்தரவு, கட்டளை"

"எல்லோருமா"

"நூறு பேர் போக வேண்டும். மற்ற கிராமங்களிலிருந்தும் அந்தணர்களை சேர்க்க வேண்டும்"

"என்னய்யா இது, எதற்கு காசிக்கு நூறு பேர் போவது, அங்கு போய் எதற்கு நீத்தார் கடன் செய்வது. நீத்தார் கடன் இங்கு செய்தாலும், இந்த திண்ணையில் செய்தாலும் என் தகப்பன் வாங்கிக் கொள்வார், காசிக்கு போக வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லையே"

"உன்னைப் போகச் சொன்னது இராஜேந்திரர், முடிந்தால் மறுத்துப் பார்"

"என்ன காரணம் உண்மையில், நம்மீது என்ன கோபம்"

"உங்கள் மீது ஒரு கோபமும் இல்லை"

"பிறகு"

"அவருக்கு சில காரியங்கள் ஆக வேண்டும்"

"என்ன"

"வேங்கி வரை போவது அவருக்கு எளிது. வேங்கி தாண்டி ஒட்ட தேசம் போவதும், கோசல தேசம் போவதும் அவருக்கு சிரமமான காரியம். அங்கு நிலைமை எப்படி இருக்கிறது, மக்கள் என்னவாக இருக்கிறார்கள். யுத்தம் அங்கு நடைபெறுமா, நடைபெற்றால் வெற்றி பெறுவோமா என்று அவருக்கு பல கேள்விகள் இருக்கின்றன. அந்த கேள்விகளுக்கு யாத்ரீகர்களாக நீங்கள் போய் சுற்றிப் பார்த்து விவரங்கள் சேகரித்து பதில் சொல்ல வேண்டும்"



"கோசல தேசத்திற்கு உளவு பார்க்க போக வேண்டுமா"

"ஆமாம்"

"இதுவா நம் வேலை. இதற்காகவா வேதம் படித்தோம்"

"நீ எதற்கு வேதம் படித்தாய் என்பது பற்றி அக்கறை இல்லை. ஆனால் இது அரசாங்க கட்டளை நிறைவேற்றியாக வேண்டும். நிறைவேற்றினால் இங்கு இரு"

"இல்லையெனில்?"

"வேறு எங்காவது போ"

"எங்கு போவது?"

"மேலைச் சாளுக்கியம் போய் இரு. அங்கு அந்தணர்களுக்கு பெரிய மதிப்பு அல்லது பாண்டிய தேசம் போய் விடு. அங்கேயும் வரவேற்பார்கள்"

"பாண்டிய தேசம் சுடுகாடாக இருக்கிறதாமே"

"போ, உயிரோடு இருக்க வேண்டுமென்றால் சுடுகாடு தான் போயாக வேண்டும். வேறு வழியில்லை. சோழ தேசத்தில் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருக்க உன்னை விடப் போவதில்லை. நூறு அந்தணர்கள், யாரெல்லாம் வருகிறீர்கள். வரமாட்டேன் என்றால் எனக்கு சரியான காரணம் சொல்லுங்கள். நான் கிளம்ப தயாராகி விட்டேன், உங்களில் யார் யார் எப்போது வருவீர்கள் என்று சொல்லுங்கள்"

சபை ஆடிப்போய் மௌனமாய் உட்கார்ந்திருந்தது.

"மறுத்தால் என்ன ஆகும்?"

"என்ன வேண்டுமானாலும் ஆகும்"

"சிரச்சேதம் செய்து விடுவாரா"

"அது செய்தால் நிம்மதி ஆயிற்று. முடிந்து போயிற்று. வேறு ஏதேனும் தண்டனை இருக்கலாம்"

"என்ன தண்டனை"

"உங்கள் நிலங்கள் அத்தனையும் அபகரிக்கப் படலாம். பிச்சை எடுத்து நீங்கள் உண்ணும்படி ஆகலாம். ஏற்கனவே பல பழைய பிரம்ம தேயங்கள் மங்கலங்கள் எல்லாம் வேளான்

வகை நிலங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார். இன்னும் தொடரும். இன்னும் வேகமாகத் தொடரும். ஒரு கிராமத்திலும் ஒரு அந்தணருக்கும் நிலம் இருக்கக் கூடாது என்ற கட்டளை வந்தாலும் வரும். நிலம் நீச்ச இல்லாத பரதேசியாக நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும்"

"அவ்வளவு கொடுமைக்காரனா இராஜேந்திரன்"

"மரியாதையாகப் பேசு, சுற்றி உளவாளிகள் இருக்கின்ற இடம் இது. ஒவ்வொரு அசைவும் இராஜேந்திர சோழனுக்கு போய் சேருகிறது. நீங்கள் மறுத்தால் அதுவும் நீங்கள் சொல்வதற்கு முன்பு போய் சேர்ந்து விடும். எனவே முட்டாள்தனமாக உளறாமல் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து ஒரு நாழிகையில் பதில் சொல்லுங்கள்"

"எப்போது கிளம்ப வேண்டும்"

"நாளை மறுநாள்"

"அங்கே உணவுக்கெல்லாம் என்ன வழி"

மாட்டுவண்டி கொடுப்பார்கள். மாட்டு வண்டியில் அரிசியும், காய்கறியும் வைப்பார்கள். போகிற வழியிலுள்ள ஊர்களில் நெய் வாங்கிக்கொள்ளலாம். அதற்கு கழஞ்சுகள் கொடுப்பார்கள். எந்த கவலையும் இல்லாமல் போய் வரலாம்.உணவு பற்றி கவலை உங்களுக்கு வேண்டியதில்லை.ஆனால் அவ்வளவு தொலைவு நீங்கள் பயணப்பட வேண்டும். முடியுமா என்று யோசனை செய்யுங்கள். முடியாதவர்கள் விலகி விடுங்கள். சரியான காரணம் சொல்லுங்கள்"

"என் தாயாருக்கு உடல் நலமில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் போய் விடுவார்"

"நீ இருந்து என்ன செய்யப் போகிறாய். உன்னுடைய மகன் கவனித்துக் கொள்வான், இது காரணம் இல்லை, நீ கிளம்ப தயாராக இரு"

"என் குழந்தைக்கு இரண்டு வயதாகிறது. அவனுக்கு ஏதேனும் சொல்லிவிட்டு வருகிறேனய்யா"

"ஏதேனும் சொல்லிக் கொடுக்க எத்தனை வருடமாகும்"



"குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும்"

"இதுவும் காரணம் இல்லை. உன் குழந்தைக்கு வேறு யாரேனும் சொல்லித் தருவார்கள், எனவே கிளம்பத் தயாராக இரு"

"எப்போது கிளம்பியாக வேண்டும்" பின்னாலிருந்து ஒரு குரல் வந்தது.

"நாளை மறுநாள்" அவர் பதில் சொன்னார். சட்டென்று கண் விழித்தார். யாரது கேட்டது. எழுந்து நில்லுங்கள்" என்றார்.

கேட்டவன் எழுந்து நின்றான்.

"எந்த ஊர் நீங்கள், உங்களை இதற்கு முன்பு பார்த்ததில்லையே"

"எனக்கு மருவூர்"

"எந்த மருவூர்"

"திருக்காட்டுப் பள்ளி மருவூர்"

"அங்கிருந்து தஞ்சை நோக்கி இவ்வளவு தூரம் வருவானேன்"

"விதை நெல்லும், உழுகலப்பையும் வாங்குவதற்காக வந்தேன். அப்பொழுது இங்கே கூட்டம் நடக்கிறது என்று சொன்னார்கள். ஏதோ சத்சங்கம் போல் இருக்கிறது என்று வந்தேன். இப்படி அரசியல் விஷயம் நடக்கும் என்று தெரியவில்லை"

"உங்கள் கிராமத்தில் எத்தனை அந்தணர்கள் இருக்கிறார்கள்"

"நாற்பது பேர் இருக்கிறார்கள்"

"மருவூர் அந்தணர்கள் மிகக் கெட்டிக் காரர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த நாற்பது பேரும் வந்து சேர வேண்டும். எங்களிடத்தில் நாற்பது அந்தணர்கள் இருக்கிறார்கள். இன்னும் இருபது பேரை தயார் செய்ய வேண்டும். அரசர் நூறு அந்தணர்கள் கேட்கிறார். நூற்றி எட்டு அந்தணராக கிளம்ப வேண்டும். உங்களுடைய பெயர் என்ன?"

"எனக்கு மருவூர் சரபன் என்று பெயர். சரப சாஸ்திரிகள் என்றும் சொல்லுவார்கள்"

"என்ன படித்திருக்கிறாய்"

"யஜுர் வேதம்"

"என்ன கோத்ரம்"

"கௌசிக கோத்ரம்"

"என்ன தொழில் நடக்கிறது"

"வேத பாடசாலை தான். அதற்கு கிராம மக்கள் காசு கொடுக்கிறார்கள். பிரபுக்கள் வீட்டிற்கு அழைத்து வேதம் ஓதச் சொல்லி தங்கமாகவும், உடையாகவும், நெல்லாகவும் தருகிறார்கள். அதைத் தவிர என்னிடம் நல்ல நிலம் இருக்கிறது. காவிரியும், கொள்ளிடமும் பாய்கின்ற இடம். அதனால் வாய்க்கால்களுக்கு கவலையே இல்லை. எல்லா இடத்திலும் நீர் பாய்கிறது. நெல் நன்கு விளைகிறது. அதுதான் அடிப்படையான வேலை. வேதம் ஓதுதல் உபரி"

"ஆக, அடிப்படையில் விவசாயி என்று சொல்லுங்கள்"

"அப்படித்தான் வாழ்க்கை இருக்கிறது"

"கிளம்பத் தயாராக இருங்கள். இப்பொழுதே போய் நாற்பது பேரை கூட்டிக் கொண்டு வாருங்கள்"

"நிச்சயம் செய்கிறேன்" அவன் கீழே இறங்கிப் போனான்.

"இராஜேந்திரர் இப்படி சொல்லி விட்டாரே என்று வருத்தமில்லையா?" வேறொருவர் மடக்கி கேட்டார்.

"வருத்தப்பட்டு என்ன பயன், வந்தது வந்து விட்டது. வந்ததை செவ்வனே செய்ய வேண்டும். அதைத்தவிர இவர் சொல்வதைப் போல நாம் போரிடப் போகவில்லை. வெறுமே யாத்திரை போகப் போகிறோம். காசி தேசத்துக்கு போக வேண்டும் என்று ஆசைப்பட்டால் போக முடியுமா. இப்பொழுது அந்த வாய்ப்பு வந்திருக்கிறதே. தாராளமாகப் போகலாம். போய் நீத்தார் கடன் செய்யலாம்.

அதுதவிர அங்குள்ள கலாசாலைகளில் புதிய பாடங்கள் கற்கலாம். சந்தோஷமாக வரலாம். ஏன் கவலைப்பட வேண்டும். காசிக்குப் போனால் உயிர் போய் விடுமா. இங்கிருந்தாலும் உயிர் போகும். எங்கிருந்தாலும் சாவு வரும். காசிக்கு போனால் செத்துப் போய் விடுவோம் என்று ஏன் பயப்பட வேண்டும்" என்று அவன் சொல்ல, அந்தத் தலைவர் முகம் சுருக்கி அவனையே பார்த்தார்.

"என் பெயர் விஸ்வநாத சாஸ்திரிகள்"

"நன்கு தெரியும். உங்களுடைய வேத கானத்தை காது



குளிர கேட்டிருக்கிறேன். நீங்கள் பாடம் சொல்லும் அழகை வியந்திருக்கிறேன். என்னை உங்களுக்குத் தெரியாது" என்று பவ்யமாக பணிந்தான்.

"சரி போய் வாரும். விதை நெல் வாங்கி விட்டீரா"

"அனுப்பி ஆயிற்று" சரபர் பணிவாக பேசினார்.

"உழுகலன்"

"எடுத்துப் போகச் சொல்லி இருக்கிறேன். நானும் பின்னாலேயே போய் விடுவேன்"

"நல்லது போய் வாரும். நாளை மறுநாள் காலையில் இந்த இடத்தில் நீங்கள் இருக்க வேண்டும்"

"நிச்சயம் வருகிறேன்" அவன் சொல்லி விட்டு வேகமாக நகர்ந்தான்.

"மருவூர், மருவூர் சரபன். இவருக்கு மருவூர் தானா என்று சந்தேகமாக இருக்கிறது"

"ஏன்?"

"இவன் இராஜேந்திர சோழனின் உளவாளி. நீங்களெல்லாம் முணுமுணுத்தது இன்று இரவு இராஜேந்திர சோழருக்கு போய் விடும். எனவே மேற்கொண்டு உளறாமல் என்ன செய்ய வேண்டும் என்று யோசனை செய்யுங்கள். இதற்கு மேலும் உளவாளிகள் இங்கு இருக்கலாம்" என்று சொல்ல, அவர்கள் ஒருவரை ஒருவர் பரிதாபமாக பார்த்துக் கொண்டார்கள்.

உட்கார்ந்திருந்த அத்தனை பேருமே உளவாளிகளாய் அவருக்குப் பட்டன.

அரையன் இராஜராஜன் திருவொற்றியூர் வந்து அடைந்து விட்டதாக அவர்களுக்கு செய்தி வந்தது. திருவொற்றியூரை கைப்பற்றி விட வேண்டும் என்று அவர்கள் துடிதுடிக்க, அரையன் இராஜராஜன் திருவொற்றியூருக்கு முன்பு பாடியில் மிக அழகாக தன் படைகளை நிற்க வைத்து திருவொற்றியூர் கோவிலில் தன் அலுவலகத்தை திறந்து விட்டான். அங்கிருந்தபடி மக்களோடு பேசிக் கொண்டிருக்கிறான். படைகள் எல்லா இடங்களிலும் பரவி

இருக்கின்றன. ஒரு ஊதுகுழல் ஓசையில் படை ஒன்று திரண்டு விடும் என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலை சாளுக்கியர்கள் மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். இவ்வளவு விரைவாக எப்படி வர முடியும். நாம் வருவோம் என்று தீர்மானித்து முன்னதாக அனுப்பி இருக்கிறார்கள். அப்படி வந்த அரையன் இராஜராஜன் ஏன் உள்ளே வரவில்லை. ஏன் தாக்கவில்லை. தாக்குவதற்கு பயமா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று யோசித்தார்கள்.

சிறுதேர்கள் பல நூறு இருப்பதை தெரிந்து கொண்டார்கள்.

இரண்டு நாளில் வேங்கியை அடைந்து விட முடியும் என்று அவர்களுக்கு கணக்கு புரிந்தது. அரையன் இராஜராஜன் காத்திருக்கிறான் என்றால் அப்பொழுது இன்னும் அதிகமான படைகள் வரப் போகிறது என்று அர்த்தம். அரையன் ராஜராஜன் அங்கு காத்திருந்து விட்டு, மற்ற படைகளோடு சேர்ந்து கொண்டு உள்ளே நுழையப் போகிறான் என்று அர்த்தம் என்பது புரிந்து விட்டது. எனவே, அவர்கள் கீழைச் சாளுக்கியத்தின் எல்லையில் இருந்தார்கள். பிறகு மெல்ல பின் வாங்கினார்கள்.

இன்னும் முன்னேறி வரட்டும். வேங்கிக்குள் நுழையாமல் அடிப்போம் என்று சொல்லி வேங்கியின் வழியை மறித்துக் கொண்டார்கள்.

உள்ளே எல்லா வீரர்களுக்கும் அவரவர் உயிர் பற்றிய கவலை அதிகம் இருந்தது.

ஆறாவது முறையாக வில் வளைத்து அம்பு தொடுத்து விடுகிற பொழுது கட்டை விரலில் நச்சென்று அடிவாங்கிக் கொண்டான். வில்லை கீழே போட்டு துடித்தான்.

"வில்லை உறுதியாக பிடித்தால் தான் அடி வாங்காமல் இருக்கலாம். உங்கள் கை நடுங்குகின்றன. வில்லை நீங்கள் உறுதியாக பிடிக்கவில்லை. வில்லை அசைக்கிறீர்கள். அதனால் தான் அடி வாங்கு கிறீர்கள்"

"கைக்கு உறை போட்டுக் கொள்ளலாமா" அந்த இளைஞன் கேட்டான்.



"உறை போட்டுக் கொண்டாலும் அடி விழும். இப்பொழுது வெறும் கையை வைத்துக் கொண்டு கதறுகிறீர்கள். அப்பொழுது உறையை கூட்டி விட்டு கதறுவீர்கள். உறுதியாகப் பிடியுங்கள்"

அந்த தலைமைத் தளபதி சொல்லிக் கொடுக்க, விஷ்ணுவர்த்தன [illegible]த்தன் என்கிற அந்த பதினெட்டு வயது இளைஞன் வேண்டா வெறுப்போடு வில்லை எடுத்தான். விரலில் அடிபடக் கூடாது என்று விரலை மடித்து வைத்துக் கொண்டான். காது வரை நாண் இழுக்கச் சொன்னார்கள். காதுவரை நாண் இழுத்தான். விட்டான். விடும் பொழுது கை மேலே தூக்கிற்று. நேரே போக வேண்டிய அம்பு [illegible] தப்பி வானம் நோக்கிப் பறந்தது.

வீரர்கள் நொந்து போனார்கள்.

"உங்களுக்கு கற்றுக் கொள்வதில் விருப்பம் இல்லை. கையில் [illegible] அடிபடாமல் இருக்க வில்லை தூக்கி விட்டீர்கள். அம்பு எங்கோ [illegible]ரண்டு பனை மர உயரத்திற்கு போகிறது. எதிரியை எப்படி சமாளிப்பீர்கள். எதிரி மீது எப்படி அம்பெய்வீர்கள். உங்கள் கைகளுக்கு பலம் வேண்டும். எனவே தினசரி இரும்பு எடையை தூக்குங்கள். மணல் மூட்டையை குத்துங்கள். அப்பொழுது சரியாக வரும்.

இந்த பயிற்சி நாங்கள் தருவதற்கில்லை. கைகளுக்குண்டான பயிற்சியை மல்யுத்த வீரர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்.

அவர்கள் மெல்ல வணங்கி விடை பெற்றார்கள்.

"இப்படிப்பட்ட இளைஞனா நமக்கு மன்னன்" என்று அந்த கீழைச் சாளுக்கிய வீரர்களுக்கு துக்கமாக இருந்தது.

"வில் வித்தை முடிந்ததா" தாய் கேட்டாள்.

"அற்புதமாக முடிந்தது. எல்லா உருவ பொம்மைகளையும் தகர்த்து விட்டேன். எனக்கு பெரிய மரியாதை" அவன் கூசாது பொய் சொன்னான்.

அவன் தாய்க்கு அவன் மீது நம்பிக்கை இல்லை.

"இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்"

"ஓய்வு எடுக்க வேண்டும். ஓய்வு எடுக்கும் முன்பு மந்திரியிடம் பேச வேண்டும்" என்று சொன்னான்.

அவனுக்கு தாய் உணவு பரிமாறினாள். கீழைச் சாளுக்கியத்து

மந்திரி ஒருவர் வாசலில் வந்து நின்றார். அவரை வரவழைத்தான் அருகே உட்காரச் சொன்னான். குனிந்து இரகசியம் பேசினான்.

"கீழைச் சாளுக்கியத்திலிருந்து தப்பித்து போக வேண்டுமென்றால் எங்கு போக வேண்டும்" என்று கேட்டான்.

அவர் வியப்போடு அவனை பார்த்தார்.

"கண்களை அதிகம் விரிக்காதீர்கள்.மௌனமாக உங்களுக்கு தெரிந்ததை சொல்லிக் கொடுங்கள். இராஜேந்திர சோழர் படை எடுத்துவரப் போவது உறுதியாகி விட்டது. கீழைச் சாளுக்கியத்திலிருந்து தப்பித்து போக வேண்டுமென்றால் எங்கு போக வேண்டும்"

"மானியகேடயம் போகலாம். மானிய கேடயம் மேலைச் சாளுக்கியத்தின் தலைநகரம். அது மிக பலமான இடம். கட்டுக் காவல் அதிகம். கோட்டைகள் அதிகம். அங்கு போய் விடலாம்"

"மானிய கேடயத்தில் நம்மை மதிப்பார்களா"

"நீங்கள் கீழை சாளுக்கியத்து மன்னர். உங்களுக்கு மதிப்பு இல்லாமல் இருக்குமா, உங்களோடு உறவு கொள்ள வேண்டும் என்று தானே பலநேரம் விரும்பியிருக்கிறார்கள்"

"அப்படி மானிய கேடயம் போகாமல் வேறு எங்காவது போக வேண்டுமென்றால் எங்கே போக வேண்டும்"

"இன்னும் நகர்ந்து கல்யாணியிடம் போய் விடலாம். கோசலை தேசத்தின் எல்லையில் இருக்கிறது"

"கல்யாணி வரை இராஜேந்திரன் வரமாட்டான் அல்லவா"

"வருவதற்கு வாய்ப்பே இல்லை"

"வங்காளம் பக்கம் போனால் என்ன, ஒட்டர்கள் நமக்கு சிநேகம் தானே, அவர்கள் துணையோடு வங்காளத்திற்குள் நுழைந்தால் என்ன"

"மகிபாலன் உங்களை எப்படி வரவேற்பான் என்று தெரியவில்லை. வங்காளத்தின் பக்கம் போவதற்கு இராஜேந்திரன் முயற்சி செய்து கொண்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது"

"ஏன் வங்காளத்திற்கு வரவேண்டும்"

"கங்கையில் குளிக்க வேண்டுமாம். அதற்காக வருகிறானாம்"



"சரியான ஆண்டியாக இருப்பார் போலிக்கிறதே"

"ஆமாம். அரசனும், ஆண்டியும் கலந்தவன். அவன் அரசனாக இருந்தால் கொடுமையாக இருப்பான். ஆண்டியாக இருந்தால் மிக அன்பானவனாக இருக்கிறான். இரண்டும் கலந்தவன் அவன். அவனை நாம் பகைத்துக் கொண்டது தவறு"

"என்ன பழைய பல்லவியையே பாடுகிறீர்கள். என்ன செய்ய"

"நீங்கள் மேலைச் சாளுக்கியர் ஜெயசிம்மனை நம்பி உங்கள் தமையனை புறக்கணித்து விட்டு, இராஜராஜ நரேந்திரனை துரத்தி விட்டீர்கள்"

"நான் எங்கே துரத்தினேன். அவனல்லவா ஓடிப் போனான்"

"அவனை ஒரு மாதிரியான நிர்கதியில் வைத்தீர்கள், நீங்கள் தான் பட்டம் கொள்ளப் போகிறேன் என்று ஊருக்கு சொன்னீர்கள், அப்பொழுது இராஜராஜ நரேந்திரன் இங்கிருந்து என்ன செய்வான். எனவே இங்கிருந்து கிளம்பி தன்னுடைய மாமனிடம் போய் விட்டான். மாமனோடு மறுபடியும் வருவான்"

"அவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று நினைக்கிறீர்களா"

"நாம் போர் செய்யும் முறையை பார்த்தால் அப்படி இல்லை, மேலைச் சாளுக்கியம் பலமான படைதான், ஒட்டர் படையும் இன்னும் வேகமாக இருக்கிறது"

"கீழைச் சாளுக்கியப் படை எப்படி இருக்கிறது"

"கேவலமாக அல்லவா இருக்கிறது. அவர்கள் எப்படி நமக்காக சண்டை போடுவார்கள். அப்படி சண்டை போட்டால் வெறுமே போவார்களா. நம் தேசத்தை சூறையாடிவிட்டுத் தானே போவார்கள். நம்முடைய அரிசியும், பருப்பும் வருடா வருடம் கொடு என்று கப்பம் கட்டத் தானே சொல்வார்கள். நாம் அவர்களுக்கு கொடுத்துவிட்டு ஈரத்துணியை மேலே போட்டுக் கொள்வதா"

"வேறு என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள்"

"இராஜேந்திரனிடம் சரணடைந்து விடுங்கள்"

"பிரம்பால் அடிப்பாராமே"

"அடித்தால் வாங்கிக் கொள்ளுங்கள்"

"உன்னைப் போய் கேட்கிறேனே. அறிவிருக்கிறதா. என்ன பிரம்பால் அடி வாங்கு என்று சொல்லுகிறாயே"

"உங்களை பிரம்பால் அடிக்க மாட்டார். நீங்களா பயப்படுகிறீர்கள். உங்கள் தந்தை விமலாதித்தன் குந்தவையி புருஷன். அதனால் விமலாதித்தருக்கு கொடுக்க வேண்டி மரியாதையை உங்களுக்கு கொடுப்பார். நீங்கள் ஆட்சிக இராஜராஜ நரேந்திரனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கு

"அப்படி விட்டுக் கொடுத்து விட்டால் என்னை நிச்சயமா விட்டு விடுவார்களா"

"நிச்சயமாக விட்டு விடுவார்கள். ஆமாம். நீங்கள் ஏ ஆட்சியை விட்டுக் கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்"

"எதற்கப்பா ஆட்சியும், அடியும், வில் எடுத்து அம்பு தொடுத் அடிக்கச் சொல்லுகிறார்கள். கட்டை விரலில் சுளீர், சுளீர் என் அடி விழுகிறது. நான் பாட்டுக்கு உட்கார்ந்து கொண்டு ம அருந்திவிட்டு மெல்ல மங்கையரோடு பேசிக் கொண்டிருப்பே போது எவனைத் தொட்டாலும் கட்டை விரல் வலிக்கிறது"

"நீங்கள் போக பாக்கியசாலி ஆகிவிட்டீர்கள்"

"என் ஜாதகம் அப்படித்தான். இடைமறாத போகம் என்னுடை வாழ்க்கை. இதைத்தான் என்னுடைய ஜாதகம் சொல்கிறது"

"சரி என்ன செய்யப் போகிறீர்கள்"

"அதற்குத்தான் உன்னிடம் ஆலோசனை கேட்டேன். நீ இராஜே திரனிடம் சரணடைந்து விடு என்று சொல்கிறாய். இப்பொழு மேலை சாளுக்கிய மந்திரியிடம் ஆலோசனை கேட்பேன். அவ என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்பேன்"

"எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னை காட்டிக் கொடுக்காதீர்கள்"

"உன்னை ஏன் காட்டிக் கொடுப்பேன். உன்னையு அழைத்துக் கொண்டல்லவா போகப் போகிறேன்"

"எங்கே?"

"மேலை சாளுக்கியம்"

"நிச்சயம் வருகிறேன்" அந்த அதிகாரி தலை வணங்



விட்டு நகர்ந்தார்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன் சரியாக இல்லை என்று சுருக்கமாக அவன் குறைகளைச் சொல்லி, சோழ தேசம் நோக்கி ஒரு ஓலை போயிற்று.

"கேள்வியே அபத்தம். இராஜேந்திர சோழன் வந்தால் எங்கு போவது என்று கேட்கிறீர்கள். இது தவறு. இராஜேந்திர சோழன் வந்தால் எதிர்த்து சண்டையிட வேண்டும். நீங்களா சண்டையிடப் போகிறீர்கள். நீங்கள் யானையின் மீது உட்கார்ந்து கொண்டு சண்டையை வேடிக்கை பாருங்கள். மேலைச் சாளுக்கிய வீரர்கள் தான் முதலில் வருவார்கள். பிறகு ஒட்டர்கள் வருவார்கள். பிறகு கலிங்கர்கள் வருவார்கள். இத்தனைப் பேரை தாண்டித் தான் மேலைச் சாளுக்கிய வீரர்களை, உங்களை தொட முடியும். அதற்கு முன்பு அவனை பஸ்பமாக்கி விடுவோம்"

"இராஜேந்திரன் மிகப் பெரிய படையோடு வருகிறானாமே"

"எவ்வளவு பெரிய படை வந்தால் என்ன, அவ்வளவு தூரம் ஆடி, அசைந்து வந்து எல்லோரும் ஓய்ந்து இருப்பார்கள். நாம் புத்தம் புது ஆட்களாக மின்னிக் கொண்டிருப்போம். நம்முடைய தாக்குதலை ஒருநாளும் அவர்களால் சமாளிக்க முடியாது.

நம்முடைய பக்கம் மிகப் பெரிய வில் வீரர்கள் இருக்கிறார்கள். ஒரே நேரத்தில் மூன்று அம்புகள் பறக்கும்"

"ஒரே நேரத்தில் மூன்று அம்புகளா, கட்டை விரலில் அடிபடாது"

"பலர் கட்டை விரலில் அடிபடும் என்று கட்டை விரலில் பாதி துண்டித்து எடுத்து விட்டார்கள்"

"அய்யோ, எப்படி துண்டித்தார்கள்"

"தாங்களாகவே கத்தியை சுழற்றி ஓங்கி அடித்திருக்கிறார்கள். விரல் துண்டாகிப் போய் விட்டது"

"பைத்தியக்காரர்களா"

"இல்லை, வீரர்கள். வெற்றி பெறுவதற்கு எதையும் தியாகம் செய்ய துச்சமாக இருக்கிறவர்கள்"

"மேலைச் சாளுக்கியத்தில் எல்லோருக்குமே கட்டை விரல்

இருக்காதா"

"வில் வீரர்களுக்கு இருக்காது, ஈட்டி எறிபவர்களுக்கு கட்டை விரல் தான் முக்கியம்"

"ஆமாம். நாளைக்கு அந்த பாடம் வேறு இருக்கிறது. ஈட்டி எறிய வேண்டுமாம். கழுத்து, தோள்பட்டை, முதுகு எல்லாம் வலிக்கிறது"

"எறிந்து, எறிந்து பழகினால் வலி போய் விடும்"

"புரண்டு படுக்க முடியவில்லை. எங்கு வலி போகிறது இன்னும் அதிகமாகிறது"

"ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும்"

"சரி, இராஜேந்திரன் வந்தால் தப்பித்துப் போக எது சரியான மார்க்கம். கல்யாணியா, மானிய கேடயமா"

"வங்காளம் நோக்கி, மகிபாலனை நோக்கி போய் விடுங்கள் மகிபாலன் உங்களை காப்பாற்றுவார். கோசலை தேசத்திற்கு உள்ளே போய் விடுங்கள்"

"என்னை தப்பித்து போகவா சொல்கிறீர்கள். அது கோழைத்தனம் என்கிறார்களே"

"ஆமாம். அது கோழைத்தனம் தான், தப்பித்துப் போக வழி கேட்டால் சொல்லித் தர வேண்டுமல்லவா. நாங்கள் இங்கே பார்த்துக் கொள்கிறோம்"

"ஒருவேளை நீங்கள் ஜெயித்து விட்டால் அப்பொழுது நான் மறுபடியும் வரலாமா"

"யோசித்து தான் சொல்ல வேண்டும்"

"ஏன் யோசிக்க வேண்டும்"

"இங்கு அரசராக வேறு யாரையேனும் நியமிக்கலாம்"

"வேறு யாரை"

மேலைச் சாளுக்கியத்திலிருந்து ஜெய சிம்மனுடைய மகனை இங்கு நியமிக்கலாம்"

"ஜெயசிம்மருடைய மகன் என்னுடைய நாட்டை ஆள்வதா"

"உங்களுடைய நாட்டை நீங்கள் காப்பாற்றவில்லை.



அப்பொழுது யார் ஆண்டால் என்ன?"

"என்னய்யா இது, கொடுமையாக இருக்கிறது. ஆட்சியில் நிம்மதியாக அமர யாருமே யோசனை சொல்ல மாட்டேன் என்கிறீர்களே"

"போர் ஒன்று தான் வழி. நீங்கள் முன்னேறி நம் வீரர்களோடு சேர்ந்து கொண்டு இராஜேந்திரரை எதிர்க்க தயாராகுங்கள்"

"ஆஹா, நிச்சயம் செய்கிறேன். நாளைக்கே நான் எல்லைக்கு போகிறேன்" அவன் வீறு கொண்டு எழுந்தான். அவனை அவர் வியப்பாகப் பார்த்தார்.

"போங்கடா சோம்பேறிகளா, நான் ஏன் இங்கு இருக்கிறேன். நாளையே கிளம்பி போய் விடுகிறேன்" என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

முகத்தில் வீரம் இருந்தது. உள்ளே நடுக்கம் இருந்தது. பொய்யானவர்கள் நன்றாக நடிப்பார்கள். அவன் திறம்பட நடித்தான். மேலைச் சாளுக்கிய அதிகாரி சற்று குழம்பினான்.

"அந்த இளவரசன் உறுதியாக இருக்கிறான், நிச்சயம் போரில் கலந்து கொள்வதாக வாக்கு கொடுத்திருக்கிறான். வீரமாக பேசுகிறான். கட்டை விரலையும் துண்டித்துக் கொள்ள தயாராக இருக்கிறான்" என்று ஜெயசிம்மனிடம் சொன்னார்.

ஜெயசிம்மன் ஆழ்ந்து யோசனை செய்தான்.

சரி என்று தலை அசைத்தான்.

மேலைச் சாளுக்கிய மன்னனான ஜெயசிம்மனுக்கு விஷ்ணு வர்தன விஜயாதித்தன் மன்னனாக வருவது விருப்பமில்லை. கீழைச் சாளுக்கியத்திற்கு தானே மன்னனாக வேண்டும் என்று ஆசைப்பட்டான். மேலைச் சாளுக்கியத்தில் தன் மகனை உட்கார வைத்து விட்டு, கீழைச் சாளுக்கிய போரில் ஜெயித்தவுடன் இங்கேயே தன்னுடைய அரசாங்கத்தை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த இடத்திலிருந்து பண்டங்களை மேலைச் சாளுக்கியம் அனுப்ப வேண்டும்.

கீழைச் சாளுக்கியம் போல வளமை மிக்க, நதி நீரம் மிக்க, நாகரீகம் மிக்க, அழகிய பெண்கள் மிக்க, உறுதியான எருதுகள்

மிக்க, மடி பெருத்த பசுக்கள் மிக்க, பண்டிதர் மிக்க ஒரு தேசம் இல்லவே இல்லை. ஆனால் இராஜேந்திர சோழனை எப்படி தடுத்து நிறுத்துவது. ஒட்டர்களோடு பேச வேண்டும் என்று தீர்மானித்தான்.

எனக்கென்ன தருவாய் என்று ஒட்டர்கள் கேட்பார்கள். கீழைச் சாளுக்கியத்தை இரண்டாகப் பிரித்து மேல் பகுதியை தருகிறேன். கீழ்ப்பகுதியை நான் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்ல வேண்டும். ஒட்ட தேசம் சற்று விரிவாகும். விரிவான ஒட்ட தேசத்தை முதலில் கொடுத்து விட்டு, அவர்கள் பலம் குன்றிய போது அடித்து அந்த இடத்தையும் பிடித்துக் கொள்ள வேண்டும். சோழர்களின் பல இடங்களை அப்படித்தான் பிடித்துக் கொண்டாயிற்று.

மானிய கேடயம் அடிபட்டது. மிகவும் சிரமமாயிற்று. அந்த இடத்தையெல்லாம் மறுபடியும் உள்ளே புகுந்து தக்க வைத்துக் கொள்ளவில்லையா, சோழ வீரர்கள் போன பிறகு மறுபடியும் ஜெயித்து விடவில்லையா? அதே போல ஒட்டர்கள் நகர்ந்த பிறகு அவர்களை ஓட ஓட விரட்டலாம். இப்போதைக்கு ஒட்டர்களோடு பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ள வேண்டும். நல்லபடியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒட்டர்களைத் தான் முதலில் அனுப்ப வேண்டும்.

"முதலில் போவதா நாங்கள் மட்டுமா, என்னை என்ன பைத்தியக்காரன் என்று நினைக்கிறாயா" ஒட்ட தேசத்து அரசன் உரக்கக் கத்தினான்.

அப்படி நடக்காது, ஐம்பது ஐம்பது வீரர்களாக முதல் ஐம்பது மேலைச் சாளுக்கிய வீரர்கள், அடுத்த ஐம்பது ஒட்டர்கள். பிறகு மேலைச் சாளுக்கியம், பிறகு ஒட்டர்கள் அப்படி ஐம்பது ஐம்பது பேராக கலந்து அனுப்பலாம். ஒற்றுமையாக உழைத்தால் வெற்றி நிச்சயம். இல்லையேல் இரண்டு பேரும் அடிபட்டு சாக வேண்டியது தான்.

உங்களைப் போல ஒரு ஆள் முன்னே போய் நீ பின்னால் வா என்ற கதையெல்லாம் நடக்காது. இப்படித்தான் நடக்கும்" என்று அவன் சொல்ல, வேறு வழியில்லாமல் ஜெயசிம்மன் என்கிற மேலைச் சாளுக்கிய மன்னன் அதே விதமாக உடன்படிக்கை செய்து கொண்டான்.



ஆனால் அன்று மாலை அவனுக்கு உளவாளிகளிடமிருந்து செய்தி வந்தது.

ஒன்பது லட்சம் வீரர்களோடு கிடுக்கித் தாக்குதலாக மானிய கேடயத்தையும், வேங்கியையும் ஒரு சேர இராஜேந்திரன் தாக்குவான். குடகிலிருந்து மனிஜா கிளம்பி விட்டாள் என்ற செய்தியும் வந்தது.

அவன் திகைத்துப் போனான்.

வேறு வழியில்லை. ஒட்டனை அனுப்புவது போல அனுப்பிவிட்டு கீழைச் சாளுக்கியத்தை அடுத்த வரிசையில் நிற்க வைத்து விட்டு தன்னுடைய குழுக்களோடு இந்த இடத்தை விட்டு நகர்ந்து விட வேண்டியது தான். போகும் போது விஷ்ணுவர்தன விமலாதித்தனையும் அழைத்துக் கொண்டு போய் விட வேண்டும். அது ஒரு பகடைக்காய்.

ஒருவேளை நம்மை ஆட்சியில் உட்கார கீழைச் சாளுக்கிய மக்கள் மறுத்தாலும் அவனை மறுக்க மாட்டார்கள். அவனை முன் நிறுத்தி நாம் ஆட்சி செய்யலாம். ஆக அந்த பகடைக் காயை இழப்பது நல்லதல்ல.

ஒன்பது லட்சம் வீரர்கள் மானிய கேடயம் நோக்கி வருவார்கள். என்ன செய்வது என்ன செய்வது தவித்தான்.

அன்று இரவு விஷ்ணுவர்தன விஜயாதித்தனை அழைத்தான்.

"நான் சொன்னதும் கிளம்ப தயாராக இருக்க வேண்டும். உன் தாயைப் பற்றி கவலைப்படாதே. என்னோடு பயணப்பட வேண்டும்"

"எங்கே?"

"கல்யாணிக்கு கிளம்பி விட வேண்டும்"

"அப்போது இங்கு போர் இல்லையா"

"நிச்சயம் போர் இருக்கும்"

"அதில் நான் இல்லையா"

"நீ எதற்காக போர் செய்ய வேண்டும். அதை நான் கவனித்துக் கொள்கிறேன்"

"நீங்கள் எப்படி கவனித்து கொள்வீர்கள்"

"கீழைச் சாளுக்கிய வீரர்களையும், ஒட்ட வீரர்களையும்

அனுப்புவேன். இந்த வேங்கியை நான் காவல் காப்பேன்"

"அப்பொழுது நான் மட்டும் போய் விடலாமா"

"நிச்சயம் போய் விடலாம். நீ முக்கியம். உன் உயிர் முக்கியம். உன்னைப் பார்த்தால் விமலாதித்தரின் இன்னொரு மகன் இராஜராஜ நரேந்திரன் வெட்டிக் கொல்வான். இராஜேந்திரன் பார்த்தால் தூக்கில் தொங்குவது நிச்சயம். எனவே இவர்கள் கண்ணில் படாமல் நீ போய் விடு. உன்னை நான் காப்பாற்றுகிறேன். இந்த வேங்கியை என்னிடம் விட்டு விடு, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்ல, அவன் துள்ளி குதித்தான்.

மேலைச் சாளுக்கிய மன்னனை கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தான். ஓடிப்போய் அந்தப்புரத்து கதவுகளை சாத்திக் கொண்டான்.

"வாருங்களடி வாருங்கள். கொண்டாடுவோம்" என்று கூத்தடித்தான்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன் விமலாதித்தனுடைய இரண்டாவது பிள்ளை மறுநாள் காலையில் தட்டி எழுப்பப்பட்டு குதிரையில் அமர்த்தப்பட்டு அரை தூக்கத்தோடு நாடு கடத்தப்பட்டான்.

அவன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்று அவனுக்கு மூன்று நாட்களுக்கு பிறகு தான் தெரிந்தது.




**நூ**ற்றி எட்டு அந்தணர்கள் நான்கு நான்கு பேராக வரிசையாக நின்றார்கள். குங்குமம் கலந்த பூசணிக்காய் வெட்டப்



பட்டது. ஒரு வீட்டின் கொல்லையில் இருந்த வாழை மரத்தை அடியோடு வெட்டி குலையோடு கொண்டு வந்து வெளியே போட்டார்கள். பலிகள் முடிந்து விட்டன.

ஆடோ, கோழியோ பலியிடப்படுவதில்லை. உயிர்வதை கூடாது என்பது அவர்கள் கொள்கை. இதற்கு முன்னர் யாகத்தில் பசுக்களையும், கன்றுகளையும் குதிரைகளையும் வெட்டி பலி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதெல்லாம் இல்லை. பௌத்த மதம் தென் இந்தியாவில் பரவிய பிறகு பிராமணர்களுக்கும் அந்த அஹிம்சை உணர்வு அதிகரித்து விட்டது.

அவர்கள் சொல்வது சரிதான். எதற்காக இந்த உயிர்பலி என்று கைவிட்டு விட்டார்கள்.

மருவூரிலிருந்து வந்த அந்தணர்கள் பெண் குதிரைகளோடு வந்திருந்தார்கள். தஞ்சையிலுள்ள அந்தணர்கள் யாருக்கும் குதிரைகள் இல்லை. அவர்களுக்கு குதிரைகள் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

"இராஜேந்திர சோழரை பார்க்க முடியுமா" என்று கேட்டதற்கு, "இப்பொழுது முடியாது. பிறகு எப்போதேனும் பார்த்துக் கொள்ளலாம்" என்று பதில் வந்தது.

"பிறகு எப்போதேனும் என்றால்"

"ஒரு வேளை திருவொற்றியூரில் உங்களை சந்திக்கலாம் என்று சொல்லப்பட்டது"

"திருவொற்றியூரா? எங்கிருக்கிறது?"

"திருக்கடல் மல்லை தாண்டி திருமயிலை வரும். திருமயிலை, திருவல்லிக்கேணி கடந்து திருவொற்றியூர் வரும். அந்த இடத்தில் இராஜேந்திர சோழர் பாடி இறங்குவார். அதற்குப் பிறகு கீழைச் சாளுக்கியம் எல்லை வந்து விடும். அந்த எல்லைக்கு போகும் முன்பு ஒருவேளை சந்திக்கக் கூடும்"

"இராஜேந்திர சோழர் எப்போது கிளம்புவார்?"

"இன்னும் இரண்டு நாள் ஆகும்"

"அப்படியானால் நாங்கள் போய்க் கொண்டே இருக்க வேண்டுமா, அங்கே தங்க வேண்டுமா"

"நீங்கள் திருவொற்றியூரை தாண்டுவதற்குள் உங்களை அவர் தாண்டி விடுவார். அவருடைய குதிரைகள் வேகமானவை"

"வேறு எந்த அதிகாரியும் சந்திக்க மாட்டார்களா"

"ஒருவேளை அரையன் இராஜராஜன் சந்திக்கலாம்"

"அருண்மொழிப் பட்டர் சந்திக்க மாட்டாரா, அவர் அந்தணர் ஆயிற்றே"

"அந்தணர், அந்தணர் அல்லாதார் என்ற பிரிவினை எல்லாம் முக்கியம் இல்லை. அந்த காலங்களெல்லாம் மலையேறி விட்டது. சோழ தேசத்தில் உள்ள அந்தணர் பேரும் சோழ தேசத்திற்கு விசுவாசத்தை காண்பிக்க வேண்டும். உங்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக சந்தோஷப்படுங்கள். வாய்ப்புகளை வரவேற்காமலும், வந்த வாய்ப்புகளை ஏற்காமலும் நீங்கள் பன்னெடுங்காலம் தள்ளி இருந்து விட்டீர்கள். அதனால் தான் இராஜேந்திர சோழருக்கு உங்கள் மீது வெறுப்பு. இது ஒரு நல்ல வாய்ப்பு. காசிக்கு போனது போலும் ஆயிற்று, அரசாங்க காரியம் செய்தது போலவும் ஆயிற்று"

"என்ன விசாரிக்க வேண்டும், என்ன தகவல் அனுப்பி வைக்க வேண்டும்"

"நீங்கள் கடந்து போகும் போதே மடக்கப்பட்டு கேள்வி கேட்கப்படுவீர்கள். காசிக்கு நீங்கள் யாத்திரை போகிறீர்கள் என்று சொன்னால் உங்களை ஒன்றும் சொல்ல மாட்டார்கள். அந்தணர்களா என்று ஒரு வேளை அங்குள்ள அந்தணர்கள் சோதிக்கலாம். அப்படி சோதித்தால் உங்களுக்கு பதில் சொல்ல முடியும் அல்லவா"

"அய்யா ஓர் அளவுக்கு மேல் இழிவாக நடத்தாதீர்கள்" தலைமை அந்தணர் சொன்னார்.

"சரி, சரி. மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் எல்லா இடங்களிலும் ஜாக்கிரதையாக போய் வர வேண்டும் என்ற எண்ணத்தில் கேட்டேன். இது தாண்டி நீங்கள் காசிக்கு போகும் போது வழியில் ஊரினுடைய நிலைமை என்ன, மக்களினுடைய நிலைமை என்ன என்பதை பேசக் கொடுத்துப் பாருங்கள்"

"அதுதவிர கீழைச் சாளுக்கியத்தில் பல்வேறு இடத்தில்



நம்முடைய ஒற்றர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை சந்திப்பார்கள். உங்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து ஓலை தருவார்கள் கொடுப்பார்கள். உங்களுடையது வேத ஓலைச் சுவடிகள் இருக்குமல்லவா அவைகளுக்கு நடுவே இதை செருகி வைத்துக் கொண்டு அரசர் எங்கிருக்கிறார் என்று விசாரித்து வந்து விடுங்கள்"

"உங்களுக்கு அறுபது குதிரைகள் தயாராக இருக்கின்றன. கயிறு சேணம் உடையவை. கயிறு கடிவாளம் உடையவை. அவைகளை ஓட்டுவது மிக எளிது. மர ஆசனம் போட்டு ஏறி நின்று பிறகு காலை தூக்கி குதிரையின் மீது போட்டுக் கொள்ளுங்கள். சரியாக உட்கார்ந்து கொண்டால் குதிரை சரியாக நடந்து கொள்ளும். எப்படி உட்காருவது என்று ஒரு அரை நாழிகையில் உங்களுக்கு தெரிந்து விடும். சரியாக உட்கார்ந்தால் குதிரைக்கும் நோவு இருக்காது. உங்களுக்கும் நோவு இருக்காது. நீங்கள் சரியாக உட்காரவில்லை என்றால் நீங்கள் இறங்கிய பிறகு குதிரை தரையில் படுத்து புரளும். அப்படி உங்கள் குதிரை தரையில் படுத்து புரண்டால் அந்த குதிரைக்கு முதுகு வலி இருக்கிறது என்று அர்த்தம். நீங்கள் சரியாக உட்காரவில்லை என்று அர்த்தம். மறுபடியும் உங்கள் இருக்கையை சரி செய்து கொண்டு நீங்கள் சரியாக உட்கார பழகுங்கள். சாதாரணமாக குதிரையினுடைய நடைக்கு ஏற்ப உங்கள் உடம்பு அசைவு இருக்க வேண்டும். குதிரையினுடைய அசைவுக்கு எதிர்பதமாக அசைந்தால் அது குதிரைக்கு தொந்தரவாக இருக்கும். குதிரைக்கு அது பிடிக்காது"

"நாங்கள் பாட்டுக்கு வேத பாடங்கள் படித்துக் கொண்டிருந்தோம். ஏதேதோ கற்க வேண்டிய நிர்பந்தம் வந்து விட்டது"

"பிரச்சனை என்று வந்த பிறகு அலுத்துக் கொள்ளாதீர்கள். பழைய விஷயங்களை பேசாதீர்கள். காசிக்கு போவது என்பது நாம் நினைத்துப் பார்த்தோமா. அரசாங்க செலவில் போகிறோம். இன்னொரு விஷயம் நாம் மறந்து விட்டோம், நாம் வேத விஷயங்களையே பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர வேதங்களை சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர உபாசனைகள் செய்வதில்லை.

கால பைரவர் உபாசனை நாம் செய்திருக்க வேண்டும். அது நம்மிடம் இருந்து நழுவிப் போய் விட்டது. சோழ தேசம் முழுவதும்

கால பைரவர் உபாசனை நடக்கிறது. எல்லா கோவில்களிலும் கா பைரவர் மிக முக்கியமாக இருக்கிறார். இப்போது அதைவிட சாக் உபாசகம் அங்கங்கே வரத் துவங்கி விட்டது. மகாகாளி, துர்க என்று பல பெயரில் வணங்குகிறார்கள். விஜயாலய சோழ காலத்தில் தூமாவதியை நிசும்பசூதனி என்று நிறுத்தி விட்டான் அப்படி பல்வேறு விஷயங்களை உபாசனை செய்வதால் தா சோழர்கள் பலம் மிக்கவர்களாக, வீரம் மிக்கவர்களாக, எப்போது வெற்றி பெறுபவர்களாக இருக்கிறார்கள்.

இது நமக்கு ஒரு நல்ல அனுபவம். அரசாங்கத்துக்கு ஒத்து போனது போலவும் ஆயிற்று. காசிக்கு போனது போலவு ஆயிற்று"

"அய்யா, நடுவழியில் நாம் உளவு பார்க்க வந்திருக்கிறோம் என்று தெரிந்து, நம்மை நையப் புடைத்தால் என்ன செய்வது"

"உளவுக்காக வந்திருக்கிறோம் என்று எழுதியா ஒட்டிக் கொண்டிருக்கிறோம். நாம் காசி யாத்திரை போகிறோம். நடுவிலே தென்படுவதைக் குறித்துக் கொள்கிறோம். அங்குள்ள உளவுக்கார கள் சொன்னால் நம்மில் ஒருவர் அங்கிருந்து பிரிந்து மீண்டும் அரசரை நோக்கி பயணப்பட வேண்டும். நாம் எடுத்துப் போகும் செய்திகளை அங்குள்ள உளவுக்காரருக்கு தெரிவிக்க வேண்டும்"

"யார் உளவுக்காரன் என்று எப்படி தெரியும்?"

"அதற்கென்று சில சமிஞ்ஞைகள் இருக்கின்றன"

"என்னென்ன?"

"உங்களிடம் சொல்லக்கூடாது. உங்களிடம் என்னைப் பற்றி விசாரித்தால் அவர்களை என்னிடம் அனுப்புங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்"

"அப்படியானால் இந்த யாத்திரைக்கு நீங்கள் மட்டும் போதாதா, உங்களைப் போல் அந்தணர்கள் பத்து பேர் போதாதா. நூற்றி எட்டு பேர் எதற்கு?"

"பத்து பேர் போனால் சந்தேகம் வரும். நூற்றி எட்டு பேர் அந்தணர்கள் போனால் எந்த சந்தேகமும் வராது. நம்மை சோழ தேசம் என்று கூட சொல்லாமல் தொண்டை நாடு என்று சொல்வதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆக இந்தக் கணம்



முதல் நாம் எல்லோரும் தொண்டை நாட்டு அந்தணர்கள். சோழ தேசம் பற்றியும் நமக்குத் தெரியும்"

"இப்போது எதிரி அரசர்கள் நம்மை மடக்கி சோழ தேசம் பற்றி சொல் என்று சொன்னால்?"

"என்ன விவரம் வேண்டுமோ அந்தணையும் சொல்லலாம். ஒரு தவறும் இல்லை. என்ன விவரங்கள் நமக்குத் தெரியும். நன்றாக நெல் விளைகிறது. நதி நீர் நன்றாக பொங்குகிறது. காவிரியில் வெள்ளம் சுழித்து ஓடுகிறது. காற்று நன்றாக வீசுகிறது. வாணிபம் நன்றாக நடைபெறுகிறது என்று சொல்வோமே தவிர, வேறு என்ன இருக்கிறது"

"யானைப்படை என்றால் தெரியாது. குதிரைப் படை என்றால் தெரியாது, காலாட்படை என்றால் தெரியாது. ஆனால் படைகள் எல்லாம் இருக்கின்றன. முன்னும், பின்னும் நகருகின்றன. எப்பொழுதும் தஞ்சை பரபரப்பாக இருக்கிறது. தொண்டை நாட்டிலும் அந்த பரபரப்பு இருக்கிறது என்று சொல்லி கொள்ளலாமே தவிர வேறு எதுவும் சொல்லுவதற்கு நம்மிடம் விஷயம் இல்லை"

"ஆக மிகவும் பயந்து சாக வேண்டாம். ஓரளவு தெம்பாகவே, கம்பீரமாகவே நடப்போம்"

அவர்கள் கிளம்பத் தயாரானதும் அவர்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் கதறி அழுதார்கள். அந்த அந்தணர்களுக்கும் அழுகை வந்தது. எல்லா பெண்மணிகளும் கையில் அரிசி எடுத்து வந்து அந்த கூட்டத்தை சுற்றினார்கள். தங்களுடைய அந்தணர்களைத் தேடி அவர்கள் தோளுக்கருகே தொங்க விடப்பட்டிருக்கின்ற பாத்திரத்தில் அந்த அரிசியை போட்டார்கள்.

இது வாய்கரிசி. கடைசி பிடி. போய் வரும் வரைக்கும், வருவாரா இல்லையா என்று தெரியாது. ஆக நன்றாகப் பார்த்துக் கொள். நன்றாக விழுந்து வணங்கிக் கொள் என்று எல்லோரும் சொல்ல, அந்தந்த பெண்மணிகள் மிகவும் கதறலுடன், விழுந்து வணங்கி வாயைப் பொத்திக் கொண்டு வீட்டுக்குள் ஓடினார்கள்.

அந்த கிராமமே வாய் விட்டு அழுதது. அந்தணர்கள் பைரவ உபாசனையை இப்போதே ஆரம்பிக்க வேண்டும் என்று பேசி அந்த பைரவ உபாசனைக்கு உண்டான மந்திரத்தை ஜெபிக்க

ஆரம்பித்தார்கள்.

முதலில் கணபதி மந்திரம் சொன்னார்கள். கணபதி மந்திரம் சொன்ன பிறகு வேதத்திலிருந்து சில வரிகள் சொன்னார்கள். பிறகு கால பைரவர் மந்திரம் என்று ஒரவர் உரத்த குரலில் சொல்ல,

"ஓம் நமோ பகவதே,
காலாய கோராய
வஜ்ர தனுஷ்டாய
சத்ரு நாசனாய
சர்வ பூதாத்மனே
ஹூம் பட் ஸ்வாஹா" என்று உரத்த குரலில் மந்திரம் சொன்னார்கள்.

சத்ரு நாசமடைய வேண்டும் என்று வேண்டினார்கள். சத்ரு நாசமடைய வேண்டும் என்பதற்காக பயணப்படுகிறோம் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்களுக்கு துக்கமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

அவர்கள் குதிரை ஏறுவதற்கு சிரமப்பட்டார்கள். கால் வீசி ஏறி மறுபுறம் பொத்தென்று விழுந்தார்கள். கீழ விழுந்து குதிரையின் வயிற்றுக்கு நேர் கீழாக ஒருவர் படுத்துக் கொண்டு லபோதிபோ என்று கத்தினார். குதிரை சிறிதும் கவலைப்படாமல் பக்குவமாக நகர்ந்து கொண்டது.

"உங்களை குதிரை மிதிக்காதய்யா. மிதிக்கக்கூடாது என்று குதிரைக்கு தெரியும். ஏன் பயப்படுகிறீர்கள். நீங்கள் கத்துகிற கத்தலில் தான் குதிரை மிரளுகிறது. இவ்வளவு உரக்க குதிரையிடம் பேசாதீர்கள். மிருதுவாக, நிதானமாக பேசுங்கள்"

"குதிரையிடம் பேசுவதா, என்ன பேசுவது"

"அடேய் நன்றாக இருக்கிறாயா" என்று கேட்க வேண்டும்.

"யாரை"

"குதிரையை"

"தலை எழுத்து. யாரிடமும் பேசக் கூடாது என்று கடந்த



பத்து நாட்களாக மௌன விரதம் இருந்தேன். எல்லாம் போயிற்று. கடைசியில் குதிரையிடம் வந்து பேச வேண்டும் என்று முடிந்திருக்கிறது.

"ஏ, கழுதை நீ என்னை ஒழுங்காக சுமக்க வேண்டும்"

"இந்த பேச்சு வேண்டாம். குதிரையை கழுதை என்று சொன்னால் குதிரைக்கு தெரிந்து போகும்"

"நிச்சயமாக வா"

"சர்வ நிச்சயமாக"

"அடேய், குதிரை மன்னித்து கொள்ளப்பா. நான் இனிமேல் உன்னை கழுதை என்று சொல்ல மாட்டேன்" என்று சொல்ல மற்றவர்கள் வாய் விட்டு சிரித்தார்கள்.

"யுத்தம் என்று சொன்னால் என்ன பயம் இருக்கிறது உங்களுக்கு. எவ்வளவு மிரட்சி மிரள்கிறீர்கள். அதே நேரம் கோவிலுக்கு வந்தால் நீங்கள் நெஞ்சு நிமிர்த்துவதும், கை வீசி நடப்பதும், உரத்த குரலில் பேசுவதும் என்ன அட்டகாசமாக இருக்கிறது. அமைதியான வாழ்க்கை காலத்தில் தான் நீங்கள் அம்மாதிரி பேச முடியும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்றால் நாங்கள் போர் முனையில் அடிபட்டு குத்துயிரும், குலையுயிருமாய் இருக்க வேண்டும்"

"தம்பி, இவ்வளவு வேகமாக பேசுகிறாயே. ஒன்று புரிந்து கொள். அந்தணருக்கு எதிராக ஒரு அரசாங்கம் இயங்கினால் அந்த அரசாங்கம் ரணப்படும் என்று ஞாபகம் வைத்துக் கொள்"

"போதும் நிறுத்துங்கள். யாரிடம் என்ன பேச வேண்டும் என்று தெரிய வேண்டாமா. சாபம் இடுவதற்கு இதுவா நேரம். யாரை நோக்கி சாபம் இடுகிறீர்கள். ஓங்கி ஒரு அறை விட்டால் அந்த சாபம் விடுகின்ற வாய் என்னவாகும்"

"எந்த நேரத்தில் பேச வேண்டும், எவ்வளவு பேச வேண்டும், எப்படி பேச வேண்டும் என்று தெரியாவிட்டால் நீங்கள் அந்தணரே இல்லை. வெறும் ஆவேசம் மட்டும் இருந்து பயனில்லை. வீட்டை விட்டு பிரிகிறோமே என்ற துக்கத்தில் கண்டபடி உளறாதீர்கள். கத்தி கழுத்துக்கு வந்து விட்டது. எதிர் கொள்ள பழகுங்கள். சமாதானமாக, அமைதியாக போங்கள். இது நல்ல விஷயம். நான் மறுபடியும் சொல்கிறேன். இது நல்ல

விஷயம்"

"காசிக்கு போவது என்பது எப்பேர்பட்ட கொடுப்பினை, காசிக்கு போய் திரும்புகிறோம் என்றால் எப்படி இருக்கும் வரவேற்பு. ஜனங்கள் எப்படி சூழ்ந்து கொள்வார்கள். எத்தனை விதமான கதைகள் சொல்லலாம். உதாரணத்திற்கு கங்கை எப்படி இருக்கிறது என்று கேட்டால் நாம் என்ன பதில் சொல்வோம்"

"ஆறு பொங்கி ஓடுகிறது. நான் இக்கரைக்கும் அக்கரைக்குமாக போய் வந்தேன் என்று சொல்லலாம்"

"இக்கரைக்கு அக்கரைக்கு என்றால்?"

"ஒரு பதினைந்து துடுப்பு போட வேண்டியிருக்கும்"

"இல்லை. கங்கைக்கு, எதிர்கரையே தெரியாது. அவ்வளவு அகலம்"

"உங்களுக்கு யார் சொன்னது?"

"என் தகப்பனார் சொன்னார்"

"ஆமாம். ஆமாம். இவர் தகப்பனார் போய் வந்திருக்கிறார்"

"அதனால் தான் நீங்கள் ஆவலாக இருக்கிறீர்களா?"

கங்கைக்கு போக வேண்டும் என்ற ஆவல் யாருக்கு இல்லையென்று சொல்லுங்கள். வடக்கே இருக்கிறவர்களுக்கு இராமேஸ்வரம் வர வேண்டும் என்ற ஆவல். தெற்கே இருக்கின்ற நமக்கோ கங்கையை பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

எதனால் அந்த ஆவல். தொலைதூரம் என்பது மட்டுமல்ல. நம்முடைய புராணங்களி லெல்லாம் கங்கை முக்கியமான இடம் வகிக்கிறது"

"அப்படி இராமேஸ்வரம் இருக்கிறதா?"

"மிக நிச்சயமாக. வடக்கே இருப்பவர்கள் ராமன் நடந்த வழி எது என்று பார்க்கிறார்கள். அவர்களாக ஒரு வழி அமைத்துக் கொண்டு மலையாள தேசத்தைச் சுற்றி பிறகு அங்கிருந்து தெற்கே பாண்டிய தேசத்தின் ஊடாகப் போய் மதுரையை பார்த்துவிட்டு மதுரையிலிருந்து இராமேஸ்வரம் போகிறார்கள்"

"இராமேஸ்வரத்தில் உட்கார்ந்து பித்ருக்களுக்கு நீர் வார்க்கிறார்கள். ஒவ்வொரு வட இந்திய வணிகரும் கொண்டு



வந்து காசு கொட்டுகிறார்கள்"

"இராமேஸ்வரம் அந்தணர்கள் மிகச் செழிப்பாக இருக்கிறார்கள்"

"என்ன தினம் தினம் பிண்ட சோறு சாப்பிட வேண்டும். ஒரு வாரத்திற்கு ஒரு சிராத்தம் தான் என்று நாம் வகைப்படுத்திக் கொண்டிருக்கிற மாதிரி அவர்களால் வகைப்படுத்திக் கொள்ள முடியாது"

"கூழுங்கள் வருகிறதல்லவா. எப்படி வகைப் படுத்திக் கொள்ள முடியும்"

அவர்கள் அரட்டை அடித்துக் கொண்டே போனார்கள்.

"இன்னொரு விஷயமும் உங்களுக்கு சொல்ல விரும்பு கிறேன்" மருவூர் தேசத்து அந்தணருக்கு தலைமை வகித்தவர் தஞ்சாவூர் வைதீகரை நோக்கி பேசினார்.

"எங்கள் வீட்டில் நல்ல சகுனங்கள் ஆகியது. குங்குமம் சிதறியது. வாசலில் கழுதை கத்தியது. பசுமாடு உள்ளேறி வந்து மூத்திரம் போயிற்று. இன்று காலை எங்களுக்கெல்லாம் கருட தரிசனம் ஆயிற்று" என்று சொல்ல,

எல்லோருமே கருடனை பார்த்தது போல கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

"அப்புறம் என்ன பயம். தாராளமாக போய் வரலாம். ஒரே ஒரு செய்தியை என்னால் மறக்க முடியவில்லை"

"என்ன அது?"

"இராஜராஜசோழன் காலத்தில் ஒரு அந்தண சேனாதிபதி பிரம்பால் அடிபட்டு இறந்தான். அதை என்னால் மறக்கவே முடிய வில்லை. அவன் மனைவி அழுததும், குழந்தைகள் தவித்ததும், இராஜராஜர் நேரே வந்து ஆறுதல் சொன்னதும் இன்னும் என் மனதில் நிற்கின்றன. அதே போல யாரும் அடிப்பார்களோ என்ற பயம் இருக்கிறது"

"அவர் சேனாதிபதி. இடுப்பில் வாள் தரித்தவர். நெஞ்சில் கவசம் உள்ளவர். போர் முனைக்கு போய் வெட்டி எறிந்தவர், நாம் அப்படி இல்லை நம்மை யாரும் அடிக்க மாட்டார்கள்.

பயப்படாதீர்கள்.

"இப்படி எதிரிகள் நம்மை தாக்காமல் இருப்பதற்கு இன்னொரு மந்திரம் இருக்கிறது" இப்போழுது வேறொரு மருவூர் அந்தணர் பேசினார்.

"என்ன மந்திரம் அது?"

"ப்ரத்யங்கிரா தேவி
ஓம் க்ஷம் பக்ஷ ஜ்வாலா
ஜிஹ்வே கராள
தம்ஷ்ட்ரே ப்ரத்யங்கரே
ஹூம் பட் ஸ்வாஹா"

அந்தணர் கூட்டம் மெல்ல தஞ்சாவூர் அரண்மனையை அடைந்தது. இராஜேந்திர சோழரை தரிசித்து விட்டு போக வேண்டும் என்று விண்ணப்பித்தது.

"இருங்கள்" என்று வாயிற்காவலர்கள் கை உயர்த்தினார்கள். சட்டென்று பின்னால் எக்காளம் கேட்டது. அந்தணர்கள் குதிரைகளை பின்னால் இழுத்து வழி விட்டார்கள். முன்னே மெய்க்காவல் வீரர்கள் போக இடதும், வலதும் மெய்க்காவல் வீரர்கள் வர நடுவில் கம்பீரமாய் தன் கருப்பு குதிரையில் பிடரி பறக்க மாமன்னர் இராஜேந்திரர் வேகமாய் போனார்.

தங்களை கண்டு நிற்பார் என அந்தணர்கள் நினைத்தார்கள். ஆனால் குதிரைப் படை மின்னலெனத் தாண்டியது.

அந்தணர்கள் ஏமாற்றமானார்கள், சட்டென்று மெய்க்காவல் படையை கலைத்து விட்டு இராஜேந்திர சோழர் தன் குதிரையை மட்டும் திருப்பிக் கொண்டு வந்தார். அவருக்கருகே ஒரே ஒரு மெய்க்காவல் படை வீரன் மட்டும் வந்தான். அவர்கள் இருவரும் அந்தணர்களுக்கு நடுவே வந்து நின்று கொண்டார்கள்.

இராஜேந்திர சோழர் கை கூப்பினார்.

"இந்த மஹா சதஸ்ஸுக்கு என்னுடைய வணக்கம். சோழ தேசம் செழித்திட நீங்கள் செய்யும் பிரார்த்தனைகள் எங்களை உற்சாகமடையச் செய்கின்றன. இந்த க்ஷணம் கூட உங்களை போக வேண்டாம் என்று சொல்லி விடலாமா என்ற எண்ணம்



எனக்குள் இருக்கிறது. ஆனால் நீங்கள் கிளம்பி நிற்கின்ற உற்சாகத்தைப் பார்த்தால் போய் விட்டு வாருங்களேன் என்று தான் சொல்லத் தோன்றுகிறது"

"நெடுந்தூரம் பயணப்படுவது பற்றி உங்களில் சிலருக்கு கலவரம் இருக்கலாம். ஒரே ஒரு வேளை உணவு எடுத்துக் கொள்ளுங்கள். நன்றாக சாப்பிடுங்கள். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இரவு நேரம் பாலோ அல்லது அரிசி கஞ்சியோ குடித்து விடுங்கள். மூன்று வேளைகள் சாப்பிட்டால் தான் பயணம் களைப்பாக இருக்கும். வழியில் உள்ள காய்கறிகளை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். இனாமாக ஒரு பொழுதும் யாத்திரையின் போது வாங்காதீர்கள். உங்களுக்கு தேவையான யாக அருண்மொழிப் பட்டன் கொண்டு வந்து கொடுப்பார். நீங்கள் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. காசிக்கு பயணப்படுவது, நீங்கள் தீர்த்த யாத்திரை செய்வதே எனக்கு பெரிய பலம்.

நீங்கள் தீர்த்த யாத்திரை செய்து இராஜராஜ சோழருக்கும், அவரது மனைவியருக்கும், என்னுடைய தாத்தாவிற்கும் நீங்கள் நீர் வார்த்தீர்கள் என்றால், சோழ தேசம் செழிப்புறும்.

உங்களின் முன்னோர்களுக்கும், சோழ தேச வாசிகளுக்கும் நீர் வார்த்தீர்கள் என்றால் அதுவே எங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும். உண்மையாக, மிக உண்மையாக, மிக மிக உண்மையாக இதை நீங்கள் செய்ய வேண்டும். கங்கைக் கரையில் நின்று இராஜராஜருக்காக மூன்று கைகள் நீர் உயர்த்தூக்கி ஒரே சமயத்தில் நீங்கள் இறைத்தீர்கள் என்றால் இராஜராஜர் மிகவும் மகிழ்வார். இந்த தேசம் வெற்றி பெறும். நமக்கு எந்த தொல்லைகளும் இருக்காது.

நான் மிகப் பெரிய மன்னனாக வர வேண்டும் என்ற பேராசையில் இந்த படையெடுப்பு நடக்கவில்லை. இடையறாது இடையறாது நம்மை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள். மேலைச் சாளுக்கியத்திலிருந்து வருகின்ற சாளுக்கிய வீரர்கள் கீழைச் சாளுக்கியத்திலிருந்து மிக மோசமாக நடந்து கொள்கிறார்கள். அதை தடுப்பதற்காகவே இதை செய்யப் போகிறேன். வேங்கி வரை எந்த தொந்தரவும் இருக்காது. பிறகு இருக்கலாம். ஆனால் எனக்கு தான் இருக்குமே தவிர உங்களுக்கு இருக்காது.

உங்களுக்கும், எனக்கும் நான்கு நாட்கள் இடைவெளி இருக்கும்.

கண்ணில் பட்ட எல்லா காட்சிகளையும் நீங்கள் ஓலையில் எழுதி எங்களுக்கு அனுப்பலாம். நாங்கள் அதை புரிந்து கொள்ள முயற்சிக்கிறோம். உடல் தளர்ந்தவர்களை, ஊர் சேர விரும்புகிறவர்களை நீங்கள் திருப்பியும் அனுப்பலாம். அவர்கள் மூலமாகவும் நாங்கள் தெரிந்து கொள்கிறோம்.

ஒரு வண்டி அரிசி, நூறு கழஞ்சு பொன் உங்களுக்கு கொடுக்கிறேன். நூற்றி எட்டு பேர் வந்து விட்டீர்கள் என்பது எனக்கு மிகவும் நெகிழ்ச்சியை தருகிறது. அந்தணர்களைப் பற்றி எனக்கு ஒரு கசப்பான எண்ணம் இருந்தது உண்மை தான். ஆனால் இப்போது இல்லை. அறவே இல்லை. இந்த மஹா சதஸ்ஸு"க்கு எனது வணக்கம். இங்கு குழுமி இருக்கின்ற அறிஞர்களுக்கு என் வணக்கம். தேவர்களுக்கு ஒப்பான பிராமணர்களுக்கு என் வணக்கம்" என்று கை கூப்பினார்.

அந்தணர் கூட்டம் சிலிர்த்தது.

இராஜேந்திர சோழர் பல்லாண்டு காலம் வாழ வேண்டும். மிக நீண்ட தீர்காயுசாக இருக்க வேண்டும். அவர் நூறு வயதை தாண்டி வாழ்ந்து அவர் பிறந்த நட்சத்திரத்து சந்திரனை தரிசிக்க வேண்டும் என்றெல்லாம் வாழ்த்தினார்கள். ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். குழந்தைச் செல்வங்கள் பெருக வேண்டும் என்றார்கள்.

சட்டென்று இராஜேந்திர சோழர் விஸ்வநாத ஸ்ரௌதிகளை நோக்கித் திரும்பினார்.

"உங்களை எனக்குத் தெரியும். நாம் சந்தித்திருக்கிறோம். கிருஷ்ணன் ராமனின் இல்லத்தில் இல்லையா" என்று கேட்க விஸ்வநாத ஸ்ரௌதிகள் முகம் மாறினார். மெல்லிய குரலில் "ஆமாம்" என்றார்.

"என்னுடைய பட்டாபிஷேகத்தை நீங்கள் கணித்தீர்கள் அல்லவா. கணிக்கச் சொல்லி உங்களை அழைத்தாரல்லவா. நீங்கள் அவரிடம் காதோரம் என்னவோ சொன்னீர்கள். அது என்ன என்று நான் கேட்ட போது சொல்ல மறுத்து விட்டீர்கள். ஆனால் அது என்ன என்பதை கிருஷ்ணன் ராமன் எனக்கு



சொல்லி விட்டார். நீங்கள் சொன்ன செய்தி நான் பட்டம் ஏற்ற ஆறாம் வருடம் எனக்கு மிகப் பெரிய பிரச்சனை வரும். அதைத் தாண்டி விட்டால் எனக்கு எண்பது வயதுக்கு மேல் ஆயுசு என்றீர்கள். சரி தானே"

"எப்படி ஞாபகம் வைத்திருக்கிறீர்கள்" விஸ்வநாத ஸ்ரௌதி வியந்தார்.

"அந்த ஆறாம் வருடம் இப்பொழுது தானே, இது தானே என் ஆறாம் வருடம்"

"ஆமாம், இது தான் உங்கள் ஆறாம் வருடம். இந்த வருடத்தில் பின்னும் ஆறு மாதத்திற்கு கடுமையான சோதனைகள் ஏற்படப் போகின்றன. மனதாலும், உடம்பாலும் அதிகம் சிரமங்களை அனுபவிப்பீர். நோய்களும் உண்டாகும். உடன் பிறந்தவர்கள், நெருங்கிய உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் உயிரிழப்பார்கள். அந்த சோகம் உங்களை பற்றிக் கொள்ளும். பல நாட்கள் தூக்கம் இல்லாது இருக்கும். இந்த ஒரு கால கட்டத்தை கோபம் இல்லாமல், பொறுமையாக இறை வழிபாட்டில் மனம் செலுத்தி தாண்டினீர்கள் என்றால் வெகு நிச்சயம் நீங்கள் எண்பது வயதுக்கு மேல் வாழ்வீர்கள்" இருவரும் நகர்ந்து தனியானார்கள்.

"இப்பொழுது சொல்லுங்கள். எண்பது வயது வாழ்வேனா அல்லது இந்த வருடமே முடிவேனா"

"வெகு நிச்சயமாக எண்பது வயது வரை வாழ்வீர்கள். நான் நீங்கள் வாழ்வீர்கள் என்பதற்கு அத்தாட்சிகள் சொல்ல முடியும். அதற்கு பிரசன்ன குறிகள் இருக்கின்றன. நீங்கள் என்னிடமிருந்து விடை பெற்று உங்கள் அரண்மனை படியேறும் முன்பு உங்களுடைய தோளில் காக்கை எச்சம் விழுந்தால் அல்லது ஏதாவதொரு பறவை எச்சம் விழுந்தால் உங்களுக்கு தீர்காயுசு என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்"

"வலதா, இடதா"

"எந்த தோளில் விழுந்தாலும் தீர்காயுசு, எச்சம் மேலே பட்டாலே தீர்காயுசு, பறவை எச்சம் உங்களுக்கு நல்லது"

www.palsuvainovel.com

"உறவுகள், நண்பர்கள் இழப்பது சொன்னீர்கள். என்னுடைய முக்கியமான உறவு இப்போதைக்கு இராஜராஜ நரேந்திரன் என்னுடைய தங்கையின் மகன், மருமகன். அவன் இறந்தா அவன் ஊனம் அடைந்தால் சாளுக்கிய தேசம் பாழ்படும். வாரி சண்டை அதிகமாகி விமலாதித்தனுடைய இன்னொரு மகனா விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு பட்டம் சூட்டப்படும். பிற நமக்கு நிரந்தர தொல்லை. எனவே இராஜ நரேந்திரன் நல்லப இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள்"

"என்ன நட்சத்திரம்"

அவர் குனிந்து நட்சத்திரத்தைச் சொன்னார்.

கவலையே படாதீர்கள். இந்த நட்சத்திரக்காரர்கள் தீர்காயுசா இருப்பார்கள். இவர்களுக்கு அல்பாயுசு என்பதே இல்லை. ஆன மாதம் என்றால் குரு நல்ல இடத்தில் இருக்கிறார். குரு நல்ல இடத்தில் இருந்தால் சனியும் வன்மையாகத் தான் இருப்பார் சனியும், குருவும் நன்றாக இருக்கிறார்கள் என்றால் அவருக்கு ஆயுசு பற்றின கவலை இல்லை. ஆனால் அல்லாட்டங்கள் இருக்கும்"

"மிகவும் வேகமாக கணிக்கிறீர்கள் அய்யா"

"இது குலப்பாடம், குடும்பப் பாடம்"

"இன்னொன்று சொல்லட்டுமா, என்னுடைய விஷயம் ஒன்று உங்களை கோபப்படுத்தி இருக்கிறது. நான் அந்தணர்களுடைய நிலங்களை பிடுங்கி வேளாண் வகை நிலமாக செய்து விட்டேன் என்ற வருத்தம் இருக்கிறது. நான் இந்தப் போரில் ஊனத்தை அடையாமல் திரும்பி வந்தால் ஐம்பத்தியோரு கிராமங்களை அந்தணர்களுக்கு நிவந்தங்களாக கொடுக்கிறேன். இதை இப்போதே நீங்கள் சொல்ல வேண்டாம். வரி இல்லாமல் செய்கிறேன். இதையும் போய் சொல்ல வேண்டாம். இதை உங்களுக்குள் மௌனமாக வைத்துக் கொள்ளுங்கள்.

நான் திரும்பி வந்ததும் உங்களை சந்தித்து எந்தெந்த கிராமங்கள் உங்களுக்கு வேண்டுமென்று நீங்கள் கை காட்டுகிறீர்களோ அவைகளை உங்களுக்கு தருகிறேன். இராஜராஜ நரேந்திரனுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்"



"மிகவும் நல்லது, நிச்சயம் செய்கிறேன். இப்பொழுதும் எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள் என்று நீங்கள் சொல்லவில்லை. நீங்கள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்காக சோழ தேசமே பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறது. இன்னொரு செய்தி சொல்கிறேன். தயவு செய்து யோசித்து முடிவு எடுங்கள்"

"என்ன?"

"உங்களுக்காக யாரும் நவகண்டம் கொடுக்கக் கூடாது நவகண்டம் கொடுத்தால் அந்த வீட்டு பெண்மணிகள் அழுதால் அது உங்களுக்கு ஆகாது. அரசருக்காக உயிரை மாய்த்தும் கொண்டாரே என்று ஒரு பெண்மணியும், குழந்தைகளும் அழுவார்கள். அது உங்களை சும்மா விடாது. எனவே நவகண்டம் யாரும் கொடுக்கப் போகிறேன் என்றால் உடனே ஆட்களை விட்டு அடித்து எறியுங்கள். கூடாது என்று சொல்லுங்கள்"

"நிச்சயம் செய்கிறேன்" அவர்கள் மறுபடியும் ஒருவரை ஒருவர் நோக்கி கை கூப்பினார்கள்.

இராஜேந்திர சோழர் வந்து குதிரையில் தாவி ஏறினார். பிறகு விஸ்வநாத சாஸ்திரிகள் ஏறினார். விஸ்வநாதர் மறுபடியும் கை கூப்ப, இராஜேந்திர சோழர் கை உயர்த்தி விடை கொடுத்தார்.

அந்தணர்கள் மெல்ல திரும்பினார்கள்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் அவர்கள் போவதை பார்த்துக் கொண்டே மன்னரையும் கவனித்துக் கொண்டிருந்தார். மன்னர் குதிரை திரும்பிற்று. சிறிது தூரம் எகிறி நடந்தது. சட்டென்று மன்னரின் முதுகில் ஒரு பறவை எச்சம் விழுந்தது.

மன்னர் வேகமாக விஸ்வநாத ஸ்ரௌதிகளை நோக்கி திரும்பினார். இது உங்கள் குல தெய்வத்தின் அருள், இது உங்கள் தந்தை நிலை நிறுத்திய பெருவுடையாரின் அருள், இது உங்கள் மூத்தோரின் ஆசிர்வாதம். நீங்கள் தீர்காயுசாக இருப்பீர்கள். அதைப் பற்றி கவலையே வேண்டாம். பறவை எச்சம் விழுந்த இடம் வலது பக்கம் முதுகில், மிகச் சிறப்பு. ஆனால் கழுத்திலும் தெறித்திருக்கிறது. அதனால் இடையறாது அவமானங்கள் இருக்குமே தவிர உங்களுக்கு வெற்றி என்பது உறுதி" என்று சொல்லி விஸ்வநாத சாஸ்திரிகள் தன்னுடைய

குதிரையை திருப்பினார்.

அந்த அந்தணர் குழு மிக உற்சாகமாக கோட்டையை விட்டு கிளம்பியது.

"எங்கு பயணம்?" என்று ஊர் மக்கள் கேட்க,

"காசிக்கு போகிறோம்" என்று அந்தணர்கள் சொன்னார்கள்.

"நல்ல நேரம் பார்த்தீர்களய்யா காசிக்கு போவதற்கு. வழி முழுக்க சண்டையாம். நீங்கள் எப்படி போகப் போறீர்கள்"

"எங்களுக்கும் சண்டைக்கும் என்ன சம்மந்தம். யாரும் எங்களை ஒன்றும் சொல்ல மாட்டார்கள். நல்லபடியா போவோம். போய் வந்து உனக்கு ஒரு கங்கை சொம்பு ஜலம் தருகிறேன்" என்று சொல்ல,

அந்த விவசாயி கை கூப்பினான். விழுந்து குதிரை மண்ணை நெற்றியில் இட்டுக் கொண்டான்.

யார் யாரிடம் என்னென்ன தர வேண்டும். எப்படி போக வேண்டும் என்று அந்த சோழ தேசத்து அந்தணர்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்திருந்தது.

சோழ தேசத்தின் பசுமையான வயல்கள் அவர்களை வரவேற்றன. சோழ தேசத்தில் கிளைகளாக பிரிந்து போகும் காவிரியை அவர்கள் சந்தோஷமாக பார்த்தார்கள். எல்லா ஆற்றிலும் குதிரையை இறக்கி நீரில் நனைந்தபடி நீரை தலையில் தெளித்தபடி வந்தார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொர் ஊர் கோவிலுக்கு கங்கை நீர் அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கொண்டார்கள். அப்படி சொன்ன இடத்தை குறித்துக் கொண்டார்கள். மன்னர் வருவார் என்று எதிர்பார்த்த மக்களுக்கு அந்தணருடைய வருகை ஆச்சரியத்தை கொடுத்தது.

"அந்தணர்கள் இப்போது ஏன் காசிக்கு போகிறார்கள்" என்று சொல்ல,

"இது உளவுப்படை" என்று விவரம் தெரிந்த மறவர் சொல்ல, ஜனங்கள் அப்படியா என்று வியந்தார்கள்.

அந்தணர்கள் உளவுப் படையாக வருகிறார்கள் என்று மேலைச் சாளுக்கிய ஒற்றர்களுக்கு தெரிந்தது. அவர்கள் செய்தி



அனுப்ப துடிதுடித்தார்கள். செய்தியை அனுப்ப உடனடியாக ஏற்பாடுகள் செய்தார்கள்.

வாள் முதுகு குதிரைப் படை கிளம்பத் தயாராக இருந்தது. உத்தம சோழ மிலாடுடையாரும், இராஜராஜ பிரம்மராயரும் அரண்மனை வாசலில் நின்றார்கள். இராஜேந்திர சோழர் இறங்கி வந்தார். அவர்களும் குதிரை விட்டு இறங்கினார்கள்.

இருவரையும் ஆரத் தழுவிக் கொண்டார்.

"உங்களோடு மருத்துவ வண்டியும் வருகிறதா"

"ஆமாம்"

"இரண்டாக பிரிந்து விட்டீர்களா"

"ஆமாம். என்னுடன் ஒன்று. அரையன் இராஜனுடன் ஒன்று என்று பிரிய வேண்டும்"

"அப்படியே பிரியும்"

"நீங்கள் வெற்றியோடு திரும்ப என்னுடைய வாழ்த்துக்கள். உங்களை எல்லாம் பார்க்க எனக்கு சந்தோஷம் அதிகமாகிறது. நீங்கள் மட்டும் போனால் போதும். நான் வரவேண்டிய அவசியமே இல்லை என்று தோன்றுகிறது. நீங்கள் வருகிறீர்கள் என்று தெரிந்தவுடனேயே வேங்கி தேசம் கலகலத்துப் போகும். ஜெயசிம்மனும், விஷ்ணு வர்தன விஜயாதித்தனும் இடம் தெரியாமல் ஓடி விடுவார்கள். நீங்கள் தான் தாக்குதலுக்கு உண்டான முதல் படை. மற்ற எல்லா வீரர்களையும் பின் தள்ளி நீங்கள் தான் முன்னேற வேண்டும். உங்களுக்கு பின்னே மருத்துவ வசதி வர வேண்டும். ஒரு மருத்துவ வசதியை ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு நீங்கள் வேங்கிக்குள் புகுந்து துவம்சம் செய்யுங்கள். கீழைச் சாளுக்கிய வீரர்களுக்கு தனியாக தலைப் பாகை இருக்கும்.

எனவே, அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். மேலைச் சாளுக்கிய வீரர்களுக்கு தனியான தலைக்கவசம் இருக்கும். அவர்களை அடித்து நொறுக்குங்கள். ஜெயசிம்மன் கிடைத்தால் கொல்ல வேண்டாம். உயிரோடு பிடித்து வாருங்கள். நான் விசாரிக்க வேண்டும்.

விஷ்ணு வர்தன விஜயாதித்தனை மடக்கிப் பாருங்கள்.

எதிரினால் கத்தியை இறக்கி விடுங்கள். அமைதியாக இருந்தால் அழைத்து வாருங்கள். ஆனால் விஷ்ணுவர்தன விஜயாதித்தன் உங்களிடம் சிக்க மாட்டான்"

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்?"

"தந்திரக்காரன் நரி, கேவல புத்தி உடையவன். அவனுக்கு சண்டை இடுகின்ற தைரியம் இல்லை. வெறும் பெண் போகத்தில் திளைக்கிறவன். அவனால் எதிர்த்து சண்டையிட முடியாது. எனவே உங்களிடம் சிக்கவே மாட்டான். விமலாதித்தன் என்னிடம் வந்து சரணடைந்தது போல அவன் வேறு யாரிடமாவது சரணடை வான். அனேகமாக வடக்கு பக்கம் தான் ஓடுவான். ஒட்டர்களிடம் தான் சரணடைவான். அப்படி இருப்பினும் நான் அவனை விடாது துரத்துவேன். எனவே விஷ்ணுவர்தன விஜயாதித்தனைப் பற்றி கவலைப்படாதீர்கள். ஜெயசிம்மன் முக்கியம், அவன் தான் இங்குள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் காரணம்" என்று சொன்னார்.

அவர்கள் புரிந்து கொண்டார்கள். தங்களுடைய தாக்குதல் திட்டத்தை பற்றி விவரித்தார்கள். மன்னரை பத்து படி ஏறச் சொன்னார்கள். அரண்மனை வாசலில் பத்துபடி ஏற இராஜராஜ பிரம் மராயன் உரத்த குரலில் அந்த குதிரை வீரர்களுக்கு கட்டளை இட்டான். முதுகில் இருந்த வாளை சரேல் என்று உயர்த்தி உயரத் தூக்கினார்கள்.

"சோழம் சோழம் சோழம்" என்று அதை ஆட்டினார்கள். பளபளத்த கத்திகள் வெய்யிலில் மின்னி அந்த இடத்தை பிரகாசமடையச் செய் தன. இராஜேந்திர சோழருக்கு மிகப் பெரிய சந்தோஷம் ஏற்பட்டது.

"நீங்கள் இருக்கின்ற ஒரு விஷயம் போதும். எனக்கு கவலையே வேண்டாம்" என்று அவர்கள் இருவரையும் இரு பக்கமாக அணைத்துக் கொண்டார்.

தங்களுடைய தளபதிகளை மன்னர் தழுவிக் கொள்வது தங்களையே தழுவிக் கொள்வது போல என்று அந்த வீரர்களுக்கு புரிந்தது. மறுபடியும்.

"சோழம் சோழம் சோழம்" என்று கத்தினார்கள். நீண்ட அந்த கத்திகள் இந்த முறை இன்னும் பிரகாசமாக சூரிய ஒளியில் மினிர்ந்தன.





# 24

"அரிசியா, யாரிடம் இருக்கிறது அரிசி, எங்கே இருக்கிறது அரிசி எதற்காக அரிசி, ஊரில் எல்லோரையும் விட்டு விட்டு என்னிடம் வந்து காசு தருகிறேன். அரிசி கொடு இது இராஜேந்திரர் கட்டளை என்று சொல்லுகிறாயே எத்தனை திமிர் உனக்கு. வேளாளன் என்றால் என்ன வேண்டுமானாலும் ஆடலாம் என்று நினைக்கிறாயா. அந்தணர்களுக்கு இழிவு காலம் என்றால் நீங்கள் உயர்ந்து விடு வீர்களா. எங்கள் தலையில் உட்கார்ந்து விடுவீர்களா. ஜாக்கிரதை. இந்த உங்களால் வாழ்க்கை நடத்த முடியாது. அப்படி என்னால் செய்து விட முடியும். என் சாபத்தை பெற்றுக் கொள்ளாதே" என்று உரத்த குரலில் அந்த அந்தணர் சொல்ல,

தெருவில் நடந்து போகின்றவர்கள் நின்று கவனித்தார்கள். சீராளன் அவர் எதிரே கை கட்டி நின்றான்.

"நீங்கள் உரத்த குரலில் பேசுவதாலேயே நீங்கள் பேசுவது சத்திய மாகி விடாது. நீங்கள் யாரிடம் மறுக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்"

"உன்னிடம் தான் மறுக்கிறேன்"

"இல்லை, நான் அரிசி கேட்கவில்லை. அரிசி கேட்பது சோழ தேசத்து மாமன்னர் இராஜேந்திர சோழர், இந்த தொண்டை நாடும், நடு நாடும் அவருக்கு கட்டுப்பட்டது. அவருக்கு கப்பம் செலுத்துவது, இங்குள்ள சிற்றரசர்கள் அவருக்காக எதுவும் செய்ய தயாராக இருக்கிறார்கள். நீங்கள் அரிசி தர மறுத்தால் அதுபற்றி இராஜேந்திர சோழரிடம் முறையிடு செய்யப்படும். அது மட்டுமல்ல, ஏக வசனத்தில் பேசினீர்கள் என்றும் சொல்லப்படும்.

"இராஜேந்திர சோழரை ஏக வசனத்தில் நான் பேசவில்லையே"

"இராஜேந்திர சோழரின் பிரதிநிதியாக வந்திருக்கிற என்னிடம் ஏக வசனத்தில் பேசினீர்கள். அது இராஜேந்திர சோழரை எதிர்த்து பேசியது போல"

"அடடா. உங்கள் முன்பு கை கட்டி நிற்க வேண்டுமா? வாருங்கள் வாருங்கள் என்று பணிய வேண்டுமா"

"ஆமாம். நான் அரசரின் பிரதிநிதி. அவரிடமிருந்து கழஞ்சுகள் பெற்றுக் கொண்டு வந்து உங்களிடம் அரிசி வாங்குவதற்காக வந்தேன்"

"வேறு எங்காவது போய் கேள். என்னால் தர முடியாது"

"இல்லை. அரசர் திருக்கடல் மல்லையிலிருந்து நேரே திருமயிலை வருகிறார். இங்கு அவருக்கு உணவு போட அரிசி வேண்டும். உங்களிடம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஐந்து குதிர் அரிசி வைத்திருக்கிறீர்கள். அதில் ஒரு குதிரை உங்களுக்கென்று வைத்துக் கொண்டு. மிச்சத்தை எங்களுக்கு தர வேண்டும் இது அரச கட்டளை"

"மீறினால் என்ன செய்வாய்?"

"இராஜேந்திர சோழருடைய ஆட்சி காலத்தில் அந்தணர்களுடைய வாழ்க்கை கஷ்டமாக இல்லை என்பதை அறிவீர்கள். இப்படி பேசினீர்கள் என்று தெரிந்தால் அவர் எதுவும் செய்யக் கூடும். ஏன் நீங்கள் பிரம்பாலும் அடி வாங்கக் கூடும். இராஜேந்திர சோழர் பிரம்படிக்காரர் என்பது உங்களுக்கு தெரியும் தானே?"

"என்னடா மிரட்டுகிறாய்"

"மறுபடியும் ஏக வசனம். இது கடைசி முறை. இன்னொரு முறை ஏக வசனத்தில் பேசினால்"

"என்ன செய்வாய்?"

"நானும் ஏக வசனத்தில் பேசுவேன்"

"என்னையா, என்னையா உன்னைவிட எவ்வளவு வயசு அதிகம் தெரியுமா"

"அறிவில்லையே. வயது அதிகமானால் என்ன யாரிடம் பேசுகிறோம் என்ற தெளிவில்லையே. ஒரு முட்டாளாக அல்லவா இருக்கிறீர்கள்"



சீராளன் வேகமாக சீறினான். அவனுக்கு சீறும்படி அருண்மொழி சொல்லிக் கொடுத்தது ஞாபகம் வந்தது.

"சீராளா, என்ன ஆயிற்று உனக்கு. பெட்டிப் பாம்பாக இருந்தாய். [illegible] சோழ தேசம் போய் விட்டு வந்தால், நீயே மன்னனாகி விட்டதாக நினைப்பா. இந்தப் பகுதிக்கு நீதான் சிற்றரசனா?"

"அப்படி ஒரு நிலைமை வந்தாலும் வரும்"

"என் எழுதிக் கொடுத்து விட்டார்களா"

"இல்லை. எழுதிக் கொடுத்தது உங்களிடமிருந்து அரிசி வாங்கச் சொல்லி ஓலை"

"என்னிடம் அரிசி வாங்கச் சொல்லி அரசர் ஓலை கொடுத்தாரா?"

"ஆமாம், தொண்டை மண்டல நில உடைமையாளர் அனைவருக்கும் பொதுவாக இராஜேந்திர சோழர் யுத்தத்திற்காக அரிசியும், பருப்பும் விலைக்கு தரவேண்டும். இது அரச கட்டளை என்று எழுதி கொடுத்திருக்கிறார். இந்த ஓலையை படித்துப் பாரும்" எடுத்து நீட்டினான்.

அவர் படித்து விட்டு முகம் சிவந்தார்.

"இது மூல ஓலையல்ல. இது பிரதி ஓலை"

"மூல ஓலை தனியாக வைத்திருக்கிறேன். இதை கிழித்து விட்டு கொக்கரிக்காதீர். அதற்கும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்"

"என்ன நடக்கும்"

"பிரம்படி வாங்கலாம். இராஜேந்திர சோழர் பிரம்படி உதையெல்லாம் பிரசித்தம், ஒருமுறை வாங்கிப் பாருங்கள்"

"சீராளா, அமைதியாக இரு" அடுத்த அந்தணர் உள்ளே புகுந்தனர்.

"அவர் நிலைகொள்ளாமல் பேசுகிறார். இதுவரை அவர் அரிசி விற்றதே இல்லை என்பதாகச் சொல்லுகிறார். ஆனால் அது பொய். அவருக்கு ஒரு குதிர் அரிசியே அதிகம். மிச்சம் இருக்கின்ற நான்கு குதிர் அரிசியும் அவர் விற்பதற்குத் தான் வைத்திருக்கிறார். ஏன் இப்படி பேசுகிறார் என்று தெரியவில்லை.

அவருக்கு அரசாங்கத்தின் நிலைமையும், அரசருடைய கோபமு
புரியவில்லை"

"ஏற்கனவே அந்தணர்கள் அரச கோபத்திற்கு ஆட்பட்
ஒரு ஓரமாக வைக்கப் பட்டிருக்கிறார்கள். வேளாளர்கள் தா
முக்கியம் என்று தெள்ளத் தெளிவாக அரசர் சொல்லி இருக்கிற
வேளாளருக்கு மேலாக கம்மாளர்களும், மரத்தச்சர்களும் அரசரு
பிரியமானவர்களாக இருக்கிறார்கள்" அவர் மூச்சு வாங்கினார்.

ஆக, இவர் சொல்வது முட்டாள் தனம். எனவே கொஞ்சம் அ
தியாக இரு. நான் வாங்கித் தருகிறேன். அப்படி உட்கார்ந்
கொள்"

அவன் திண்ணையில் ஒரு ஓரமாக உட்கார்ந்து கொள்
தெருவை வேடிக்கை பார்த்தான். தெருவில் உள்ளோர் அவனை
பார்த்து கும்பிட்டார்கள். அவனும் பதிலுக்கு கும்பிட்டான்.

"பார்த்தீர்களா, மயிலாப்பூருக்கு தெரிந்து விட்டது ய
முக்கியம் என்று. சீராளனுக்கு ஒரு இளைஞனுக்கு மயிலாப்பூ
மக்கள் பெரிய கும்பிடு போடுகிறார்கள். உம்மை கும்பிடவில்லை
உங்கள் கூச்சலை வேடிக்கை பார்க்கிறார்கள். பின்னால் போ
குரங்கு ஏன் குதிக்கிறது என்றும் பேசுவார்கள். அமைதியா
யோசனை செய். இது வேளாளர்களுக்கு உண்டான காலம். இந்
இடத்தில் ஏற்கனவே மக்கள் ஆதரவு நமக்கு இல்லை. எல்லோரு
வேறு வழியில்லாமல் நம்மை சகித்துக் கொண்டிருக்கிறார்க
இன்னும் அதிகமாக ஆடாதே"

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்
நான் ஒரு மணி அரிசி கூட தர மாட்டேன்"

"நல்லது. அப்பொழுது நான் உனக்கு ஆதரவாக இருக்
முடியாது. சீராளா வா, என் வீட்டில் இருக்கின்ற அரிசியை உனக்
தருகிறேன். எனக்கு உண்டான அரிசி எவ்வளவு என்று நீயே
தீர்மானம் செய்து கொள்" அவர் கிளம்பினார்.

மயிலையில் பல பக்கங்களிலிருந்து அரிசி வாங்கப்பட்ட
எல்லாம் வெற்றிலை தோட்டங்கள் தாண்டி செங்கழுநீர் ஓடையி
இறங்கி, மேலேறி அவனுடைய வீட்டுக்கு கொண்டு போகப் பட்ட
அவனுடைய வீட்டு வாசலில் மிக அழகாக வீரபத்திரர் சிலை



இருந்தது. அந்த வீரபத்திரர் உருவம் சிவலிங்கமாக இல்லாமல்
இருந்தது. வீரபத்திரருக்கு அருகே தனியாக அம்மன்
இருந்தது. அந்த அம்மன் பெரிய உருவமாக இருந்தாலும்
ன்றி ஒயிலாக ஆறுகைகள் பல்வேறு ஆயுதங்கள்
இருந்தது. யுத்தத்திற்கு தயாராகும் புருஷ லட்சண
அந்த அம்மன் இருந்தாள். அவன் குலத்து பெண்களும் வீரர்கள்.
ஆயுதம் ஏந்த முடியும். அவர்களால் அரசாட்சி
முடியும். அவர்களால் நியாய தர்மம் வழங்க முடியும்
பெயர் பெற்றவர்கள். ஆனால் அவர்கள் அந்தப் பகுதியில்
அந்தணர்களுக்கு அடங்கித் தான் இருந்தார்கள். அவர்கள்
தெளிவானவர்கள் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.

ஆனால் இந்த தலைமுறையில் உள்ள அந்தணர்களுக்கு அந்த
இல்லை. அவர்கள் தேவை இல்லாமல் வேளாளர்களை
செய்தார்கள். வேளாளர்கள் சிறுகின்ற காலம் மெல்ல
வந்து கொண்டிருந்தது.

பொதுமக்கள் வேளாளர்களை நோக்கி நகர்ந்தார்கள். அவர்கள்
பாத்திரமானார்கள். அவர்களை ஆதரிப்பதாகச் சொன்னார்
அந்தணர்களுடைய கர்வத்தால் மயிலாப்பூர் சாதாரண பிரஜை
பாதிக்கப்பட்டார்கள்.

அரிசி எல்லாம் மாட்டு வண்டிகளில் ஏற்றி செழுங்கழுநீர்
இறக்கி, பிறகு ஆட்களை வைத்து மேலேற்றி
டைய மாளிகைக்கு எடுத்துக் கொண்டு போனான்.
முற்றத்தையும், கீழ் உள்ள கூடத்தையும் சுத்தமாக்கினான்.
இலைகளை பொடி செய்து அரைத்து தரை முழுவதும்
கினார்கள். அது காய்ந்ததும் அரிசியை கொண்டு வந்து
டினார்கள். மாடியிலுள்ள கூடத்திலும் அம்மாதிரி நடந்தது.
இரண்டு அறைகள் தவிர மற்ற எல்லா இடத்திலும்
அரிசிகள் குவிக்கப்பட்டு இருந்தன.

அவன் அரசாங்க கணக்கு சரி பார்த்துக் கொண்டிருந்தான்.
குறைகிறதே என்று முட்டிக் கொண்டான். அவன்
கவலையானாள். வீரபத்திரர் கோவிலுக்கு ஒரு தூக்கு
கொண்டு வந்தீர்களே. எப்படி வந்தது. யார் கொண்டு
வந்தார்கள்" அவன் சட்டென்று மிரண்டான். அவன் கேள்விக்கு

பதில் சொல்ல முடியாமல் இருந்தான்.

"ஆமாம். நான்தஜன் காக கொடுத்து வாங்கினேன். நானே நேரி[illegible] யாக வாங்கியதால் குறித்து வைத்துக் கொள்ள மறந்து விட்டேன். மி[illegible] நன்றி" அவள் கைகளை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டா[illegible]

"நன்றாக இருக்கிறது கதை. நாலு பேர் நடமாடும் இடத்தி[illegible] கையை பிடிக்கிறீர்களா?" அவள் செல்லமாக கோபித்து கொண்டாள்.

"இல்லை. நான் நம்முடைய அறைக்கு வந்து தனியாக உன்[illegible] கட்டிப் பிடித்துக் கொள்கிறேன்" என்று பதில் சொன்னான்.

"அய்யோ, அத்தையிடம் கேட்க வேண்டும்" அவ[illegible] பதறினாள்.

"எதற்காக இதை அத்தையிடம் கேட்க வேண்டும்"

"அத்தையிடம் கேட்டுவிட்டுத் தான் உங்களிடம் நெருக்கம[illegible] இருக்க விரும்புகின்றேன். அத்தை ஆசீர்வதிப்பது தான் நல்லது" அவள் ஓடிப் போய் அத்தையிடம் கேட்டாள்.

"தாராளமாகச் செய், என் பிள்ளை ஏங்கிக் கொண்டிருக்கிறா[illegible] என்று தெரியும். ஏகப்பட்ட பொறுப்புகள் அவனுக்கு. இத்தனைக்கு நடுவில் உன்னோடு அவன் சந்தோஷமாக இருக்கிறானென்றா[illegible] எனக்கு அது போதும்" என்று ஆசீர்வதித்தாள். அவள் ஓடிப் போ[illegible] குளித்து விட்டு சீராக உடுத்திக் கொண்டு, நெற்றியில் பொட்டிட்டு பூச்சூடி புருஷனுடைய இடம் தேடி ஓடினாள். அறைக் கதவு திறந்து பழத்தட்டோடு உள்ளே நுழைந்தாள். உள்ளே அவள் புருஷ[illegible] அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மெல்லப் போய் முதுகு தட[illegible] எழும்பினாள். அவன் எழுந்து உட்கார்ந்தான்.

"அந்த ஒரு கழஞ்சு எங்கே இருக்கிறது கண்டுபிடித்தாயா" என்று கேட்டான். அவள் அவனை பரிதாபமாகப் பார்த்தாள்.

தூக்கக் கலக்கத்திலும் அரசாங்க பொறுப்பு தானா, தூங்கு, தூங்கு நாளை பார்த்துக் கொள்ளலாம்" அவள் மெல்ல அவனை படுக்கையி[illegible] சாய்த்தாள். அவனை அணைத்துக் கொண்டு படுத்தாள், கன்னங்[illegible] ளில் முத்தமிட்டாள். அவன் அசையாது கிடந்தான். அவ[illegible] உடம்பில் சூடு இருப்பது தெரிந்தது. அத்தனை களைப்பு அத்தனை மூளைக் கொதிப்பு என்ன செய்வது பாவம் என்று



அவன் தலையை தடவிக் கொடுத்தாள். உறங்கிப் போனாள்.

திருமணம் ஆகி இத்தனை நாளில் ஒருமுறைக் கூட அவனை [illegible] தழுவியது இல்லை. வாயார முத்தமிட்டது இல்லை. [illegible] செய்வது என்று ஏங்கினாள். கபாலீஸ்வரர் கோவிலுக்கு [illegible] வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். அங்கு போய் [illegible]யிடுவது தான் நல்லது என்று அவளுக்கு தோன்றியது.

[illegible]நாள் காலை பழத்தட்டோடு கபாலி கோவிலுக்குப் போனாள். [illegible] வகை பூக்களெல்லாம் அவள் கூடையில் நிரம்பி இருந்தன. கபாலி கோவிலின் மதில் சுவற்றின் மீது வங்கக்கடல் மோதி [illegible] எழுந்தது. அலைகள் சிறு துளிகளாக மாறி கோவில் முழுவதும் ஒரு சிலிப்பை ஏற்படுத்தியது. அவள் போர்த்திக் கொண்டு உள்ளே போனாள். கூதற்காற்று பிய்த்து அடித்தது.

கருவறைக்குள் போனதும் சட்டென்று வெப்பமாயிற்று. [illegible] மிகத் தெளிவாக ஒரு அதிர்வு உணர முடிந்தது.

எல்லாம் வல்ல சிவனே, மங்கள ரூபனே, மாங்கல்யம் [illegible]னே என் புருஷனை எனக்கென்று சில மணி நேரம் [illegible]க் கொடு. என்று மனமுருக வேண்டினாள்.

"உன் பொருள் உனக்குத் தான்" யாரோ கருவறையில் உரக்க [illegible] கொண்டு போனார்கள். அவளுக்கு உத்தரவு கிடைத்தது [illegible] சந்தோஷமானாள். அர்ச்சகர் கொடுத்த பழங்களோடு [illegible] திரும்பினாள். அவளைத் தாண்டிப் போன சிவாச்சாரியார் சட்டென்று திரும்பி பார்த்தார்.

"அய்யா அழைத்தீர்களா?"

"இல்லை அம்மா. உன்னை தாண்டி போகும் பொழுது ஒரு தெய்[illegible] வாசனை வீசுகிறது. உடம்பு அதிருகிறது. நீ அற்புதமான பெண் பிள்ளை. கற்புக்கரசி என்பது இந்த அதிர்வில் தெரிகிறது. நீ [illegible]க்கு வாழ வேண்டும். தீர்க்க சுமங்கலி பவ. தீர்க்க சுமங்கலி [illegible] என்று ஆசீர்வதித்தார்" அவள் மேலும் சந்தோஷமானாள்.

துள்ளி குதித்து வீட்டிற்கு வந்தாள். அவன் வெளியே போயிருப்பதாகச் செய்தி சொன்னார்கள்.

இந்த முறை திருவல்லிக்கேணி கடற்கரை ஓரம் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே பெரிய சதுப்பு நிலம்

இருந்தது. சதுப்பு நிலத்துக்கு நடுவே கருவேலி மரங் வளர்ந்திருந்தன.

அங்கிருந்து ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக ஊருக்கு புகுந்து விடுவதாகவும், திருவல்லிக்கேணியை தாக்குவதாக இன்னொரு கூட்டம் மயிலையைத் தாக்குவதாகவும் அவனு செய்தி வந்தது.

"நீ கோட்டை கட்டிக் கொண்டு பிரமாதமாக கதவை த போட்டுக் கொள்கிறாய். எங்களுடைய வாழ்க்கை எல்லாம் என ஆவது. தெருவில் நூறு ஓநாய்கள் ஓடுகிறதய்யா. காவல் காக்கிற வந்து என் வீட்டு கூரை மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறா நான் மேலே இருப்பது ஓநாயா, ஆளா என்று தெரியாமல் பத கொண்டிருக்கிறேன்"

"என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். நாம் தா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்"

"எப்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வீட்டு தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளலாம், திண்ணையில் படுத் வேலிப்படலை தாண்டி ஓநாய் வருகிறதய்யா"

"என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்.

"இந்த சதுப்பு கூட்டத்தை அழிக்க வேண்டும். இந்த கருவே மரங்களை வெட்ட வேண்டும். இந்த ஓநாய்கள் அத்தனை அடித்து கொல்லப்பட வேண்டும்.

"கூடாது" அவன் மறுத்தான்.

"என்ன?"

"இது ஒரு பாதுகாப்பு, ஒரு அரண், கோட்டை மட்டுமே அர ஆகி விடாது. இந்த மாதிரி கருவேலஞ்செடிகளும், சதுப்பு நிலமு எதிரிகள் உள்ளே வராமல் இருக்க பாதுகாப்பாக அமைகின்ற இது இயற்கை கொடுத்த வரம். இதை நான் அழிக்கக்கூடாது"

"அப்போது ஓநாய்கள் என்ன வரம். அல்லது யாருக் உண்டான சாபம். உனக்கில்லை. எனக்கு மட்டும் தானா, நா மட்டும் அவஸ்தைபட வேண்டுமா, இந்த ஓநாய்கள் அழிந்த வேண்டும்" அந்தணர் கத்தினார்.



அவன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். [illegible] தானே நின்று காவல் காப்பதாய் சொன்னான். அடுத்த [illegible] நாட்கள் இரவெல்லாம் குதிரை ஏறி ஓநாய்களை ஊருக்குள் [illegible] தீப்பந்தம் எரித்து உள்ளே துரத்தினான்.

ஓநாய்கள் அவன் கோலிற்கும், அம்புக்கும் பயந்தன. [illegible] நில காட்டுக்குள்ளேயே ஊளையிட்டு கிடந்தன. அவன் [illegible] ஏங்கியபடி காத்திருந்தான்.

[illegible] விடியலில் கொம்பூதும் சத்தம் கேட்டது. உறங்கிக் [illegible] தலைவனை உலுக்கி எழுப்பினாள். அவன் இறங்கி ஓடிப் போய் [illegible] திருக்கடல் மல்லையில் பறை அடிப்பவர்கள் வந்து [illegible] என்றும், அவர்களுக்கு அன்று மதியம் கறி உணவு [illegible] வைக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அவன் [illegible] தயாரானான்.

சோழர்களுடைய படை எடுப்பு உறுதி செய்யப்பட்டு விட்டது. அருண்மொழித் தேவரை வீட்டிற்கு அழைத்து வர வேண்டும் என்று அவன் விரும்பினான். தன் மனைவியிடம் தெரிவித்தான். அவள் சந்தோஷமாக 'சரி' என்று சொன்னாள். அவள் கண்ணில் இருந்த ஏக்கம் அவனுக்கு தெரியவில்லை. அவன் மனம் முழுவதும் [illegible] சோழனும், வந்தியத் தேவரும், அருண்மொழிப் [illegible]னும், பரமன் மழபாடியும் தான் நின்றிருந்தார்கள். மனைவி [illegible] அக்கறை அவனுக்கு சற்று குறைவாகவே இருந்தது.

சிறிது நேரத்தில் வேறொரு எக்காளம் கேட்டது. என்ன என்று பார்த்த போது பறை அறிப்பவர்கள் தாண்டி இராஜராஜ பிரம்மரா[illegible], உத்தம சோழ மிலாடுடையாரும், உத்தம சோழ கோனும் வருகிறார்கள் என்ற செய்தி அவனுக்கு வந்தது. அந்தப் படைகளை அவன் முன்னமே அறிந்திருந்தான். வாள் முதுகு படை வீரர்கள் என்பது அவர்களுக்கு பெயர் என்றும் தெரிந்திருந்தது.

பூரண கும்பத்தோடு அவர்களை வரவேற்க அந்தணர்களை [illegible]னான். அந்த அந்தணர் மறுத்தார், மற்ற அந்தணர்கள் [illegible] கொண்டார்கள். பூரண கும்பம் தயார் செய்தார்கள். வேளாளர்கள் ஒன்று கூடினார்கள். மறவர்கள் வந்து நின்றார்கள். [illegible] மொத்தமும் கூட, திருமல்லையின் எல்லையில் மந்தைகள்

மேயும் புல்வெளித் தாண்டி அந்த குதிரைப்படை தூரிதம வந்தது. இவன் எதிரே வந்ததும் நின்றது. குதிரை வீரர்க கிழக்கு நோக்கி திரும்பினார்கள். வரிசையானார்கள்.

உத்தமசோழ மிலாடுடையார் கீழே இறங்கினார். இராஜரா பிரம்மராயர் கீழிறங்கினார்.

"ஆ. இந்த இளைஞனை எனக்குத் தெரியும். அருண்மொழி தேவரோடு பார்த்திருக்கிறேன்"

"ஆமாம். நானும் பேசி இருக்கிறேன்"

"இதுதான் உங்கள் ஊரா. இதுதான் திருமயிலையா. இப்போ நான் முதன் முதலில் வருகிறேன். கபாலீஸ்வரர் கோவில் எங் இருக்கிறது" என்று ஆவலாகக் கேட்டார்.

அவர்கள் பொற்குடத்தை தொட்டு தங்கள் வருகைை வெளிப்படுத்தினார்கள். அவர்களை வரவேற்க ஆடல், பாட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. எக்காளங்கள் ஊதப்பட்டன. சங் முழங்கப்பட்டது. அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்ட அவர்களை வரிசையாக தன்னுடைய இடத்திற்கு செங்கழு ஓடை தாண்டி அவன் அழைத்துப் போனான்.

பிரம்மாண்டமான வீட்டில், கொல்லைப் புறத்தில் உண தயாராகி இருந்தது. வீரர்கள் வரிசை ஆனார்கள். குதிரைகளுக் புல்லும், தண்ணீரும் காட்ட அந்த ஊர் பஞ்சமர்களுக்கு உத்தரவிட பட்டது. வீரர்களின் முதுகை அவர்கள் தேய்த்து விட்டார்கள். குதிை களை தட்டிக் கொடுத்தார்கள். கொள்ளும், புல்லும் குதிரைக ஆவலாக தின்ன அவர்கள் நீர் காட்டினார்கள்.

மிகப்பெரிய மந்தாரை இலையில் கடச்சுட பொங்கல் உணவு காய்கறி சோறும் பரிமாறப் பட்டன. எல்லோருக்கும் தொன்னையி பாயசம் தரப்பட்டது. ஆட்டு மாமிசம் இல்லையா" மிலாடுடையா கேட்டார்.

"முதன் முதலில் வருகிறீர்கள். மாமிச உணவு வேண்டா கோவில் பிரசாதம் போல இவைகளை தருகிறேன்" என்று சொல்ல, அவர் அந்த உணவை கண்ணில் ஒற்றிக் கொண்டார் வழித்து வழித்து சக்கரைப் பொங்கல் சாப்பிட்டார். இன்னும் கேட்டார். எல்லா வீரர்களும் வயிறு புடைக்க சாப்பிட்டார்கள்



அங்கங்கே படுத்துக் கொண்டார்கள். குடிப்பதற்கு நீரும், மோரும் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அயர்ந்து உறங்கினார்கள்.

மிலாடுடையாரையும், இராஜராஜ பிரம்மராயரையும் உத்தம சோழ கோனையும் அவன் வீட்டிற்குள் அழைத்துப் போனான்.

மனைவியை அறிமுகப்படுத்தினான்.

"என்ன நிறம், மறவர்களுக்கு இப்படி ஒரு நிறம் இல்லையே. நீ மறவனா, வேளாளனா"

"நான் வேளாளன்"

"ஆஹா. அப்படியும் நான் இப்படியொரு நிறத்தை பார்த்த தில்லையே. உன் மனைவி தங்கநிறமாக அல்லவா இருக்கிறாள்" உத்தம சோழ மிலாடுடையார் வியக்க, அவள் வெட்கப்பட்டாள்.

"பெரிய பெரிய கண்கள். மிக அழகு. மிக அழகு. உன் பெயர் என்னம்மா"

"என் பெயர் தாமரைச் செல்வி" அவள் மிருதுவான குரலில் சொன்னாள்.

"குரலும் வீணையின் நாதம் போல் இருக்கிறது. வாழ்க. வாழ்க. நல்ல குழந்தைகளை பெற்றெடுத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும்" மிலாடுடையார் ஆசீர்வதித்தார். அவள் மறுபடியும் ஏங்கினாள்.

வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு படை வீரர்களை அறிமுகப்படுத்தினான். பிற்பகல் அலை கடல் மோதும் மதில் சுவருடைய கபாலீஸ்வரர் கோவிலுக்கு போனார்கள். தனித்த பூஜை, அலங்காரங்கள் நடைபெற்றன. இராஜராஜ பிரம்மராயர் கபாலி கோவிலுக்கு தன் சார்பாக விளக்கெரிப்பதற்கு மூன்று பொன் கழஞ்சுகள் கொடுத்தார். உத்தம சோழ கோன் வெள்ளிக் காசுகள் கொடுத்து மாதம் ஒரு நாள் இராஜேந்திரன் திருவாதிரை நட்சத்திரத்தின் போது வருகின்ற அத்தனை பக்தர்களுக்கும் சக்கரைப் பொங்கல் பரிமாறச் சொன்னார்.

"சாதங்கள் சுவையாக இருந்தன. ஆனால் அடுத்து வரும் படை வீரர்கள் கறிசோறு எதிர்பார்ப்பார்கள். பறை அடிப்பவருக்கு கறிசோறு நிச்சயம் வேண்டும் இருக்கிறதா"

"இருக்கிறது. அதற்குண்டான ஏற்பாடுகள் செய்து விட்டேன்.

உங்களுக்கு பிரசாதமாகத் தான்"

"புரிகிறது, புரிகிறது. அது பரவாயில்லை" என்று பிரம்மராயர் சமாதானம் செய்தார்.

படை வீரர்களுக்கு என்ன உணவு என்று கேட்க, அவன் தன் வீட்டிலுள்ள அரிசிக் குவியலை காண்பித்தான். அவர்கள் திருப்தியானார்கள்.

"வேறு ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா"

அவன் மௌனமாக இருந்தான்.

அவர்கள் அதை கண்டுகொள்ளாமல் நகர்ந்தார்கள். ஆனால் இராஜராஜ பிரம்மராயர் சட்டென்று நின்றார்.

"உன்னை தான் கேட்கிறேன், வேறு ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா"

"பிரச்சனை ஒன்றும் பெரிதாக இல்லை"

"சரி, சிறிதாக என்ன பிரச்சனை"

"சில அந்தணர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்"

"ஏன்?"

"அரிசியை விற்பதற்கு முடியாது என்கிறார்கள்"

"யாருக்கு விற்க முடியாது என்கிறார்கள்"

"இராஜேந்திர சோழருக்கு விற்பதற்கு இல்லை என்கிறார்கள்"

"என்ன?" சீறினார்.

"நாலு குதிர் அரிசி இருக்கிறது. நாலு குதிரும் எனக்கு வேண்டும். தான் வேண்டுமானால் எந்த விலைக்கும் விற்பேன். எதற்காக நான் இராஜேந்திர சோழருக்கு விற்க வேண்டும் என்று கொஞ்சம் எகத்தாளமாக பேசுகிறார்"

"அப்படியா, இங்கு தலைமை ஏற்பது யார்"

"அந்தணர்கள் தான். அந்தணர் சபை தான் இங்கு எல்லா முடிவும் செய்கிறது"

"அந்தணர் சபையை கூட்டச் சொல். இன்றிரவு அந்தணர் சபையில் பேசுகிறேன்"

அன்று அவன் அந்தணர் சபையை கூட்டச் சொன்னான்.



"யார் கூட்டச் சொன்னது?"

"இராஜராஜ பிரம்மராயர்"

"அட, அந்தணரா, அருண்மொழிப் பட்டனுடைய எதிராளல்லவா"

"இல்லை, அப்படியெல்லாம் இல்லை. இவர் பிராமணர் தான். ஆனால் அருண்மொழி பட்டரோடு சம்பந்தப்பட்டவர் இல்லை"

"அருண்மொழி தான் கொஞ்சம் அட்டகாசமான ஆள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். இவர் அந்தணர் தானே" ஒரு அந்தணர் வேகமாக பேசினார். அன்று மாலை அந்தணர்களுடைய சபை கூடியது.

சபைக்கு மக்கள் எழுந்து வணக்கம் செலுத்தினார்கள். சபை மக்களை ஆசீர்வதித்தது. அதற்குப் பிறகு, இராஜராஜ பிரம்மராயரும், உத்தம சோழ மிலாடுடையாரும், உத்தம சோழ கோனும் உள்ளே நுழைந்தார்கள். பொதுமக்கள் எழுந்து நிற்க அவர்கள் பொது மக்களை தனித்தனியாக குசலம் விசாரித்தார்கள். உள்ளே ஏறினார்கள். அந்தணர்கள் உட்கார்ந்திருந்த திண்ணைக்கு முன்பு நாற்காலி போட்டுக் கொண்டு அந்தணர்களுக்கு முதுகு காண்பித்தார்கள்.

அந்தணர்கள் முகம் மாறியது.

நாங்கள் உங்களை சந்திக்கத் தான் வந்திருக்கிறோம். இன்று மதியம் நீங்கள் போட்ட உணவு அற்புதம். மயிலாப்பூர் அரிசியும், பருப்பும் இன்னும் சுவையாக இருக்கின்றன. இப்படிப்பட்ட உணவை நாங்கள் சாப்பிட்டதே இல்லை. யார் சக்கரைப் பொங்கல் செய்தது. அவருக்கு தங்கக் காப்பு போட வேண்டும் என்று சொல்லி, சக்கரைப் பொங்கல் செய்தவருக்கு சிகப்பு பட்டுத் துணியை போர்த்தினார்.

கோவிலுக்காக உத்தம கோன் மூன்று கழஞ்சு நெய் வார்ப்பதற்காகக் கொடுத்தார். மக்கள் தங்கள் கோவிலை கொண்டாடுவது குறித்து சந்தோஷமானார்கள்.

"உங்களுக்கு என்ன குறை?" என்று இராஜராஜ பிரம்மராயர் கேட்க, மக்கள் மௌனமாக இருந்தார்கள்.

"உங்கள் குறை என்ன? என்று இராஜேந்திரர் கேட்டு வரச் சொன்னார். உங்களுக்கு என்ன குறை?"

"ஊர் இரண்டு பட்டு கிடக்கிறது அய்யா" ஒரு வேளாள எழுந்து நின்று சொன்னார்.

"என்ன இரண்டு பட்டு நன்றாகத் தானே இருக்கிறீர்க ஒன்றும் சண்டை சச்சரவு காணோமே"

"இல்லை, அந்தணர்கள் ஒரு பக்கமும், வேளாளர்கள் ஒரு பக்கமாக இருக்கிறார்கள். அதற்கு நடுவிலே நாங்கள் மாட்டி கொண்டு முழிக்கிறோம். நான் கம்மாளன். கருந்தட்டான் வேலை செய்கிறவன். என் வேலையை முடித்துக் கொடு. உன் வேலையை முடித்துக் கொடு என்று இருவரும் மாற்றி மாற்றி பேச, யாருக்கு நான் சலுகை செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். அந்தணர்கள் மிக வேகமாகப் பேசுகிறார்கள்"

"அந்தணர்கள் என்ன வேலை கேட்கிறார்கள்"

"உழுகலப்பை தட்டிக் கொடு என்று கேட்கிறார்கள்"

"வேளாளர்கள் என்ன வேலை கேட்கிறார்கள்"

"வேளாளர்களும் உழுகலப்பை கேட்பதோடு, ஆயுதங்களும் கேட்கிறார்கள்"

"எதற்காக ஆயுதம்?"

"இரவு இங்கு காவல் காப்பது மறவர்கள் அல்ல. மறவர்கள் இங்கு மிகக் குறைவு. வேளாளர்கள் தான் காவல் காக்கிறார்கள்"

"அப்படியானால் அவர்களுக்குத் தானே முன்னுரிமை தர வேண்டும். ஒரு தேசத்தின் பாதுகாப்பு முக்கியமல்லவா. அதை விடவா உழுகலப்பை முக்கியம். உழுகலப்பை எப்படி உருப்படியாக செய்ய முடியும். தேசத்தை காவல் காக்கின்ற வேலை செய்தால் தான் செய்ய முடியும். எனவே வேளாளர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்" என்று சொல்ல பின்பக்கத்திலிருந்து கனைப்புச் சத்தம் கேட்டது.

"யார் கனைத்தது. எதற்காக கனைக்கிறீர்கள்?" இராஜராஜ பிரம்மராயர் வெடுக்கென்று கேட்டார்.

கனைத்தவர் எழுந்து வந்தார்.

"எங்களுக்கென்று சில குறைகள் இருக்கின்றன"

"கேட்கிற பொழுது சொன்னால் போதும். அதுவரை போய் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று பணிந்து பேசியவரை விரட்டி



அனுப்பினார்.

"வேறு என்ன குறைகள் இருக்கிறது"

"அந்தணர்கள் மற்றவர்களை இழிவாக நடத்துகிறார்கள் அய்யா. தங்கள் எதிரே உட்காரக் கூடாது என்று சொல்கிறார்கள். இங்கே சீராளன் என்பவர் தான் வேளாளத் தலைவனாக இருக்கிறார். அந்த சீராளனை அவர்கள் உட்கார விடுவதில்லை. அவர்கள் எதிரே கைகட்டி நிற்க வேண்டும் என்று சொல்கிறார்கள், அவர்கள் உட்கார்ந்து பேசுகிறார்கள்"

"இது நன்றாகவா இருக்கிறது. அந்தணர்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மற்றவர்களும்"

"மற்றவர்கள் முக்கியம் என்று இவர்கள் நினைப்பதே இல்லை. இவர்களுக்கு எதிரே தொலைதூரத்தில் கைகட்டி நிற்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட காட்சிகளெல்லாம் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோழ தேசத்தில் அவ்விதம் இல்லை. எல்லோரும் சமமாக நடத்தப்படுகிறார்கள். கருந்தட்டார்களுக்கு பெரிய மரியாதை இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். ஆனால் இவர்கள் அவ்விதம் செய்வதே இல்லை"

"அய்யா, நான் மரவேலை செய்கிறவன். குறிப்பாக ஏற்றம் செய்வது என்னுடைய வேலை. இங்கு செழுங்கழிநீர் ஓடை என்று அருமையான ஓடை இருந்தாலும் அந்த நீர் பல வழிகளில் பிரிந்து கேணிகளில் பாய்கிறது. கேணிகளில் உள்ள நீரைத் தான் நாங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்துகிறோம். ஆக, எல்லா வயல்களிலும் ஏற்றம் இருக்கிறது. ஏற்றத்தில் முன்னும், பின்னும் நடந்து அவர்கள் நீர் இறைக்கிறார்கள். ஏற்றம் எண்ணெய் வார்க்கப்பட வேண்டும். அடிக்கடி சரி செய்யப்பட வேண்டும். அப்படி செய்வதற்கு பல பலத்த போட்டி இருக்கிறது. தங்களுடைய ஏற்றங்கள் சரி செய்யாவிட்டால் மிகக் கடுமையாக சபிக்கிறார்கள்"

"என்னவென்று?"

"நீ நாசமாகப் போவாய். உன்னுடைய தேசம் நாசமடைந்து போகும். என்னை எந்த தேசமும் ஏற்கும், உன்னை உன் வீடு தவிர வேறு எதுவும் ஏற்காது என்றெல்லாம் பேசுகிறார்கள்"

"பேசியவர் யார்?"

"ஒரு அந்தணர்"

"எந்த அந்தணர் என்று தெரியுமா?"

"தெரியும்" அவன் சுட்டிக் காட்டினான்.

"தயவு செய்து இப்படி வாரும்" இராஜ ராஜ பிரம்மராயர் அவரை அழைக்க அவர் வந்து நின்றார்.

"தவறு செய்கிறவர்களை பிரம்பால் அடிக்கும் உரிமை இராஜேந்திர சோழர் எனக்கு கொடுத்திருக்கிறார். வாள் முதுகு குதிரைப் படையின் தளபதி நான், கீழைச் சாளுக்கியம் நோக்கி யுத்தத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன். இங்கு அமைதி ஏற்பட்டால் தான் யுத்தம் சரிவர நடக்கும். இங்கு அரிசி கொடுக்க மறுத்தால், அரிசி கொடுப்பவரை தடுத்தால் மிகக் கடுமையாக நான் நடந்து கொள்வேன். இது முதல் எச்சரிக்கை. அடுத்த முறை எச்சரிக்க மாட்டேன். பிரம்பால் உடம்பு முழுவதும் அடிப்பேன்"

"நான் அந்தணன்" அவர் சீறினார்.

"அப்படியா, அந்தணரை அடிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறதா, யார் சொன்னது?"

"மனு தர்மத்தில் சொல்லி இருக்கிறது. அந்தணனை அடித்தால் அது மிகப் பெரிய பாவம். காராம் பசுவை கொன்ற பாவம்"

"இதோ அந்த காராம் பசுவை கொன்ற பாவம் எனக்கு வரட்டும்" இராஜராஜ பிரம்மராயர் கையிலிருந்த பிரம்பை உருவினார். அவர் முதுகை குறி வைத்தார். ஓங்கி ஒரு அடி வைத்தார்.

'சொடேர்' என்ற சத்தம் அங்கு கேட்டது.



## 25

"திருபுவனமாதேவி, அத்தையிடம் போய் விடைபெற்று வர வேண்டும். அந்தண பேரையும் வரச் சொல். அத்தைக்கு கொடுப்பதற்கு பழங்களும், புஷ்பங்களும் எடுத்துக் கொள். அத்தைக்கு மேலே போர்த்திக் கொள்ள சிறந்த பட்டில் சால்வை ஒன்றை எடுத்துக் கொள்.

குந்தவையை வரச் சொல்ல வேண்டாம். என்னுடைய மனைவியர் கூடவே வந்தால் போதும். அதிகாரிச்சிகளை முன்னே அனுப்பி என் வருகையை தெரிவித்து விடு. அத்தை தயாராக இருக்கட்டும். அவருடைய அந்தப்புரத்தில் திடும்மென்று நுழைவது நன்றாக இருக்காது" இராஜேந்திர சோழர் கட்டளை இட அவர்கள் எல்லோரும் பரபரப்பானார்கள்.

சீக்கிரமே கையுறைகளோடு தயார் ஆனார்கள். திருபுவனமாதேவி கிளம்பலாம் என்று சொன்னதும், மன்னர் சால்வையை மேலே போர்த்திக் கொண்டு உடைவாளை இடுப்பில் தரித்துக் கொண்டு தன்னுடைய அந்தப்புரத்திலிருந்து குந்தவையாரின் அந்தப்புரத்திற்கு நடுவே உள்ள சிறிய பாலத்தை கடந்தார். அது ஒரு திறந்த வெளிப் பாலம். அங்கிருந்து பார்த்தால் அரண்மனை வாசல் தெரியும். அரண்மனை வாசலில் போர் வீரர்கள் கூட்டம் அதிகம் இருந்தது. சற்று நேரம் அதை கவனித்து விட்டு அவர் தொடர்ந்து நடந்தார்.

அவர் வந்ததும் வாசற்கதவு பளிச்சென்று திறக்கப்பட்டது. அதிகாரிச்சிகள் கவனித்து திறக்கிறார்கள் என்று தெரிந்தது. முன்னே ஒரு அதிகாரிச்சி வணங்கி வழிகாட்ட கொஞ்சம் இருளான அந்த இடத்தில் விளக்கொளியை காட்டியபடி இன்னொரு பெண்மணி நடந்து வந்தாள். திரும்ப மறுபடியும் வெளிச்சம் வந்தது. நீண்ட மேற்கத்திய நடையில் நடந்து போய் குந்தவையாரின் அறைக்குள் நுழைந்தார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த குந்தவையார் எழுந்து நின்று "வருக வருக. மன்னர் மன்னரே வருக" என்று கை நீட்டி வரவேற்றார்.

"நான் இராஜேந்திரன். உங்களுடைய மருமகன். உங்களை காண வந்திருக்கிறேன்" என்று பணிவோடு மன்னர் கை கூப்பினார்.

"என்னதான் நீ எனக்கு உறவானாலும், என்னதான் என்னுடைய தம்பியின் பிள்ளையானாலும், இந்த சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. முடிசூடிய மன்னன். பண்டிதச் சோழன். வீரச்சோழன், உன்னை நான் எழுந்து நின்று வரவேற்காமல், வருக, வருக மாமன்னா, என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது. உள்ளே வா"

"ஏன் அங்கேயே நிற்கிறீர்கள். உள்ளே வாருங்கள்" என்று

இராஜேந்திர சோழரின் மனைவியருக்கு கட்டளை இட, அவர்கள் உள்ளே வந்தார்கள். இரண்டு பேரும் மிக நீண்ட ஒற்றை ஆசனத்தில் மூலைக் கொருவராய் உட்கார்ந்து கொண்டார்கள். நடுவில் உள்ள ஆசனத்தில் தட்டுகள் வைக்கப்பட்டன.

"என்ன சம்பிரதாயமடா இது. ஒரே வீட்டிற்குள் மாறி மாறி தட்டுகள் கொடுத்துக் கொள்ள வேண்டுமா. அவன் தான் சொல்லுகிறான் என்றால் நீங்கள் அதற்கு மேல்" குந்தவை அத்தை அலுத்துக் கொண்டாள்.

"முக்கியமான காரியமாக கிளம்புகின்றேன். ஆகவே சொல்லி விட்டு போகலாம் என்பது என் எண்ணம். அப்படி சொல்லும் பொழுது வெறும் கையோடு போக வேண்டாம் என்பதும் என் எண்ணம்"

"தெரியும் இராஜேந்திரா. நீ என்ன சொல்ல வருகிறாய் என்று யூகிக்க முடிகிறது. ஆனாலும் உன் வாயால் சொல். என்ன விசேஷம்"

"அத்தை தஞ்சையை விட்டு இடம் பெயர்ந்து ஜெயங்கொண்டத்தில் நான் கட்டி இருக்கின்ற அரண்மனைக்கு குடிபெயரப் போகிறேன். முக்கால்வாசி வேலைகள் முடிந்து விட்டன. இன்னும் சிறிது வேலைகள் இருக்கின்றன. சுண்ணம் அடிப்பது போன்ற விஷயங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். மர நாற்காலிகள், கட்டில்கள், பஞ்சு மெத்தைகள், பரணைகள் போன்றவை போக வேண்டும். சமையல் அறைக்கு உண்டான விஷயங்கள் போக வேண்டும். குளிப்பதற்காக மேல்நிலைத் தொட்டி கட்டி கயிறுகள் மூலம் தண்ணீர் ஏற்றி, அங்கிருந்து குளியல் அறைக்கு அருவி போல் தண்ணீர் கொட்டுவதற்கு ஏற்பாடு ஆகி இருக்கிறது. நீர் ஊற்று போல சில விஷயங்களை செய்திருக்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது.

நித்த விநோதப் பெருந்தச்சன் அற்புதம் செய்கிறார். குளியல் அறையை பார்த்ததும் அப்போதே குளிக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் தயாராகவில்லை என்று கை விரித்து விட்டார்"

"ஆமாம். நீரில் நீ கூத்தடிக்க ஆரம்பித்தால் ஒரு நாள் போதாதே" என்று அத்தை சொல்ல,

அங்குள்ள அவன் மனைவிகள் வெட்கப்பட்டு சிரித்தார்கள்.

"வீரமாதேவி எப்படி இருக்கிறாய்?" அத்தை திரும்பி வீரமாதேவியை கனிவுடன் பார்த்தாள்.

"சரியாகி விட்டது. நலமாகி விட்டேன். ஆனால் இவர் என்னை



அழைத்துக் கொண்டு போக மாட்டேன், பரவையாரை அழைத்துப் போகிறேன் என்று சொல்கிறார்"

"பரவையா? போருக்கா என்ன இது விளையாட்டு. அவள் கொஞ்சம் நொய்மையான பெண் அல்லவா"

"எத்தனை நாள் நொய்மையாக இருப்பது. கொஞ்சம் வலு வர வேண்டும் என்பதற்காகத் தான் போர் பார்க்க அவளை அழைத்துப் போகிறேன். அதுவும் தவிர, என் உணவுகளுக்கு என்னுடைய அதிகாரிகளை மட்டும் நம்பாமல், சற்று சரியாக உணவு கொடுக்க பரவைக்கு தெரியும் என்பது என்னுடைய எண்ணம்"

"வீரமாதேவி வேண்டாமா"

"இல்லை. பிற்பாடு அழைத்துக் கொள்கிறேன். அதைத் தவிர வேறு ஒரு வேலை வீரமாதேவிக்கு இருக்கிறது"

"என்ன வேலை?"

"நான் இந்த இடம் விட்டு நகர்ந்ததும் ஒரு நல்ல நாள் பார்த்து இவர்களையெல்லாம் நீங்கள் ஜெயங்கொண்டத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். என்ன தேதி என்பதை கிருஷ்ணன் ராமன் குறித்துத் தருவார். அப்படி நேரம் குறித்து தந்த பிறகு இவர்கள் அத்தனை பேரும் அந்த இடத்திற்கு குடிபெயர வேண்டும். அந்த குடிபெயர்தலை வீரமாதேவியின் தலைமையில் செய்யப்பட வேண்டும். அவர்களை அன்போடும், ஆசியோடும் நீங்கள் வழி அனுப்பி வைக்க வேண்டும். என்னுடைய இடம் இப்போது உங்களுக்குச் சொந்தம். நான் குடியிருந்த அறையில் நீங்கள் வந்து குடியேறலாம்"

"இல்லை. இந்த இடம் விட்டு நான் நகரப் போவதில்லை. நீ குடியிருந்த இடத்தில் உன்னுடைய மைந்தர்கள் யாரையாவது குடி வை"

"சரி, உங்களுக்கு வேண்டாமென்றால் என்னுடைய இடத்தை இராஜராஜதித்தன் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் வர மாட்டீர்கள் என்று தெரியும். இருந்தாலும் உங்களுக்குத் தான் முதல் உரிமை என்று சொல்வதற்காக நான் இந்த வார்த்தையைச் சொன்னேன்"

"இராஜராஜதித்தன் எப்பொழுது இந்த இடத்திற்கு குடிபெயரலாம் என்ற ஆவலோடு இருக்கிறான்"

"உன்னுடைய தகப்பனாருக்கு பதினாறு மனைவிகள், இப்பொழுது சிலர் தான் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களையும்

சந்தித்து விட்டு வர நான் ஆள் அனுப்பி இருக்கிறேன். வந்து விடுவார்கள். எல்லோருமே நோன்பு நோற்று துறவுக் கோலம் பூண்டிருப்பதால் அதிகம் பேச மாட்டார்கள். ஆனால் அவர்கள் ஆசிகள் உனக்கு உண்டு"

பெண்கள் பலர் வர இராஜேந்திர சோழர் எழுந்து நின்றார். கை கூப்பினார். ஒவ்வொரு பெண்ணாக போய் பணிந்து நின்றார். யார் யார் என்று முகம் பார்க்கவில்லை. தகப்பனுடைய மனைவியர் என்பது நன்கு தெரிந்தது. எல்லோரும் அவன் தலையை தொட்டு ஆசீர்வதித்தார்கள்.

"வெற்றி உனதே" என்று சொன்னார்கள். மெல்ல பின்னடைந்தார்கள்.

மறுபடியும் ஆசனத்தில் குந்தவைக்கு அருகே இராஜேந்திரர் அமர்ந்து கொண்டார்.

"சரி, என் புருஷன் எங்கே. நீ வந்து சொல்லுவது போல அவர் சொல்லிக் கொள்வாரா அல்லது ஒன்றும் சொல்லாமல் உன்னோடு ஓடிப் போய் விடுவாரா"

"அம்மா அவர் வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார். இராஜேந்திர சோழர் போன பிறகு தான் வரலாம் என்றிருக்கிறார்"

"என்ன கொடுமைடா இது. இராஜேந்திரா என் புருஷனை ஓரம் கட்டி வைத்திருக்கிறாய்" என்று சொல்ல எல்லோரும் வாய் விட்டு சிரித்தார்கள்.

"வரச் சொல் அவரை, நான் இருக்கும் போது வருவதற்கு என்ன தயக்கம்" இராஜேந்திரர் கட்டளையிட்டார்.

"இருக்கலாம். தயக்கம் இருக்கலாம்" வீரமாதேவி பேசினாள்.

"எதற்கு தயக்கம், ஏன் அப்படி சொல்கிறாய்" இராஜேந்திரர் கேட்டார்.

"அவர் கட்டிக் கொண்டு அத்தையின் கன்னங்களில் முத்தமிட்டு விடைபெறலாம் என்று ஆசைப்படலாம். அத்தைக்கு சரியாக வருமா அல்லது அவளுக்குத் தான் நன்றாக இருக்குமா. நீங்கள் இருக்கும் போது இதையெல்லாம் செய்ய முடியாது"

"புரிந்து விட்டதடி புரிந்து விட்டது" குந்தவையார் உரக்கக் கத்தினார். உன் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு இராஜேந்திரன்



போக வேண்டும் என்று சூசகமாகச் சொல்கிறாய். இல்லையா" என்று சொல்ல, மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

வந்தியத் தேவர் உள்ளே நுழைந்தார்.

"வாழ்க மருமகனே" என்று கை உயர்த்தினார்.

"வாருங்கள் மாமா" அவர் எழுந்து கை கூப்பினார்.

"அத்தையிடம் விடைபெறுவதற்காக வந்தேன். ஜெயம் கொண்டத்தில் இடம் பெயர்வதற்காக உத்தரவு கேட்டேன். அவர்கள் ஆசீர்வாதம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நல்ல நாள் பார்த்து என் மனைவியரை அனுப்பி வைக்கச் சொன்னேன். மற்றபடி கீழைச் சாளுக்கியத்தின் நிலைமைகளை நீங்கள் அத்தையிடம் பேசி இருப்பீர்கள்"

"அத்தைக்கு தெரியாத ஒரு விஷயமும் இங்கு நடக்காது"

"அத்தை உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். அந்த வணிகர்கள் எப்படி இருக்கிறார்கள்"

"அவர்களில் மூன்று பேருக்கு கை பிரிந்தாகி விட்டது. இன்னும் மூன்று பேருக்கு கை பிரிபடவில்லை. அப்படி பிரிந்தாலும் ஒரு கை நன்றாக இயங்காது. அவ்வளவு ஒட்டிப் போய் இருக்கிறது. என்றாலும் நிச்சயம் பிரிந்து விடலாம். ஒரு கையாவது இயங்கட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்"

"வலி அதிகம் இருக்கிறதா?"

"இல்லை, வலியே இல்லாது நன்றாக செய்கிறார்கள். ஒரு நாளைக்கு சில விரற்கடை தான் அறுக்கிறார்கள். மருந்து போட்டு மறுபடியும் ஒட்டி விடுகிறார்கள். மறுபடியும் அறுக்கிறார்கள். நிதானமாக வேலை செய்து கையை பிரித்து எடுக்கிறார்கள். இரண்டு கையுமே இயங்க வேண்டும் என்பது தான் ஆசை. சிலருக்கு அது முடியாது என்றதும் அவர்களுக்கு கவலை"

"தொடர்ந்து கைகளுக்கு பயிற்சி செய்து கொண்டிருந்தால் இரண்டு கைகளுமே வேலை செய்யும் என்று சொல்லுகிறார்கள், ஆனால் என்ன கோரமடா. அந்தக் கை இரத்த விளாறாகக் கிடக்கிறது"

"அள்ளி அள்ளி சாப்பிட்டவன் அம்மா. எல்லோருக்கும் அள்ளி அள்ளி கொடுத்தவன். எனக்கே ஏன் இந்த கதி என்று அந்த வணிகர்கள் அழும்பொழுது மிக வேதனையாக இருக்கிறது"

"கொள்ளை அடிக்கலாம், கொலை செய்யலாம், வணிகர்களை

அடித்து விரட்டலாம், பிரம்பால் அடித்து நொறுக்கி இருக்கலாம், ஆனால் இவ்வளவு பெரிய கொடுமை செய்கிற பொழுது இது சாதாரண விஷயமாக எனக்குத் தெரியவில்லை. சோழ தேசத்தின் மீது காழ்ப்பாக எனக்குத் தெரியவில்லை. வேறு என்னமோ இருக்கிறது" குந்தவை குமுறினார்.

"என்ன என்று நினைக்கிறீர்கள் அத்தையே"

"இது மத சம்பந்தமான விஷயமாக இருக்கிறது. நீ என்ன சாமி கும்பிடுவாயா. இப்படித்தான் கும்பிடுவாயா. சிவனை கும்பிடுவாயா. விஷ்ணுவை கும்பிடுவாயா. இப்படியே கும்பிட்டுக் கொண்டே இரு என்று சொல்லி இருக்கிறார்கள். சொல்லியே அறுத்து இருக்கிறார்கள்.

"எனவே இது மத துவேஷம். புத்தர் என்கிறபெயரில் அமைதி என்கிற பெயரில் அன்பு என்கிற பெயரில் ஒரு குழு செய்கிற அட்டகாசம். புத்த பிட்சுக்கள் சொல்லாமல் ஒரு குழுவிற்கு இப்படி ஒரு எண்ணம் வராது"

"அரசியல் ரீதியான சண்டையாக இருந்தால் கூட பொறுத்துக் கொள்ளலாம். சைவ சமயத்திற்கு எதிராக, வைணவ சமயத்திற்கு எதிராக, பரத கண்டத்திற்கு எதிராக சண்டை என்றால் இது அடித்து நொறுக்கப்பட வேண்டும்" மறுபடி குந்தவையாரிடமிருந்து சீறல் எழுந்தது.

"மனதில் அந்த எண்ணம் இருக்கிறது அத்தையே. நான் வெகு நிச்சயம் செய்வேன். கடாரத்திற்கும், காம்போஜத்திற்கும் போக வேண்டிய காரணங்கள் அதிகப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சேர தேசத்து போர் கலன்கள் வந்து நாகையில் தங்கி இருக்கின்றன. அந்த போர் கலன்கள் மிகப் பெரிதாக இருக்கின்றன. மிகப் பாதுகாப்பாக இருக்கின்றன. அந்த நாவாய்களை நாம் வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால் அது போதாது என்று சொல்லி விட்டார்கள்.

எனவே அந்த நாவாய்களை வணிகர்களுக்கு வாரித் தரப் போகிறேன். கிட்டத்தட்ட பதினாறு நாவாய்கள் அங்கு தயாராக இருக்கின்றன. அந்த மரக்கலன்கள் அத்தனையும் அவர்களுக்கே. அவர்கள் பட்ட கஷ்டங்களுக்காக இந்த பரிசை தரப் போகிறேன்"

"அற்புதம், வேறு என்ன விஷயம்?"

"குந்தவை, உன்னுடைய மருமகள், இராஜேந்திர சோழனின் தங்கை அவளைப் பற்றியும் நீ கவனம் கொள்ள வேண்டும். அந்தப்



பெண் பித்து பிடித்தது போல இப்பொழுது தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கிறாள். அவளை பேசி மனப்பக்குவம் செய்ய வேண்டும். இது மிக முக்கியமான காரியம்" இராஜேந்திரர் தொடர்ந்தார்.

"ஒரு மனநிலை பிறழ்ந்தவரை அரண்மனையில் வைத்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவளுடைய ஜாதகத்தில் இது மிக மோசமான நேரம். குல தெய்வ வழிபாடு செய்யப்பட வேண்டுமென்று கிருஷ்ணன் ராமன் இன்று காலை சொன்னார். அதை உன்னிடம் சொல்வதற்காக வந்திருக்கிறேன்.

நல்ல வேளை எனக்கு மறந்து போயிற்று. குல தெய்வ வழிபாடு மட்டுமல்ல, வேறு ஒரு விஷயமும் செய்ய வேண்டும் இராஜேந்திரா"

"என்ன அத்தையே?"

"நாம் சில விஷயங்களை எளிதாக மறந்து விடுகிறோம்"

"நான் எதையும் மறக்கவில்லையே"

"மறந்து விட்டாய் இராஜேந்திரா, ஒரு பள்ளிப்படை கோவில் எழுப்பினாயே ஞாபகம் இருக்கிறதா"

"ஆமாம். என்னுடைய சிறிய தாயார் பஞ்சவன் மாதேவிக்கு பள்ளிப்படை எழுப்பினேன்"

"பஞ்சவன் மாதேவி யார்?"

"நடனப் பெண்மணி"

"அனுக்கி, மனைவி கூட இல்லை. ஆனால் அவளுக்கு பள்ளிப்படை எழுப்பினாய் ஏன்?"

"பஞ்சவன் மாதேவி ஒரு உத்தமமான பெண்மணி. இராஜராஜரை உருவாக்கியவள். இராஜராஜர் மீது மிகுந்த காதல் உடையவள். உன் தந்தைக்கு மிகப் பிரியமானவள். அவளுடைய தோளில் சாய்ந்து கொண்டு தான் அவர் இராஜ்ஜியத்தை செவ்வனே நடத்தினார். அவளும் அவருக்கு ஆதரவாக இருந்தாள். அந்த காரணங்களினால் தானே நம் எல்லோராலேயும் கொண்டாடப்பட்டு சிவகதி அடைந்தாள். அவளுக்கு பள்ளிப்படையும் எழுப்பினாய்"

"பழுவேட்டரையர் வம்சமான அந்த அழகிய பெண்மணிக்கு அவ்வளவு பெரிய கோவில் எழுப்பினாயே. அதை பாதுகாக்க ஏதாவது ஏற்பாடு செய்தாயா. உள்ளுக்குள்ளே காராமணி தோட்டம் போட்டும்

வாழைமரங்களும் வளர்த்திருக்கிறார்கள். கோவிலுக்குள்ளே உழுது பயிரிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பயிரிட நிலமா இல்லை. அந்த கோவிலை கவனித்துக் கொள்கிறவர் அங்கிருந்தபடியே பாசனம் செய்யலாம். கேணி இருக்கிறதே. இறைத்துக் கொள்ளலாம் என்று இம்மாதிரி செய்கிறாராம்.

முதலில் காய் போட்டாராம். இப்பொழுது காராமணித் தோட்டம் போட்டிருக்கிறாராம். சரியானபடி நாம் காவல் போடவில்லை. அங்குள்ள அந்தணர்களை வேளாளர்கள் மிரட்டி உங்கள் வேலை பூஜை செய்வது, அதை மட்டும் பார்த்துக் கொண்டிருங்கள் என்று சொல்லிவிட, அந்தணர்கள் எதுவும் தெரியாது என்று கை விரிக்கிறார்கள். ஆனால் பூஜை ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது.

பூஜை மட்டும் ஒழுங்காக நடந்தால் போதுமா. கோவிலைச் சுற்றி காராமணித் தோட்டமும், வாழைத் தோட்டமும் இருந்தால் பாம்புகள் நகராதா. பாம்புகள் நகர்ந்தால் சிவாச்சாரியார்கள் உள்ளுக்குள்ளே போவதற்கு பயப்படுகிறார்கள். மடமடவென்று பூஜை செய்து விட்டு வருகிறார்கள். அரைகுறையாக பூஜை நடக்கிறது. சிறிய வௌவால்கள் மேலே தொங்குகின்றன. புகை போடக்கூட நேரம் இல்லை என்கிறார்கள்"

"இது தவறாகப் படுகிறது எனக்கு. இதுவும் குந்தவையினுடைய மனோநிலைமைக்கு காரணமாக இருக்குமோ. மூத்தோர் சாபமோ என்ற பயம் வந்தது எனக்கு. எனவே அதை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன்"

"யாரை இதற்கு தலைமையாகப் போட்டு இந்த பள்ளிப் படைகளை சரி செய்ய ஏற்பாடு செய்வது. இராஜராஜரின் பள்ளிப்படை இருக்கிறது. பஞ்சவன் மாதேவியின் பள்ளிப்படை இருக்கிறது.

பட்டமகிஷியின் பள்ளிப்படை இருக்கிறது. இன்னும் அதற்கு முன் உண்டான சுந்தர சோழர், பராந்தகர் பள்ளிப் படைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளெல்லாம் பாதுகாக்க ஒரு சரியான நபரை நியமிக்க வேண்டும். திரும்ப திரும்ப கிருஷ்ணன் ராமனையா தொந்தரவு செய்வது. இந்த வயதில் எவ்வளவு வேலைகள் செய்வார்"

"இல்லை. எனக்கு யார் ஆள் என்று தெரிந்து விட்டது" இராஜேந்திர சோழர் கை உயர்த்தினார்.

எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்



யோசித்தார்.

நேற்று கூட அவர் கனவில் வந்தார். என்ன வேண்டும் இராஜேந்திரா என்று கேட்டார். உங்கள் ஆசிகள் வேண்டும் என்று சொன்னேன். கை உயர்த்தி ஆசீர்வதித்தார். இப்பொழுது தான் அந்த கனவே ஞாபகம் வருகிறது. கருவூர்ப் பண்டிதர், அவர் தஞ்சைக்கு வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன், அதனால் தான் கனவு வந்திருக்கிறது"

"வந்தியத்தேவர் அவர்களே கருவூர்ப் பண்டிதர் எங்கு இருக்கிறார் என்று விசாரிக்கச் சொல்லுங்கள். அத்தை நான் விடைபெறுகிறேன்"

"இங்கிருந்து உன்னுடைய பொருள்கள் எது வேண்டும்?" அத்தை எழுந்துக் கொண்டே கேட்டாள்.

"அதெல்லாம் வீரமாதேவி முடிவு செய்யட்டும். வீரமாதேவி, இங்குள்ள பொருள்கள் ஏதாவது எடுத்துப் போக வேண்டுமா?"

"புது வீடு, புதிய பொருள்களை உபயோகப் படுத்துவோமே, இதையெல்லாம் இராஜராஜதித்தன் அனுபவிக்கட்டுமே" என்று சொல்ல, எல்லோரும் 'சரி சரி' என்று சொன்னார்கள். இராஜேந்திரர் அந்த அந்தப்புரம் விட்டு கை கூப்பியபடி நீங்கினார்.

அந்தப் புற வாசலுக்கு வந்து நெடுஞ்சாண் கிடையாக அத்தையின் கால்களில் விழுந்து வணங்கினார். வாளை எடுத்து அத்தையின் கையில் கொடுத்தார். அத்தை அந்த வாளை கையில் வைத்துக் கொண்டு,

"ஜெயவிஜயீபவ, சோழம் சோழம் சோழம் என்றும் உனதாகட்டும்" என்று அவர் நெஞ்சில் அந்த வாளை அழுத்தினார். நெஞ்சில் அழுத்தப் பட்ட வாளை அப்படியே இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு இராஜேந்திரர் பின்னடைந்தார். பிறகு இடுப்பில் சொருகிக் கொண்டார்.

மனைவிகள் புடைசூழ இராஜேந்திரர் போவதையே அத்தை குந்தவை பார்த்துக் கொண்டிருந்தார்.

"மன்மதன், இத்தனை பெண்களுக்கு நடுவில் வாட்ட சாட்டமாய் பீமசேனன் போல உடைவாளோடு நடந்து போய்க் கொண்டிருக்கிறான். அந்த பெண்டுகளுக்குத் தான் இவன் மீது என்ன காதல், என்ன வெறி. ஒவ்வொருத்தியும் பார்க்கிற பார்வை இருக்கிறதே அப்பா என்னோடு இரு. என்னோடு இரு என்று கெஞ்சுகிறார்கள். அவன் ஆனந்தமாக இருக்கிறான் என்று சந்தோஷப்பட்டாள். ஒரு தாய் போல் தன்

மகனுடைய காதலைப் பார்த்து படுகின்ற சந்தோஷம் அது.

இராஜேந்திரர் தன் அரண்மனை வந்த போது இராஜராஜாதித்தன் வந்து விட்டதாக தகவல் வந்தது. அவனை உள்ளே வரச் சொன்னார்.

இருபத்தி நான்கு அகவை நிறைந்த இராஜராஜாதித்தன் துள்ளி குதித்துக் கொண்டு உள்ளே வந்தான். மீசை இப்போது கறுப்பாகி இருந்தது. முகத்தில் இரண்டு நாள் தாடி இருந்தது. தோள்கள் அகலமாக இருந்தன. தலைமயிர் சிலும்பி இருந்தது. மஞ்சள் நிற சட்டை அணிந்திருந்தான். கரை போட்ட காமகத்தை பஞ்சகச்சம் போட்டு அணிந்திருந்தான். இடுப்பில் உடைவாள், முதுகில் கேடயம் என்று ஆயுதபாணியாக இருந்தான். இரண்டு கைகளிலும் கேயூரம் மினுமினுத்தது. உள்ளே ஓடிவந்து அப்பாவின் காலில் விழுந்து வணங்கினான். வாளை எடுத்து அப்பாவிடம் கொடுத்தான்.

"நான் வெற்றி பெற்ற தேசங்கள் அனைத்தும் உங்களுக்குச் சொந்தம்" என்று கை உயர்த்தி வாளின் மீது கை வைத்து சத்தியம் செய்தான். அந்த வாளை இராஜேந்திர சோழர் கண்ணில் ஒற்றிக் கொண்டார். எடுத்து அவன் நெஞ்சிலே பதிய வைத்தார். பதிய வைத்த வாளை அவன் இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டான். பிறகு எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டான்.

"சேர தேசத்திலிருந்து இனி ஒரு சிறு துரும்பு கூட நமக்கு எதிராக போகாது. அடித்து நொறுக்கி விட்டேன். அங்கிருந்து மதுரை வழியாக நாகை பயணப்பட்டேன். மதுரையிலும் எதிர்ப்புகள் எதுவும் இல்லை. நான் தென்பக்கம் போனேன். இராமேஸ்வரம் போய் அங்கிருந்து கடற்கரை ஓரமாக பயணப்பட்டு நாகை வந்து அடைந்தேன். நாகையிலிருந்து தெற்கும், வடக்குமாக புத்த பிட்க்கர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது.

நாகையில் இராஜேந்திர சோழர் விகாரை கட்டுகிற பொழுது எனக்குத் தெரிந்து பதினைந்து புத்த பிட்க்கர்கள் தான் இருந்ததாகச் சொன்னார்கள். இப்பொழுது முன்னூறு, நானூறு பேர்கள் இருக்கிறார்கள். அத்தனை புத்த பிட்க்கர்கள் ஒரு விகாரைக்கு தேவையா என்ற கேள்வி வந்தது. ஆனாலும் அங்கு விசாரிக்காமல் நேரே இதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று வந்து விட்டேன். அவை எனக்கு கவலைக்கிடமான விஷயமாகத் தோன்றுகிறது.

அந்த பிட்க்கர்கள் மக்களிடம் பழகுகிறார்கள். அவர்களிடம் பிட்சைக்கு கையேந்துகிறார்கள். அவர்களோடு உட்கார்ந்து



பேசுகிறார்கள். சிவன் என்றால் என்ன? என்று கேள்வி கேட்கிறார்கள். மதமாற்றம் செய்வார்களோ என்ற எண்ணம் எனக்குள் தோன்றுகிறது. சிலரை மத மாற்றம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது" நிச்சயமாகத் தெரியவில்லை.

"கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இதை நான் கவனிக்க வேண்டுமா அல்லது நீ கவனித்துக் கொள்கிறாயா?"

"நீங்கள் உத்தரவிட்டால் நான் கவனித்துக் கொள்கிறேன். யார் கவனிக்க வேண்டுமென்று நீங்கள் தான் தீர்மானம் செய்ய வேண்டும்"

"அங்கு இன்னும் என்ன கவனிக்கப்பட வேண்டிய விஷயம்"

"கடல் நடமாட்டத்தை கவனிக்கப்பட வேண்டும், தொடர்ந்து மரக்கலன்கள் வருகின்றன"

"எங்கிருந்து?"

"ஸ்ரீ விஜயத்திலிருந்து இராஜராஜாதித்தன் பேசினான்"

"எதற்காக?"

"சீனத்து கப்பல்களிலிருந்து பொருள்கள் வாங்கி ஸ்ரீ விஜயமே நேரடியாக சோழத்தில் விற்கலாம் என்று வந்திருக்கிறது"

"உள்ளே ஒரு மரக்கலமும் வரக்கூடாது, ஒரு விற்பனையும் நடக்கக் கூடாது. ஒரு பானை கூட விற்கக்கூடாது. ஒரு முழம் துணி கூட உள்ளே வரக்கூடாது. சொல்லிவிடு"

நாம் சொன்னால் கேட்க மாட்டார்கள். அந்த காமகங்களைப் பார்த்தால், அந்த பானைகளை பார்த்தால் நம் ஆட்களுக்கு ஆசை வருகிறது. எனவே தொலைவில் நிறுத்தி, படகுகளில் ஏற்றி திருட்டுத் தனமாக கொண்டு வருகிறார்கள். கள்ளக் கடத்தல் அதிகமாகிறது"

"எனவே என்ன செய்யச் சொல்கிறாய்"

"அந்த மரக்கலன்களை பாதி வழியிலேயே மடக்கி எரியூட்டி விட வேண்டும். நாலு மரக்கலன்களை எரித்தால் ஸ்ரீ விஜயத்திலிருந்து யாரும் வர மாட்டார்கள்"

"நல்லது, சரியான யோசனை. சீனத்துப் பண்டங்களை சீனத்து கப்பல்களிலிருந்து வந்தால் மட்டுமே நாம் ஏற்போம் என்று சொல்லி விடுங்கள்"

"இளவரசே உங்கள் பேச்சில் ஒரு தவறு இருக்கிறது" வந்தியத் தேவர் வேகமாக பேசினார்.

"என்ன தவறு?"

"ஸ்ரீ விஜயத்து மரக்கலன்களை, சீனப் பொருள்களை நாம் பாழ்படுத்தினால் செய்தி சீனர்களிடம் சொல்லப்படும். அது நமக்கும் சீனத்துக்கும் இருக்கும் நல் உறவை, நல்ல வியாபாரத்தை பாதிக்கும். நம்முடைய நானா தேசிகளும், மற்ற வணிக சபையினரும் இதை முக்கிய விஷயமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வியாபாரம் பாழ்படக் கூடாது. எனவே நீ இடுவதோ, அழிப்பதோ நல்லதில்லை என்பது என்னுடைய அபிப்ராயம்"

"பிறகு என்ன செய்யலாம்?"

"கொள்ளை அடிக்கலாம், மரக்கலன்களை திருப்பி அனுப்பலாம் அல்லது மரக்கலன்களை நிறுத்தி வைத்துக் கொண்டு அவர்களை சிறிய படகுகளில் ஊருக்கு போகச் சொல்லலாம்"

"நல்ல யோசனையாகப் படுகிறது. பொருள்களை பாழ்செய்வானேன்" இராஜேந்திரர் சிந்தித்தார்.

"இராஜராஜசித்தா நான் இதற்கு விடை ஊருக்கு கிளம்பும் முன் தெரிவிக்கிறேன். இனி அந்த அரண்மனை உன்னுடைய அரண்மனை, உன் மனைவியரை வந்து இங்கு சுகமாக தங்கச் சொல். இந்த இடத்தில் ஒரே ஒரு அறையில் கிழக்கம் குந்தவை குடியிருப்பாள். மற்றபடி இந்த மேல்பகுதி முழுவதும் உனக்கு சொந்தமானது.

மறுபக்கம் மற்ற இராஜராஜரின் அரசியர்களும் அங்கு இருப்பார்கள். இது மிக சுகமான இடம். இராஜராஜர் வாழ்ந்த இடம். நான் சந்தோஷமாக இருந்த இடம். இதை உனக்கு பரிசளிக்கிறேன் என்று சொல்லி ஆரத் தழுவிக் கொண்டார்.

அப்பனும், பிள்ளையும் மாறி மாறி கன்னங்களில் முத்தமிட்டுக் கொண்டார்கள்.

நீ இங்கு காவல் இருக்கிறாய் என்பதால், தஞ்சையைப் பற்றி தெற்கே எல்லைகள் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை. என்னையும் விட திறம்பட இதை நிர்வகிப்பாய் என்று எனக்குத் தெரியும். பரமன் மழபாடியாரையும், கிருஷ்ணன் ராமனையும் அனுசரித்துச் செல்.

வந்தியத்தேவரே லகுலீசப் பண்டிதரைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்ததா" இராஜேந்திரர் சொல்லிக் கொண்டே இராஜராஜசித்தன் தோளில் கை போட்டுக் கொண்டு வெளியே வந்தார்.



"லகுலீசப் பண்டிதரைப் பற்றி என்ன செய்தி வேண்டும்" இராஜராஜசித்தன் விசாரித்தான்.

"ஏன் சந்தித்தாயா?"

"பெருவுடையார் கோவிலில் இருக்கிறார். இன்று காலை பெருவுடையாரை தரிசனம் செய்யும் போது அவரையும் பார்த்துவிட்டு வந்தேன். எங்கே உன் தந்தை என்று கேட்டார். போய் சொல்கிறேன் என்று சொன்னேன். மற்ற விஷயங்கள் பேசும் போது இது மறந்து விட்டது"

"நல்லவேளை. இப்பொழுதாவது சொன்னாயே. தஞ்சை மக்களிடம் விடை பெறுவதற்கு முன்பு பெருவுடையார் கோவிலுக்கு போய் விட்டு வந்து விடுவோம். கிளம்புங்கள்" என்று சொல்ல,

வெளியே அரசரின் தலை தெரிந்ததும் எக்காளங்கள் ஊதப்பட்டன. முரசுகள் முழங்கியது. சோழம் சோழம் சோழம் என்று போர் வீரர்கள் கத்தினார்கள். நேரடியாக போருக்கு போகிறோம் என்று நினைத்து ஆவேசப்பட்டார்கள். அரசர் கையமர்த்தினார்.

மெய்காவல் படையிடம் தன் திட்டத்தை சொன்னார். மெய்க்காவல் படை ஓடிப் போய் அங்குள்ள வீரர்களிடம் "அரசர் கோவிலுக்கு போய் வருவார். வந்தபிறகு கிளம்பலாம்" என்று சொன்னார்கள். அவர்கள் அமைதியானார்கள்.

மெய்க்காவல் படை முன்னேற வந்தியத் தேவரும், இராஜராஜசித்தனும், பரமன் மழபாடியாரும் பின் தொடர அவர்கள் பெரிய கோவிலை நோக்கி ஊர்வலமாக போனார்கள்.

கேரளாந்தகன் வாயிலை கடந்தார்கள். இராஜராஜர் வாயிலை கடந்தார்கள். உள்ளுக்குள்ளே எல்லா குதிரைகளும் ஒரு சேரப் போயின. முன் மண்டபத்தில் படுத்திருந்த உருவம் சட்டென்று எழுந்து நின்றது. ஆறடி உயரம், இடுப்பில் கரைவேட்டி, மொட்டைத் தலை, தலை சுற்றி ருத்திராஷ மாலை, கையில் வளைதடி, உடம்பு முழுக்க திருநீறு. ஒற்றை சிவலிங்கம் தாங்கிய ருத்ராட்சம் கோர்த்த மாலை, கைகளில் பட்டை ருத்ராட்சம். கால்களில் வீரக்கழல், நெற்றியில் கவர் பூச்சாய் திருநீறு. எழுந்து நின்று "சிவோஹம்" என்று லகுலீசப் பண்டிதர் குரல் கொடுத்தார்.

இராஜேந்திர சோழர் தன் குதிரையை 'விரைவாக முடுக்கினார். படிகளுக்கு அருகே போனார். தாவி இறங்கினார். படிகளில் ஏறி

பாசுபதத்தைச் சேர்ந்த லகுலீசப் பண்டிதர் என்கிற சிவாச்சாரியாரை விழுந்து வணங்கினார். ('பாசுபதம்' ஒரு வகை சிவவழிபாடு. சைவர்களில் தனித்த பிரிவு. சோழர்கள் ஆதரவு இவர்களுக்கு உண்டு)

"எல்லா நலன்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்க. சோழ தேசத்திறுடைய பெருமை உலகெங்கும் பரவட்டும். உன்னதமான ஒரு அரசன் என்று உன் பெயர் பூவுலகம் இருக்கும் வரை நிலைக்கட்டும்.

இங்குள்ள பரத கண்ட அரசர்கள் எல்லோரும் தன்னை நெஞ்சை காப்பாற்றிக் கொள்ள வாட்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் நீயோ அடுத்தவன் நெஞ்சை பிளப்பதற்காக வாள் வைத்திருக்கிறாய். சோழ தேசத்தின் புகழ் கடல் கடந்து பரவும். இது சத்தியம். சிவன் மீது ஆணை" என்று உரக்கச் சொன்னார்.

மன்னர் எழுந்து நின்று கை கூப்பினார்.

"நான் என்ன மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறேனோ அதையே சொல்கிறீர்கள்" இராஜேந்திரர் மிருதுவான குரலில் பேசினார்.

"நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய், உன் தந்தை என்ன நினைத்துக் கொண்டிருந்தார். உன் பிள்ளை என்ன நினைக்கிறான் சகலமும் நான் அறிவேன். சோழ தேசத்தின் பெருமை மேலும் கூடப் போகிறது. உன் மகனால் இன்னும் வளரப் போகிறது. இன்னும் ஆறு தலைமுறைகளுக்கு உன் சோழ தேசத்தை அசைப்பதற்கு ஆள் இல்லை. உங்கள் காட்டில் பொன்மழை பெய்யப் போகிறது. அது உன்னுடைய காலத்தில் ஆரம்பம்"

"ஆறு தலைமுறைக்குப் பிறகு மங்குமா?" வந்தியத்தேவர் கேட்டார்.

"எது உயர்ந்ததோ அது தாழும். எது தாழ்ந்ததோ அது உயரும். இது உலகத்தின் நியதி வந்தியத்தேவரே. சோழ தேசம் மட்டும் தான் இந்த உலகத்தில் இருக்க வேண்டுமென்றால் அது நடக்காத காரியம்.

எங்கு இருந்தீர்கள். நூறாண்டுக்கு முன் எங்கிருந்தீர்கள். சோழ தேசம் என்று ஒன்று உண்டா, சோழப் பரம்பரை உண்டா, நடுவில் காணாமல் போயிருந்தீர்களே. விஜயாலயன் அல்லவா எடுத்து நிறுத்த வைத்தான். விஜயாலயனுக்குப் பிறகு வந்த பராந்தகன் அல்லவா கொடி பறக்க விட்டான். அதற்கு பிறகு வந்த ஆதித்தனல்லவா இன்னும் உயர கொடியை தூக்கினான். சுந்தரசோழரல்லவா பலதும்



காப்பாற்றினார். இராஜேந்திர சோழன் தகப்பன் இராஜராஜனல்லவா பெரும்புகழ் பரப்பினான். இவ்வளவு பெரிய கீர்த்திமான்கள் நிறைந்த பரம்பரை இது. மிகப்பெரிய வம்சம் இது. இது மேலும் தழைக்கும்.

எது உயர்ந்ததோ, அது தாழும் இது விதி. மறுக்கவே முடியாது. எனவே தாழ்வதை பற்றி யோசிக்காமல் உயர்வது பற்றி யோசியுங்கள்.

என்ன வேண்டும் இராஜேந்திரா, எதற்கு இந்த கிழவனை தேடி வந்திருக்கிறாய்"

"உங்களிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்க வேண்டும் என்று வந்தேன்"

"தெரியும். உன் தந்தை வந்தியத் தேவரின் மாதேவியார் குந்தவை தேவி ஏதோ சொல்லி அனுப்பி இருக்கிறாள். ஆமாம். நான் தானே குந்தவைக்கு சொன்னது. சில விஷயங்கள் கேட்பாரற்று கிடக்கின்றன. சோழ தேசத்தில் நிர்வாகம் சரியில்லை, போர் போர் என்று அலைந்து கொண்டிருக்கிறீர்கள். குடிமக்களை யார் கவனிப்பது, கோவில்களை யார் கவனிப்பது என்று கேட்டேன். அவள் புரிந்து கொண்டு, என்ன தவறு என்று கேட்டாள். சில தவறுகள் எடுத்து காட்டினேன்.

"ஆமாம். எல்லா தவறுகளையும் நானே சரி செய்து கொண்டிருக்க முடியாது. பள்ளிப்படை கோவில்களை நிர்வாகம் செய்ய முடியவில்லை. அது தவறு தான். அது குற்றம் தான். அந்த குற்றம் தான் என் தங்கையின் தலையில் வந்து விடிந்திருக்கிறது.

எனவே, சோழ தேசத்தில் உள்ள அத்தனை பள்ளிப் படை கோவில்களையும் நீங்களே நிர்வகிக்கும் படியாக ஒரு சாசனம் எழுதித் தருகிறேன். அதை கல்வெட்டாகவும் மாற்ற முயற்சிக்கிறேன்.

லகுலீசப் பண்டிதர் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். இதற்கு உண்டான பொன் கழஞ்சுகள் நூறு முன்பணமாக இப்போது தருகிறேன்" என்று திரும்ப, ஓலை நாயகத்தின் கையிலிருந்து ஒரு மூட்டை பொற்கழஞ்சு கனமாக தூக்கி அரசரிடம் கொடுக்கப்பட்டது. அரசர் மெல்ல அதை எடுத்து லகுலீச பண்டிதரின் காலில் வைத்தார். கதவுக்கு பின்னால் இருந்த லகுலீசப் பண்டிதரின் சீடர்கள் வெளியே வந்தார்கள்.

லகுலீசர் கண்ணால் உத்தரவிட அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு போனார்கள்.

"ஆகட்டும் இராஜேந்திரா, பள்ளிப்படை கோவிலை நிர்வகிப்பது என்பது கடினமான வேலை, சாதாரணமான சிவாச்சாரியார்களால் செய்ய முடியாத வேலை. உள்ளே நுழையவும் சில சமயம் அவர்கள் பயப்படுவார்கள். பஞ்சவன் மாதேவி பள்ளிப்படை கோவிலுக்குள் காராமணி போட்டவன் கன்னத்தில் அடித்து விட்டு வந்தேன். வாழை தோட்டத்தையும் வெட்டச் சொல்லி இருக்கிறேன். எல்லா பள்ளிப்படை கோவில்களையும் நான் கவனித்துக் கொள்கிறேன்"

அவர்கள் துணை உனக்கு உண்டு. உன் மீது எறிகின்ற அம்புகள் அவர்களால் தடுக்கப்படும். கவலை இன்றி போய் வா. இராஜேந்திரன் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்வான். கீழைச் சாளுக்கியத்திலிருந்து எந்தவித பிரச்சனையும் வராது. நீ கவனம் கொள்ள வேண்டியது.

"சொல்லுங்கள்"

"கிழக்கு திசை, நிசும்பசூதனி பலி கேட்கிறாள், கிழக்கு திசை ஆடிக் கொண்டிருக்கிறது. கோபமாக இருக்கிறாள். அங்கே கிழக்கு திசையில் சோழர்களுடைய கதறல்களை காது கொடுத்து கேட்க முடியாதவளாக தவிக்கிறாள்.

எனவே கிழக்கு திசை நோக்கி படை எடுக்க வேண்டும். நீ படை எடுக்கும் முன்பு நிசும்பசூதனியை பார்த்து விட்டுத் தான் போக வேண்டும்"

"அப்படியே செய்கிறேன்" இராஜேந்திர சோழர் கை கூப்ப, அவர் கை தூக்கி விடை கொடுத்தார்.

இராஜேந்திர சோழர் பின்வாங்கினார். கீழே இறங்கினார். குதிரை ஏறினார். குதிரையில் இருந்தபடியே கோவிலை வலம் வந்தார். வெகு வேகமாக கோவிலை விட்டு எல்லா குதிரைகளும் வெளியேறின.

கருவூர்ப் பண்டிதர் திரும்பி பெருவுடையாரை பார்த்தார்.

"இந்த இளைஞன் சோழ தேசத்தின் பொக்கிஷம், இந்த இளைஞன் மன்னருக்கெல்லாம் மன்னன். இந்த இளைஞன் எரிக்க முடியாத ஒரு காமவேள். மன்மதன் அழகன், இவன் சீரும் சிறப்புமாக இருக்க உன்னுடைய ஆசிர்வாதங்கள் வேண்டும். நீ அவனை அரவணைத்துக் கொள்ள வேண்டும். நீ அவனுக்கு துணையாக இருக்க வேண்டும்" என்று சொல்லி கை கூப்பினார். கோவில் மணி உச்சிகால பூஜைக்கு அழைப்பாக ஒலிக்கத் தொடங்கியது.





# 26

"என்னம்மா இது, என்ன இந்த முற்பகல் வேளையில், சொல்லி இருந்தால் நான் ஓடி வந்திருக்க மாட்டேனா? என்ன உடம்புக்கு, முகம் வாட்டமாக இருக்கிறதே. மேலுக்கு சுகமில்லையா அல்லது உள்ளே ஏதாவது பிரச்சனையா?"

"வைத்தியர் வீட்டிற்கு வந்தால் முகம் வாட்டமாகத் தான் இருக்க வேண்டுமா அல்லது முகம் வாட்டமாக இருக்கிறவர்கள் தான் வைத்தியர் வீட்டிற்கு வருகிறார்களா"

"இல்லை அம்மா. சந்தோஷமாக இருப்பவர்களும் வைத்தியர் வீட்டிற்கு வருவது உண்டு"

"நான் சந்தோஷமாக வந்திருக்கிறேன்"

"அடடா, உங்கள் சந்தோஷம் எங்கள் வீட்டில் வந்து தங்கட்டும், தங்கிப் பெருகட்டும்"

"பெருக வேண்டும் என்று வந்திருக்கிறேன்"

"அம்மா, பூடகமாக பேசுகிறீர்கள். உங்க அளவு எங்களுக்கெல்லாம் புத்தி போதாது. கலுவத்தில் மருந்து போட்டு அரைத்து, அரைத்து மூளை மழுங்கி விட்டது. சொல்லுங்கள். என்ன உடம்புக்கு?"

"உடல் நலம் நன்றாக இருக்கிறது. உங்களிடம் ஒரு விண்ணப்பத்திற்காக வந்திருக்கிறேன்"

"என்னிடமா. விண்ணப்பமா, கட்டளை இடுங்கள் தாயே"

"சற்று பொறுங்கள்"

இராஜராஜ பிரம்மராயரின் மனைவி சோழ குல சுந்தரி கோவிலில் நடனமாடி திருமணமான பிறகு நடனத்தை விட்டு

விட்டு கணவனை உபசரிப்பதே வாழ்க்கை என்று இருந்தவள் ஞான சம்பந்தனின் தாய் வெளியே எட்டிப் பார்த்தாள்.

அங்கு இருந்த சோழ குல சுந்தரியின் தோழிகள் உடனே ஓடிப் போய் பெரிய வில் வண்டியில் இருந்து பட்டுத் துணி போர்த்திய இரு தட்டுகளை கொண்டு வந்தார்கள். பழங்களும், திரட்டுப் பாலும், தேன்குழலும் இருந்த அந்த தட்டுக்கள் மருத்துவரிடம் மரியாதையாக வைக்கப்பட்டது.

மருத்துவர் திகைத்தார் 'என்ன' என்பது போல் பார்த்தார்.

"இது எதற்காக என்று நினைக்கிறீர்கள்?"

"உங்கள் மகனை நான் சேர்த்துக் கொண்டு தொழில் கற்றுக் கொடுக்கிறேன். என்னைப் பற்றி ஆஹா, ஓஹோ என்று சொல்லி இருப்பான். அதைப் பாராட்டும் வண்ணமாக வைத்திருக்கிறீர்களா?"

"உங்களைப் பற்றி மிக உயர்வாக சொல்கிறான். அதை பாராட்டும் வண்ணமாக நான் என்ன கொடுத்தாலும் ஈடாகாது. நாம் சம்மந்தம் பேச வந்திருக்கிறேன்"

"யாரிடம்?"

"உங்களிடம்"

"என்னம்மா இது. யார் யாருக்கு சம்மந்தம் வைப்பது, நீங்கள் அந்தணர். இராஜராஜ பிரம்மராயரின் ஒரே மனைவி. எப்படி சம்மந்தம் வைக்கப் போகிறீர்கள்?"

"என்னுடைய மகன் ஞான சம்மந்தனுக்கு உங்கள் மகள் நாகரத்தினத்தை பெண் கேட்டு வந்திருக்கிறேன்"

"கடவுளே, நாங்கள் மருத்துவர்கள் அம்மா, நான்காவது வர்ணம்"

"அதனால் என்ன, நான் ஒன்றும் பார்ப்பனத்தி இல்லையே. உண்மையில் என்னுடைய தந்தை மறவர், கற்சிலை என்பது என் தாய், என் தந்தையை காதலித்து திருமணம் செய்து கொண்டவர். அவருக்கு பிறந்த மூன்றாவது பெண் குழந்தை நான். என்னை இராஜராஜ பிரம்மராயர் விரும்பி திருமணம் செய்து கொண்டார். எனக்கும், அவருக்கும் பிறந்த குழந்தை ஞானசம்பந்தன்"

"போர் பயிற்சி தருகிறேன் என்று சொன்னபோது வேண்டாம் நான் மருத்துவம் படிக்கிறேன் என்று வெகு திடமாக சொல்லி வெகு தெளிவாக உங்களிடம் வந்து சேர்ந்து விட்டான். உங்களைப்



பற்றி மிக உயர்வாக சொல்கிறான். உங்கள் மனைவியைப் பற்றி மிக பிரியமாகப் பேசுகிறான், வயிறு வாடவிட மாட்டார்கள் என்று சொல்கிறான்"

"அதுமட்டுமல்ல உங்கள் மகள் மீது அவனுக்கு பெரிய காதல், காதல் என்ன காதல், மோகம்"

அவர் திகைத்தார்.

"பெரிய வார்த்தைகள் சொல்லுகிறீர்கள். ஏனம்மா உனக்கு ஏதாவது தெரியுமா?" மனைவியை பார்த்தார்.

மனைவி தெரியும் என்பது போல தலை அசைத்தாள்.

"என்னிடம் சொல்லவே இல்லையே" அவர் குரல் லேசாக கோபத்தில் உயர்ந்தது.

"எப்படிச் சொல்வது. இதை நான் சொன்னால் சிறுவாக வரும். சொல்ல வேண்டியவர்கள் சொன்னால் சரியாக வரும் என்று நான் அமைதியாக இருந்து விட்டேன்"

"உங்கள் மகள் நாகரத்தினம் அழகியாம், சிறிய முகவாயாம், நீண்ட நாசியாம், வில் வொத்த புருவமாம், பெரிய கண்களாம். அடர்த்தியான தலைமுடியாம். அகலமான முதுகாம். கட்டுடம்பாக இருப்பாளாம். மருத்துவத்தைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறாளாம், மணிக்கணக்காக இரண்டு பேரும் பேசுவார்களாம். அவளுடன் பேசிப் பேசித்தான் நான் என்னுடைய மருத்துவ விஷயங்களை நினைவுபடுத்திக் கொள்கிறேன் என்று சொல்கிறான். அவள் எனக்கு மனைவியாக இருந்தால் நான் மிகச் சிறந்த மருத்துவனாக இருப்பேன். எனவே போய் பெண் கேள் என்கிறான்"

"அம்மா, என்னவோ மோகம் என்று சொன்னீர்களே"

"ஆமாம். மோகம் தான், பேச்சு பேச்சாக இருக்குமா. கொஞ்சம் எல்லை தாண்டி இருக்கிறது"

"கடவுளே, இது நல்லதா, இது பாபமில்லையா?"

"என்ன பாபம்"

"அந்தணச் சிறுவனை நான் மடக்கி இழுத்து விட்டேன் என்று சொல்ல மாட்டார்களா?"

"இராஜராஜ பிரம்மராயரை எதிர்த்து யாராவது பேசுவார்களா,

பேச முடியுமா"

"ஆனால், அவர் சம்மதம் இருப்பதாக தெரியவில்லையே"

"நான் சம்மதித்தால் அவர் சம்மதித்ததாக அர்த்தம். அவர் எங்கோ போர் முனையில் இருக்கிறார்"

"ஆமாம் அம்மா. ஊரே போருக்கு கிளம்பிக் கொண்டிருக்கும் பொழுது, நாம் திருமண சம்மந்தம் பேசுவது நன்றாக இருக்கிறதா"

"சரியாகத் தான் இருக்கிறது. போர் முனைக்கு போக வேண்டுமென்று ஞானசம்பந்தன் பரபரக்கிறான். அப்படி போகும் பொழுது உடன் நாகரத்தினத்தை அழைத்துப் போனால், அவன் வைத்தியம் செய்வது எளிது என்றும், தன்னுடைய குறிப்புகளை நாகரத்தினம் சரியாக புரிந்து கொள்கிறாள் என்றும், மருந்து அரைப்பதில் வல்லவளாக இருக்கிறாள் என்றும், அடிபட்ட சோழ வீரர்களுக்கு விரைவில் வைத்தியம் செய்ய முடியும் என்றும் நினைக்கிறான். எந்நேரமும் மருத்துவம் பற்றி சிந்திக்கிறான். எந்நேரமும் மருத்துவம் பற்றி சிந்திக்கின்ற மகனுக்கு நான் அதற்கேற்ற பெண்ணைத் தானே தேர்ந்தெடுக்க வேண்டும்.

நான் ஆசைகாட்டி பார்த்தேன். அற்புதமான நடன அழகிகளை மணம் செய்து வைப்பேன் என்று அவன் கை எடுத்து கும்பிட்டு விட்டான். இந்த அழகுக்கெல்லாம் நான் போக்யதையே இல்லை. என்னுடைய வேலை அழகை ஆராதிப்பது அல்ல. மருந்து அரைப்பது. என் மீது எப்போதும் மருந்து நெடியும், கசப்பு வாசனையும் வீசும். எந்த நடனப் பெண்ணுக்கும் பிடிக்காது. எனவே தயவு செய்து அவர்களையும் வேதனைப்படுத்தி, என்னையும் துன்பத்தில் ஆழ்த்தாதே என்று சொல்லி விட்டான்"

"நாகரத்தினத்தை பார்த்திருக்கிறீர்களா?"

"இல்லை. பார்க்க வேண்டுமென்று ஆவலோடு வந்தேன்" சோழகுல சுந்தரி சொல்ல அவர் மனைவியை ஏறிட்டு நோக்கினார்.

மனைவி மெல்ல பின்பக்கம் போனாள். சற்று நேரத்தில் இரண்டு புறத்திலும் வங்கி அணிந்து, கழுத்தில் காரை அணிந்து, மூக்கில் புல்லாக்கும், வலது மூக்கில் மூக்குத்தியும், காதுகளில் கனத்த தோடும் அணிந்து, நெற்றிச்சுட்டியோடு வந்து நின்றாள். கைகளில் அடுக்கடுக்காய் வளையல்கள் இருந்தன. ஒல்லியான உருவமாக இருந்தாலும், திடமாக முலைகள் இருப்பது அந்த மேலாடைக்கு



உள்ளே தெரிந்தது. குல வழக்கப்படி கச்சு அணியாது இருந்தாள். நெற்றியில் பெரிய திலகம் இருந்தது. வட்டமான பிருஷ்டம், நீண்ட தொடைகள், சிறிய பாதங்கள், உதடு சிவந்திருந்தது. கட்டழகி என்று சொல்ல முடியாது. களையானவள்.

"வந்து பெரியவர்களை நமஸ்கரித்துக் கொள்ளம்மா" என்று அம்மா சொல்ல, திசை பார்த்து சோழகுல சுந்தரியை நமஸ்கரித்தாள். எழுந்து நின்று கண்ணோடு கண் பார்த்தாள். மிக மிருதுவாய் "மிக்க நன்றி" என்று சொன்னாள். சோழ குல சுந்தரிக்கு சிரிப்பு வந்தது. இழுத்து அணைத்துக் கொண்டாள். தலை தடவினாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

"நான் அணைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை கட்டிக் கொள்ள மாட்டாயோ" என்று மெல்லியதாக அதட்டினாள். கையை விரித்து மெல்ல சோழகுல சுந்தரியை தழுவிக் கொண்டு பிறகு சட்டென்று நாகரத்தினம் இறுக்கிக் கொண்டாள். அவளும் கன்னத்தில் முத்தமிட்டாள். காதோரம் வந்து,

"அப்பா எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்" என்று சொன்னாள்.

"அடியேய், நீ மாயக்காரியடி. என் பிள்ளை தான் அத்து மீறி விட்டான் என்று நினைத்தேன். மீற வைத்து விட்டாய்" என்று முணுமுணுக்க, அவர்கள் இரண்டு பேரும் வாய் விட்டு சிரித்தார்கள்.

மருத்துவர் விழித்தார்.

"அம்மா, என் மகளை பிடித்திருக்கிறதா?"

"மிகவும் பிடித்திருக்கிறது. சூட்சமமான பெண்ணாக இருக்கிறாள். என்ன பேச வேண்டும், எப்படி பேச வேண்டும் என்று தெரிந்திருக்கிறது. இது தெரிந்த பெண்கள் மிகக் குறைவு. வெறும் அசட்டு அழகாக இருந்தால் என் பிள்ளை காதலித்து இருக்க மாட்டான். இவளுடைய கெட்டிக்காரத்தனம் தான் அவனை ஈர்த்திருக்கும். இவளுடைய சுறுசுறுப்பு தான் அவனை வியக்க வைத்திருக்கும். எனவே, அவன் தேர்ந்தெடுத்திருப்பது சரியான பெண்ணைத் தான் என்பதில் எனக்கு எந்தவித குறையும் இல்லை"

"இருப்பினும் அம்மா நாங்கள் மருத்துவர்கள்"

"என்ன திரும்பத்திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்"

"இல்லை அம்மா, எனக்கு வேறு ஒரு கேள்வி இருக்கிறது"

"சொல்லுங்கள்"

"அவர் அந்தணப் பிள்ளை. பூணூல் போடுகின்ற தகுதி உடையவர். அவர் நாளை இன்னொரு அந்தணப் பெண்மணியை திருமணம் செய்து கொண்டு அந்தப் பெண், என்ன இருந்தாலும் நான் இரண்டாவதாக இருந்தாலும் நான் அந்தணப் பெண். நீ மருத்துவச்சி தானே என்று இவளை இழிவு படுத்தினால் அது எங்களுக்கு வேதனையாக இருக்கும்"

"சொல்லடி சொல். என் பிள்ளை என்ன சொன்னான் என்று சொல்" சோழகுல சுந்தரி அதட்டினாள்.

"அப்பா, என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதாலும் நினைக்க மாட்டேன் என்று, தாய் மீதும், தந்தையின் மீதும், கதுவத்தின் மீதும் அவர் சத்தியம் செய்திருக்கிறார்கள்"

"மோகம் என்று சொன்னீர்களே அம்மா, அதன் விளைவாக இருக்கலாமல்லவா"

"என் பிள்ளை இராஜராஜ பிரம்மராயருக்கு பிறந்தவன், உறுதி மிக்கவன். வாக்கு கொடுக்க மாட்டான், கொடுத்தால் மீற மாட்டான், மீற மாட்டான் என்று உங்களுக்கு தெரியாதா"

"தெரியும் அம்மா. நன்றாகத் தெரியும். இருந்தாலும் என் பக்கத்து மக்களை கேட்டுக் கொண்டு"

"உங்கள் பக்கத்து மக்கள் பல பேருக்கு இந்த காதல் விவகாரங்கள் தெரியும்"

"அப்பொழுது நான் ஒருவன் தான் முட்டாளா"

"இல்லை. பெண்ணிற்கு தந்தை என்று உங்களிடமிருந்து பயந்து விலகி இருந்திருக் கிறார்கள். உங்களுக்கு ஒரு மரியாதை கொடுத்திருக்கிறார்கள். அப்படித்தான் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்"

"வைத்தியரின் மனைவி வைத்தியரை தள்ளிக் கொண்டு அந்த கூடத்தின் வேறு பக்கத்திற்கு போனாள், குசுகுசவென்று பேசினாள், நாகரத்தினமும், சோழகுல சுந்தரியும் இன்னும் நெருக்கமாக அமர்ந்து கொண்டார்கள்.

"இவைகள்தான் நகைகளா"

"இன்னும் இருக்கின்றன அம்மா"



"என் வீட்டிற்கு வாடி, ஏகப்பட்ட நகைகள் இருக்கின்றன. அத்தனையும் உனக்குத் தான்" ஆவலோடு பேசினாள்.

"மருந்து அரைக்கும் கைகளுக்கு எதற்கம்மா நகைகள்"

"அடியே, எல்லா நேரமுமா மருந்து அரைத்துக் கொண்டு இருக்கப் போகிறாய். நீ வெளியே போகும் பொழுது விதம் விதமாக போட்டுக் கொள்ள, நிறைய புடவைகளும், நகைகளும் இருக்கின்றன. உனக்கு தருவதில் எனக்கு பெரிய சந்தோஷம். என் மகனுக்கு நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள் என்பது மிகவும் ஆச்சரியம்.

காயத்திற்கு மருந்து போடுவதும், கட்டு போடுவதும் புண்ணை மெல்லக் கீறி மறுபடியும் ஆற வைப்பதும் உனக்கு கை வந்த கலையாமே, விதம் விதமாக உன்னைப் பற்றி சொல்லி இருக்கிறான்"

வைத்தியர் மறுபடி கூடத்திற்கு வந்தார்.

"அம்மா எனக்கு சம்மதம். ஆனால் மோகம் என்று சொன்னீர்களே அந்த விஷயம் தான் வருத்தமாக இருக்கிறது. இவர்கள் இரண்டு பேருமே என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று மெல்லிய கோபம் வருகிறது"

"சொல்லடி சொல். என்ன மோகம் என்று சொல். என் பிள்ளையிடம் பேசினாயே. அந்தக் கவிதையை உன் தகப்பனிடம் சொல்" சீறலாய் சோழ குல சுந்தரி பேச,

நாகரத்தினம் நிமிர்ந்து தந்தையை பார்த்தாள்.

"குறுந்தொகை என்ற நூலில் ஆயிரம் வருடத்திற்கு முன்பு எழுதப்பட்ட பாடல். இங்கே தலைவியை செவிலித்தாய் கேட்பதாக ஒரு விஷயம் வருகிறது.

தலைவன் தலைவியை பார்க்க இரகசியமாக வந்தான். அவர்கள் இரண்டு பேரும் மாந்தோப்புக்குள் நுழைந்தார்கள். தலைவன் தலைவியோடு கூடுவதற்கு அவசரமாக முயற்சி செய்தான். அவள் ஆடைகளை களைந்தான். செவிலித்தாய் தலைவியை தேடிக் கொண்டு வர, அவன் பயந்து தோப்பை விட்டு ஓடி விட்டான்.

நிலைகுலைந்த ஆடையோடு இருக்கின்ற தலைவியைப் பார்த்து செவிலித்தாய் திகைத்துப் போனாள்.

"என்னடி இது. கற்போடு இருக்கின்றாயா இல்லையா" என்று கதறலோடு கேட்டாள். அதற்கு அந்த தலைவி பதில் சொன்னாள்.

பசித்த யானை ஒன்று மாந்தோப்பிற்குள் வந்தது. தன்னுடைய

நீண்ட துதிக்கையை நீட்டி மரக்கிளையை உடைத்தது. யாரோ வரும் சத்தம் கேட்டு பயந்து வெளியே ஓடி விட்டது. இப்பொழுது மரக்கிளை முன்பு போல் இல்லாமலும் அதேநேரம் விழுந்து கீழே கிடக்காமலும் ஒரு பட்டையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. என் கற்பும் அஃதே என்கிறாள்.

நான் கற்போடு இருக்கிறேன். அதே சமயத்தில் இல்லை என்று பொருள்பட இந்தக் கவிதை அமைந்திருக்கிறது. நாங்களும் அவ்விதம் தான்" என்று சொல்லி தலைகுனிந்தாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

அவள் தகப்பன் மெல்ல முன்னேறி அவள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தான்.

"உன்னுடைய விருப்பப்படியே உன் திருமணம் நடக்கட்டும். எனக்கு இதில் பூரண சம்மதம்" நாகரத்தினம் முகம் பொத்திக் கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

சோழகுல சுந்தரி அவள் முதுகு தடவி தேற்றினாள்.

"திருமணம் விரைவில் நடைபெற வேண்டும். நடைபெற்று இரண்டு பேரையும் போர் முனைக்கு அனுப்ப வேண்டும். போர் முனையில் தான் வைத்தியம் செய்வதற்கு உதவியாக தன்னுடைய மனைவி நிச்சயம் இருப்பாள் என்று ஞான சம்பந்தன் நினைக்கிறான். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே"

"எனக்கே இவளை அழைத்துப் போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இப்பொழுது ஞானசம்பந்தன் போவதால் இவர்கள் இருவரும் போகட்டும். நான் தஞ்சையில் இருந்து கொள்கிறேன் என்று சொல்ல, எப்போது திருமணம் என்று அவர்கள் தொடர்ந்து பேசினார்கள்.

நாகரத்தினம் கொல்லைப்புறம் ஓடினாள். கவன் வில் எடுத்தான். அடுத்த வீட்டு கிளையில் தொங்கிய மாங்காயை குறி பார்த்து அடித்தான். மாங்காய் காம்பு சிதறி கீழே பொத்தென்று விழுந்தது.

கீழே படுத்திருந்த ஞானசம்பந்தன் துள்ளி எழுந்தான். மாங்காயை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டான். கனிந்து விட்டது என்று அவனுக்கு தெரிந்து விட்டது.

விருமேப் பண்டிதர் தன் வலுவான கைகளால் அந்த பெரிய



மரக்கதவுகளை அழுத்தி திறந்தார். விதம் விதமான ஓசைகளுடன் எண்ணெய் காணாத அந்தக் கதவு விரியத் திறந்தது. கோவிலுக்குள் காற்று சுழன்று அடித்து சருகுகளை மேலே தூக்கி நிறுத்தின. அந்த சுழற்சி யாரோ நின்று வரவேற்பது போல அவருக்கு தோற்றம் அளித்தது. அவர் கை எடுத்து கும்பிட்டார்.

அது பஞ்சவன் மாதேவியின் பள்ளிப்படை. பஞ்சவன் மாதேவி இராஜராஜ சோழரின் அணுக்கி. அந்த அணுக்கிக்கு மாமன்னன் இராஜேந்திர சோழன், அவர் இறந்த பிறகு அவரை தகனம் செய்து அந்த அஸ்தியை கொண்டு வந்து இங்கு புதைத்து அதன் மீது சிவ லிங்கம் எழுப்பினான். பழுவேட்டரையர் குலத்து பெண்மணி என்பதால் பஞ்சவன் மாதேவிக்கு பழுவேட்டரையர் சார்பாக துவாரபாலகர்களும், நந்தியும் அனுப்பப்பட்டது.

அழகிய, உறுதியான கற்றளி ஒன்று எழுப்பப் பட்டது. மிகச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் நடந்தது.

இராஜராஜருடைய பட்டமகிஷி அல்ல. தந்தையினுடைய மனைவி அல்ல. இவள் அணுக்கி, நடனமாடுகின்ற பெண், அப்பாவின் காதலி. அவளுக்கு பள்ளிப்படை எழுப்ப வேண்டு மென்றால் அந்தப் பெண்மணி எவ்வளவு சிறந்தவளாக இருக்க வேண்டும். எத்தனை உத்தம ஸ்ரீயாக இருக்க வேண்டும். ஒரு காலத்தில் பஞ்சவன் மாதேவியிடம் போனால் நிச்சயம் காரியம் நடக்கும் என்ற எண்ணமும் மக்களுக்கு இருந்தது.

தஞ்சை எனக்கு வேண்டாம். நான் வேறொரு இடத்தில் வேறொரு நகரம் ஸ்தாபித்துக் கொள்வேன் என்று இராஜராஜரிடம் இராஜேந்திரர் சொல்ல இருவருக்கும் பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது.

மிகத் தெளிவாக அதற்குள் புகுந்து பஞ்சவன் மாதேவி இராஜேந்திரன் பக்கம் இருக்கின்ற நியாய, தர்மத்தை எடுத்துச் சொல்ல இராஜராஜர் புரிந்து கொண்டார், சம்மதித்தார். இராஜேந்திர சோழருக்கு அதில் மிகப்பெரிய திருப்தியும், நன்றி உணர்ச்சியும் இருந்தன. அதன் விளைவாகத் தான் இந்தப் பள்ளிப்படை கோவில் எழுப்பப்பட்டது.

ஆனால் கோவில் எழுப்பி என்ன புண்ணியம். இது சீராக பராமரிக்கப் படவில்லையே. இராஜேந்திர சோழர் தஞ்சையை விட்டு நகர்வதற்கு முன்பே பல கோவில் இப்படி இருக்கின்றன.

அவர் நகர்ந்து விட்டால் இதையெல்லாம் கேட்பாரே இல்லை. ஒரே தலைமுறையில் இந்த கோவில்கள் பாழடைந்து போவதா. இந்த கிராமத்து மக்கள் என்ன செய்கிறார்கள்" அவர் மெல்ல கோபப்பட்டார்.

கோவிலுக்குள் காராமணிச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. நிருதியில் வாழை மரங்கள் இருந்தன. தரையோடு தரையாக இருந்த கிணற்றின் மீது புதர்கள் மூடி இருந்தன. கருவறைக்குள் இருந்து வெளவால்கள் உள்ளேயும், வெளியேயும் பறந்து கொண்டிருந்தன. இப்போது மெல்ல புறக்கணிக்கப்படுகிறது. இன்னும் வேகமாக புறக்கணிக்கப் படப்போகிறது என்று வருகீசப் பண்டிதருக்கு தெரிந்தது. வருத்தமானார்.

இங்கு சரியான தலைமை உட்காராவிட்டால் தஞ்சை மேலும் பாழடைந்து விடும். இம்மாதிரியான பள்ளிப்படை கோவில்களுக்கு ஏற்கனவே ஜனங்கள் வருவதில்லை, யாருமே வராத இடமாக, அமானுஷ்ய இடமாக போய் விடும். இந்த இடத்தில் மெல்லிய அமானுஷ்யம் இருக்கத் தான் செய்கிறது. பஞ்சவன் மாதேவி உலா வரும் இடமாகத் தான் இருக்கிறது. இதை சரி செய்ய வேண்டும். இங்கு நான்கு நாட்கள் உட்கார வேண்டும்.

அவர் கோவில் ஏறி சம்மணமிட்டு உட்கார்ந்தார். கிராம மக்கள் வரிசையாக உள்ளே நுழைந்தார்கள்.

"எதனால் இந்த கோவில் பாழ்பட்டு கிடக்கிறது. எதனால் நீங்கள் பராமரிக்கவில்லை. இந்த கோவிலுக்குள் காராமணி விதைத்தது யார்? வாழை வளர்த்தது யார்? காராமணி விதைத்தவருக்கு ஒரு பொன் அபராதம். வாழை நட்டவருக்கு இருபது மாடை அபராதம், சரியாக பராமரிக்கப்படாத உங்களுக்கு இரண்டு பொன் அபராதம். இன்று மாலைக்குள் இந்த கோவிலுக்கு எண்ணெயும் சுத்தம் செய்ய துணிகளும், பெருக்கி, துடைக்க துடைப்பங்களும், நீருற்றி கழுவி விட குடங்களும் தேவைப்படும். உடனடியாக அதை கொண்டு வந்து சுத்தம் செய்யும் வேலையை ஏற்பாடு செய்ய வேண்டும். குங்கிலியம் போட்டு வெளவால்களை துரத்த வேண்டும்.

இங்குள்ள சிவாச்சாரியார் யார்? அவர் ஏன் வரவில்லை?

"பட்டீஸ்வரத்திலிருந்து சிவாச்சாரியார் வர வேண்டும். இந்த கோவிலுக்குள் வந்தால் அவருக்கு ஜுரம் வந்து விடுகிறதாம். அவருக்கு பயமாக இருக்கிறதாம். அதனால் அவர் வர மறுக்கிறார்.



நாங்களாக எப்படி பூஜை செய்வது என்று பயந்து வெறுமே பூ மட்டும் மேலே தூவிவிட்டு போய் விடுகிறோம். அதுவும் சில நாளாக நின்று விட்டது"

"சரி, நான் இங்கு அமர்ந்து பூஜை செய்யப் போகிறேன். தினசரி அபிஷேகம் செய்யப் போகிறேன். என்ன தொந்தரவு எனக்கு வந்து விடுகிறது என்று, நீங்கள் கூட இருந்து பார்த்துக் கொள்ளலாம்.

மிக அழகான, மிக அமைதியான கேட்டதை கொடுக்கின்ற வரம் உடைய தேவதையின் கோவில் இது. ஒரு பொழுதும் இதை புறக்கணித்து விடாதீர்கள். நான் இருக்கிறேன். எந்த கலவரமும் வேண்டாம். இன்னும் அரை நாழிகையில் நான் கேட்ட பொருள்கள் அத்தனையும் இங்கு வந்து விட வேண்டும். உடனடியாக தீபம் ஏற்றப்பட வேண்டும்" என்று சொல்ல, கிராம மக்கள் பரபரப்பானார்கள்.

இராஜராஜ சோழரின் அணுக்கி பஞ்சவன் மாதேவி சந்தோஷமானாள். வருகீசப் பண்டிதரை நோக்கி கும்பிட்டாள். உள்ளே இருக்கின்ற தேவதை தன்னை வணங்குவது அவருக்குத் தெரிந்தது. அவர் கை உயர்த்தினார்.

"இந்த தேசத்தை காப்பாற்ற வேண்டியது உன் கடமை. உன் மகன் போருக்கு போகிறான். அவனுக்கு துணை செய்ய வேண்டியது உன் கடமை. அவனை வாழ்த்து தாயே" என்று வருகீசர் விண்ணப்பித்துக் கொண்டார்.

மஞ்சள் நிற கொழுக்கட்டை மந்தாரை ஒன்று சுழன்று வந்து இராஜேந்திரர் தலையில் அமர்ந்து கொண்டது. தோட்டத்திலிருந்து காற்றில் மிதந்து வந்தது. 'அஹோ' என்று எல்லோரும் வியந்தார்கள்.

இராஜேந்திர சோழர் அதை தலையில் இருந்து எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு, பிறகு வலது காதில் சொருகிக் கொண்டார்.

இராஜேந்திர சோழர் கட்டிலில் உட்கார்ந்திருக்க அவனுடைய மனைவியர் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார்கள். பரவை மட்டும் இரண்டடி தள்ளி இருந்தாள். மற்றவர்கள் தழுவிக் கொள்ளட்டும் என்பது போல அந்த செய்கை இருந்தது.

"பரவை, சபை கூட இன்னும் எத்தனை நாழிகை ஆகும்"

"கால் நாழிகை ஆகும் என்று சொல்கிறார்கள். கால் நாழிகையில்

சகலரும் வந்து விடுவார்கள். அத்தனை சேனாதிபதிகளும் இங்கு இருப்பார்கள்"

"அந்தப்புரத்திற்கு மறுபுறம் இருந்த அரண்மனையில் ஒவ்வொரு சேனாதிபதியாக உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்கு தக்கவாறு ஆசனங்கள் போடப்பட்டன. உபச்சாரங்கள் செய்யப்பட்டன.

அருண்மொழிப் பட்டன் ஒரு நாற்காலியின் கைப்பிடியில் அமர்ந்தபடி வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான். யாரெல்லாம் வருகிறார்கள். யாரெல்லாம் வர வேண்டும் என்று அவன் மனம் வேகமாக கணக்கு போட்டுக் கொண்டிருந்தது.

முதல் வரிசையில் விக்கிரம சோழ சோழிய வரையனாகிய அரையன் இராஜராஜன் அமர்ந்திருக்க, அடுத்து அருண்மொழியின் தந்தை கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழ பிரம்மராயர் அமர்ந்திருந்தார். மாராயன் அருண்மொழியான உத்தம சோழ பிரம்மராயன் உட்கார்ந்திருக்க, உத்தம சோழ பல்லவரையன் இருந்தான். பாண்டிய ஸ்ரீ வல்லபன், வல்லவரையன் வந்தியத் தேவன், சத்ரிய சிகாமணி கொங்காள் அப்பிம்மையாகிய இராஜேந்திர சோழ பிரம்மராயன், வீர இராஜேந்திர பிரம்ம மாராஜன், உத்தம சோழ பல்லவராயன், முடி கொண்ட சோழ விழுப்பரையன், விக்கிரம சோழ வரையன், பாண்டிய உதய திவாகரன் இராஜராஜ நல்லூருடையான், நீலகண்டன், சேனாதிபதி மதுராந்தகன், பரகேசி மூவேந்த வேளான், கொடும்பாளூர் இராஜேந்திர சோழ மூவேந்த வேளார், இராஜராஜ அடிமுடிநாடாள்வான், இராஜேந்திர சோழ சோழ பிரம்மராயன், வில்லவன் ராஜன், ராஜராஜ குமார ராஜன், மூவேந்த வேளான், குணநிதி அருந்மொழி மூவேந்த வேளான், விக்கிரம சிங்க மூவேந்த வேளான், விக்ரம சோழ மூவேந்த வேளான், இராஜேந்திர சோழ மூவேந்த வேளான் வீர இராஜேந்திர தமிழ்தரைய அரையர், நீலகண்ட பட்டர், கொட்டி அதிராஜ்யாதி காடவராயர், வீர இராஜேந்திர முனைய தாராயர், ஆதித்த குடாமணி, இரட்டை பாடி கொண்ட சோழ மூவேந்த வேளான், ஜனநாத மூவேந்த வேளான், மதுராந்தக மூவேந்த வேளான், இராஜ மூவேந்த வேளான், வீர சோழ மூவேந்த வேளான், இராஜராஜ விஜயபாலர், விக்ரம நாராயண மவேந்த வேளான், வைகுண்டன், சோழன் விழுப்பரையன், நிருப மூவேந்த வேளான், வீர இராஜேந்திர கட்டியூர் நாடாள்வான், பார்த்திபஇராஜேந்திர பிரம்மராயன்,



இராஜமாணிக்க மூவேந்த வேளான், மறுகுல சோழ மூவேந்த வேளான், இராஜ வித்யாதர மூவேந்த வேளான், வீர இராஜேந்திர மலையப்பிச் சோழர், உதர மூவேந்த வேளான், மும்முடிச் சோழ விழுப்பரையர், விழுபுரம் நரசிம்மன் பட்டன், அத்தாமிபுரம் பட்டன், தான வினோத மூவேந்த வேளான், பராக்கிரம சோழ மூவேந்த வேளான், வில்லவன் மூவேந்த வேளான், இராமதூத வேளான், மாதேவன் பிரம்மராயன், கருணாகரன், மாதேவன் வெண்காடன் என்று பலரும் வந்திருந்தார்கள்.

இது தவிர நாராயணகவி என்ற புலவரும் சதுரான பண்டிதரும் தனியாக வீற்றிருந்தார்கள். இவர்கள் இருவருமே நாள் நட்சத்திரம் குறிப்பதில் வல்லவர்கள்.

இது பெருஞ்சபை. படை எடுக்கும் முன்பு என்ன செய்யப் போகிறோம் என்று சேனாதிபதிகளுக்கு தெளிவாக அறிவித்து விட வேண்டும். சேனாதிபதிகள் தங்கள் படை வீரர்களுக்கு சொல்வார்கள். எனவே, என்ன செய்யப் போகிறோம், எப்படி செய்யப் போகிறோம் என்பதை சொல்லுவதற்காக இந்த கூட்டத்தை இராஜேந்திரர் கூட்டி இருக்கிறார். கூட்டம் குறை வர கூடி இருந்தது.

கூட்டம் குறைவர கூடி விட்டது என்று இராஜேந்திர சோழருக்கு உள்ளுணர்வு சொன்னது போலும், சக்கென்று எழுந்து நின்றார். ஒவ்வொரு மனைவியரையும் இறுக்க அணைத்துக் கொண்டு முத்தமிட்டார்.

"பரவை, என்னோடு வா" என்று சொல்லி சால்வையை மேலே போர்த்தி நெற்றியில் திருநீறு இட்டு வெளியே வந்தார். பரவை மேலே சால்வை போட்டு பின் தொடர்ந்தாள்.

இராஜேந்திர சோழர் உள்ளே நுழைந்ததும் தடேர் தடேர் என்று கைத்தடியை தரையில் தட்டி கட்டியக்காரன் உரத்த குரலில் அவர் வருகையை அறிவித்தான்.

'திருமன்னி வளர இரு நில மடந்தையும்

போர்ச்செய பாவையும் சீர்த்தனிச் செல்வியும்

தன்பெரும் தேவியராகி இன்புற...' என்று அவருடைய மெய்கீர்த்தியை, புகழை உரத்து பாடினான். அவன் மெய்கீர்த்தியை முடித்ததும், சோழம், சோழம், சோழம் என்று சேனாதிபதிகள் பிளிறினார்கள்.

இராஜேந்திர சோழர் வலது கையை இறுக்க மூடி தன் மார்பில் பட்டென்று மோதிக் கொண்டு,

"சோழம் சோழம் சோழம்" என்று அடிக்குரலில் சொன்னார். எல்லோரும் அவரை நமஸ்கரித்தார்கள். இராஜேந்திர சோழர் பதிலுக்கு நமஸ்கரித்தார். அமரச் சொல்லி சைகை காட்டினார். எல்லோரும் அமர்ந்தார்கள். அமரும் சலசலப்பு சிறிது நேரம் இருந்தது. பிறகு, எந்த சப்தமும் இல்லாமல் அமைதியாக அவர் பேச்சுக்கு காத்திருந்தது.

"ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய. என் உயிரினும் மேலான சோழ தேசத்து சேனாதிபதிகளே மாவீரர்களே உங்கள் அனைவரையும் வரவேற்று வணங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர் கை கூப்பினார்.

எல்லோரும் தங்கள் கைகளை சிரம் மேல் கூப்பி அவருக்கு பதில் மரியாதை செய்தார்கள்.

நான் சுற்றி வளைத்து பேச விரும்பவில்லை. எதற்கு இந்த போர் என்பதை மட்டும் தெளிவுபட சொல்ல விரும்புகின்றேன்.

என் தங்கையினுடைய மகன், என் மருமகன் வேங்கி தேசத்திலிருந்து துரத்தப்பட்டிருக்கிறான். அவனுக்கு பதிலாக வேறொரு பெண்ணுக்கு பிறந்த விஷ்ணுவர்தன விஜயாதித்தன் என்பவனை பட்டம் ஏற்க நம்முடைய குல எதிரியான மேலைச் சாளுக்கியத்து மன்னன் ஜெயசிம்மன் பல வகையில் முயன்று வருகிறான். ஆனால் என் மருமகனை பதவியில் அமர்த்துகின்ற போர் அல்ல இது. அது ஒரு சாக்கு.

மேலைச் சாளுக்கியம் கீழைச் சாளுக்கியத்தை வளைத்து கீழைச் சாளுக்கியத்தோடு கலந்து பிறகு சோழ தேசத்திற்குள் நுழைய எண்ணம் கொண்டிருக்கிறது. நாம் போய் அடித்து நொறுக்கினோம் அல்லவா. பதிலுக்கு நொறுக்குவோம் என்று சபதம் செய்திருக்கிறது. நாம் கைப்பற்றினோம் அல்லவா, அந்த இடங்களிலெல்லாம் உள்ளுக்குள் நுழைந்து இவை மறுபடியும் என்னுடைய இடம் என்று கொக்கரிக்கிறது. தொண்டை நாட்டை கபளீகரம் செய்வோம், காஞ்சிபுரத்தை எரியூட்டுவோம் என்றெல்லாம் மேலைச் சாளுக்கியர் பேசுகிறார்கள். திருவொற்றியூரை சூறையாடப் போகிறோம், மயிலை, திருவல்லிக்கேணியை எரியூட்டப் போகிறோம் என்று அங்குள்ள மக்களுக்கு ஓலை அனுப்புகிறார்கள்.



மக்களை கலவரப் படுத்துகிறார்கள். இரட்டைபாடிக்காக அதாவது வடமேற்காகப் போய் பிறகு மறுபடியும் வடகிழக்காக திரும்பி மானிய கேடயம் போய் மானிய கேடயத்தை அடித்து நொறுக்கி விட்டு, அங்கிருந்து இன்னும் சற்று கிழக்காக நகர்ந்து வேங்கியை நோக்கி வர வேண்டும்.

ஒருபடை கடற்கரை சாலை வழியாக வேங்கியை நோக்கி போகும். நமக்கு துணையாக குடகிலிருந்து மனிஜா வந்து நம்மோடு சேர்ந்து கொள்கிறார். ஆக, இடுக்கி தாக்குதல், ஒரு தூணும் நிற்க வொட்டாது. ஒரு அரண்மனையும் நிற்க வொட்டாது. ஒரு வீடும் நிற்க வொட்டாது சகலத்தையும் இடித்து தள்ள வேண்டும். யானையை விட்டு இடிக்க வேண்டும். நிலைக்காலை பெயர்க்க வேண்டும். தூணை பெயர்க்க வேண்டும். கூரை தரையில் இருக்க வேண்டும். இதை முக்கியமாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். கொடுமையான தண்டனை தான் அவர்களை மறுபடியும் சண்டைக்கு வராமல் இருக்க வைக்கும்.

இதோடு நாம் முடிந்து விடுவதில்லை. வேங்கியை தாண்டி ஒட்ட தேசத்திற்கு போக வேண்டும். ஒட்டர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். பல்லாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த பற்களை உடைக்க வேண்டும். அதைத் தாண்டி கலிங்கம், கலிங்கம் தாண்டி மகிபாலன் இருக்கின்ற பாலவம்சத்து மாளவ தேசத்தை அடித்து நொறுக்க வேண்டும். பிறகு கங்கை கரையை அடைய வேண்டும்"

"கங்கை கரைக்கு போவது என்னுடைய நோக்கமல்ல. கங்கை கரைக்கு போய் கங்கை நீரை எடுத்து வந்து இங்குள்ள கோவில்களுக்கு கொடுப்பது விருப்பமென்றாலும் அதுவல்ல நோக்கம். நம்முடைய நானா தேசிகள் வணிகர்கள் ஸ்ரீ விஜயத்தில் மிகப்பெரிய துன்பங்கள் அனுபவித்திருக்கிறார்கள். அந்த துயரம் பார்க்க வயிறு எரிகிறது. அதைப் பற்றி நீங்களும் கேள்விப் பட்டிருப்பீர்கள். எனவே, இந்தப் போரை தொடர்ந்து உடனடியாக, தொடர்ச்சியாக, ஸ்ரீ விஜயத்தை நோக்கி போக வேண்டும். அப்படி ஸ்ரீ விஜயம் நோக்கி போக கங்கை கரை முகத் துவாரத்தில் நிற்கின்ற கடாரத்து படகுகள், நாவாய்கள், பெரும் நாவாய்கள் இவைகளை எல்லாம் வளைத்து பிடித்து வர வேண்டும். திரும்ப வரும்பொழுது ஒரு நாவாய் கூட்டம் நாகப்பட்டினம் வந்து சேரும். நாம் தரை

வழியாக வந்து சேருவோம்"

"எனவே கங்கையை தொடுவது ஒரு விஷயமாக இருந்தாலும் மிக பெரிய நாவாய்களை கொண்டு வர வேண்டும். அந்த நாவாய்களின் அளவு பிரமிக்கத்தக்கதாக இருக்கிறது என்று வணிகர்கள் சொல்கிறார்கள். அந்த நாவாய்க்குள் நாலு யானைகள் நிற்கலாம். நூறு குதிரைகள் நிற்கலாம். முன்னூறு ஆட்கள் இருக்கலாம். அவர்கள் அத்தனை பேருக்கும் குடி நீரும், உணவும் வைத்துக் கொள்கின்ற வசதியும் இருக்கலாம், போர் கருவிகள் இருக்கலாம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவ்வளவு பிரம்மாண்டமான நாவாய்களை நாம் அங்கிருந்து எடுத்து வரப் போகிறோம். இங்கேயும் நாவாய்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை தாண்டி சேர தேசத்திலிருந்து கைப்பற்றிய நாவாய்கள் வெகு சீக்கிரம் நாகை வந்து அடையும். எனவே, ஸ்ரீ விஜயம் நோக்கி போகின்ற ஒரு அமைப்பும் நம்மிடையே இருக்கிறது"

"இன்று கிளம்பினால் மறுபடியும் சோழ தேசம் வர எத்தனை காலமாகும் என்று நினைக்கிறீர்கள்" அவர் பேசி நிறுத்தினார்.

சேனாதிபதிகள் 'ஹா' என்று வாய் பிளந்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்கள்.

"ஸ்ரீ வல்லபரே சொல்லுங்கள். இப்பொழுது கிளம்பினால் எப்பொழுது ஆகும்"

"இரண்டு வருடங்களாவது ஆகும்"

"மிக நல்லது. மிகச் சரியாக சொன்னீர்கள். இரண்டு வருடங்கள் ஆகும். தஞ்சைக்கு வந்து நாகையில் படகு ஏறப் போவதில்லை. கீழைச் சாளுக்கியத்திலேயே ஒரு நல்ல துறைமுகமாக பார்த்து நாம் படகு ஏறி விடுவோம். தூதுவர்களை அனுப்பி ஈழத்திலிருந்து நாவாய்கள் வர வேண்டும். ஈழத்து நாவாய்கள் மட்டுமல்ல சேர தேசத்திலிருந்து கொண்டு வந்த மிகப் பெரிய மரக்கலன்களும் நம்மை நோக்கி வர வேண்டும். எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு கீழைச் சாளுக்கியத்தில் ஏறி மீதி உள்ளவர்கள் திருமயிலையிலும், திருக்கடல் மல்லையிலும் பிறகு நாகையிலும் ஏறிக் கொண்டு ஒட்டு மொத்தமாக நூற்றி இருபது மரக்கலன்களுக்கு மேலாக ஸ்ரீ விஜயத்தை அடைய வேண்டும்.

ஸ்ரீ விஜயத்தின் வரைபடம் இதுதான்" என்று சொல்ல,



அருண்மொழி மிகப்பெரிய வரைபடத்தை ஆணியில் அடித்து மாட்டினான். எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

ஸ்ரீ விஜயத்தின் கிழக்கு பக்கம் பரந்த வயல்வெளிகள் உடையது. ஸ்ரீ விஜயத்தின் மேற்கு பக்கம் முழுவதும் மலைகளால் ஆனது. மலைகள் என்றால் உயர்ந்த மலைகள் அல்ல. சிறிது சிறிய குன்றுகள் இந்த குன்றுகளுக்கு நடுவே இடைவெளி உண்டு. இந்த இடத்திலிருந்து காலாட்படை போகும். கிழக்கே யானைகளும், குதிரைகளும் இறங்கும். இங்கேயும் இருமுனை தாக்குதல். ஸ்ரீ விஜயத்தை தீ இட வேண்டும். அவர்கள் நம் பக்கம் சேர்க்க வேண்டும். அவர்கள் துணையோடு கடாரம், காம்போஜும் எல்லாவற்றையும் கொள்ளை அடிக்க வேண்டும். அத்தனை தங்கமும் நமக்கு வேண்டும். ஏனெனில் ஜெயங்கொண்டத்தில் நான் கட்டுகின்ற அரண்மனைக்கு நிறைய ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலைச் சாளுக்கியத்திலிருந்தும், இரட்டை பாடியிலிருந்தும், திலகத்திலிருந்தும், ஏன் ஒட்டர்களிடமிருந்தும், கீழைச் சாளுக்கியத்திடமிருந்தும், கலிங்கர்களிடமிருந்தும் ஆட்கள் வர வேண்டும். இங்கு வந்து கல் சுமக்க வேண்டும். நமக்கு அவர்களுக்கு கூலி கொடுப்பதற்கு உண்டான தங்கத்தை ஸ்ரீ விஜயத்திலிருந்து கொள்ளை அடிக்க வேண்டும். கடாரத்திலிருந்து கொள்ளை அடிக்க வேண்டும்.

யாரேனும் ஒரு ஆள் விரல் நிமிர்த்தினால் கூட அந்த விரல் தரிக்கப்பட வேண்டும். யாரேனும் ஒருவர் முறைத்தால் கூட நெஞ்சில் கத்தி இறக்கப்பட வேண்டும். 'தூ' என்று ஒரு பெண் துப்பினால் என்ன செய்வீர்கள். சொல்லுங்கள்" ஒரு சேனாதிபதியை நோக்கி இராஜேந்திர சோழர் கேட்டார்.

சேனாதிபதி திகைத்தார்.

"பளீர் என்று கன்னத்தில் அறைவேன்"

"கூடாது. அந்த இடத்திலேயே சிரச்சேதம் செய்ய வேண்டும். தூ என்று துப்பியது பெண்ணை கொல்வதா என்று யோசிக்காதீர்கள். உங்கள் மீது அல்ல. என் மீது. சோழ தேசத்தின் மீது. சோழ தேசத்து வணிகர்கள் மீது. இரண்டு கைகளையும் செதுக்கி, ஒன்றாகக் கட்டி கடைசி வரை சிவனை கும்பிட்டு கொண்டிருடா என்று சொல்லி இருக்கிறார்கள் ஸ்ரீ விஜயத்தில், விடுவேனா. அவர்கள் கைகளை

தரிப்பேன். முதுகு விரிய அடிப்பேன். பெண்களை அடித்தால் ஆண்கள் பதறுவார்கள் அல்லவா. பெண்களை அடிப்பேன். ஆண்கள் பதற வேண்டும். பதறி சண்டைக்கு வர வேண்டும். அப்படி சண்டைக்கு வந்தவனை குத்தி கொல்ல வேண்டும். பெண்களை அடித்தாலும் எவன் மௌனமாக கை கட்டிக் கொண்டு நிற்கிறானோ அவன் நமக்கு துணையாக வேண்டும்.

குழந்தைகளை அனுப்பி கிணற்றில் விஷம் கலந்தார்களே ஞாபகம் இருக்கிறதா. முன்னூற்று அறுபத்தியேழு வீரர்கள் இறந்தார்களே ஞாபகம் இருக்கிறதா. அதுபோல இங்கும் நடக்கலாம். எனவே ஒரு வயது குழந்தையை கூட இராஜேந்திர சோழன் நம்ப மாட்டான். அவனும் எதிரி, எதிரியின் மகன் எதிரி. பாம்புக்கு பிறந்தது பாம்பு. தேளுக்கு பிறந்தது தேள். தேளுக்கு பட்டுப்பூச்சியா பிறக்கும். பைங்கிளியா பிறக்கும்.

எனவே சிறிதளவும் ஈவு இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டிய போர் இது என்பதை சொல்லத்தான் உங்களை அழைத்தேன்"

"பாவம் விட்டு விட்டேன் என்று தயவு செய்து என்னிடம் சொல்லாதீர்கள். நான் உங்களை விட மாட்டேன். அவ்வளவு கடுமையாக என்னால் இருக்க முடியாது என்று உங்களில் யாரேனும் நினைப்பின் அவர்கள் இப்பொழுதே ஒதுங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு கோட்டை காவல் வேலை நிச்சயம் தருகிறேன், என் நெல் அளக்கிற வேலை, பருத்தி துணிகளுக்கு பாகு போடுகிற வேலை, கம்மாளர்களுக்கு உதவியாக இருக்கிற வேலை என்று பல வேலைகளை நீங்கள் செய்யலாம்"

"போர் முனைக்கு வந்தால் இராஜேந்திர சோழனுக்கு இப்போது இருக்கின்ற வெறி உங்களுக்கும் இருக்க வேண்டும். இதை விட அதிகமாக இருக்க வேண்டும்"

சத்திரிய சிகாமணி கொங்காழ்வார் எழுந்தார்.

"ஜெயசிம்மன் தோற்றோடி போவான் என்பது என் எண்ணம். நாம் வருவதற்கு முன்பு அந்த இடத்தை வெங்கியை காலி செய்து ஓடிப்போய் வடக்கே ஒளிந்து கொள்வான் என்பது என்னுடைய அனுமானம்"

"இருக்கலாம்"



"நாம் ஜெயசிம்மனை பின் தொடருவோமா, அல்லது..."

"கங்கைக்கு போக வேண்டும். என் தந்தை செய்து முடிக்காத, ஆசைப்பட்ட அந்த வேலையை நாம் செய்து முடிக்க வேண்டும். சோழ தேசத்தில் உள்ள ஒவ்வொரு சிவாலயத்திற்கும் ஒரு சொம்பு கங்கை ஜலம் தரப்பட வேண்டும். புதிய ஏரி ஒன்றை ஜெயங்கொண்டத்திற்கு அருகே நிர்மாணித்து அதில் கங்கையை கலந்து அது முழுவதும் கங்கை என்று நாம் கொண்டாட வேண்டும். வடக்கே இருந்த கங்கை தெற்கே இராஜேந்திர சோழனால் வந்தது. பகீரதன் தவம் செய்து கொண்டு வந்த கங்கை இராஜேந்திரன் எந்த தவமும் செய்யாமல் அவனுடைய சேனாதிபதிகள் துணையோடு இங்கே கொண்டு வந்து விட்டான் என்ற புகழ் எனக்கு வேண்டும்"

"சோழம் சோழம் சோழம்" என்று அவர்கள் கத்தினார்கள்.

"இராஜேந்திர சோழர் வாழ்க" என்று அவர்கள் கத்தினார்கள்.

இராஜேந்திர சோழர் விழி சிவக்க, பற்கள் நறநறக்க, [illegible] முறுக்கிய படி உடம்பில் ஒரு பதட்டத்தோடு இருந்தார்.

பரவை மெல்ல முதுகில் கை வைத்து [illegible] பரவையை பார்த்து சிரித்தார். அமைதியானார்.

என்னுடைய எண்ணம் [illegible] கடற்படையை உருவாக்குவதும் நான் [illegible] அடுத்த இரண்டு [illegible] எண்ணமே இருக்கக் கூடாது [illegible] இதை செய்கிறோம் என்ற நினைப்பு நமக்குள் இருக்க வேண்டும்.

இரண்டு முறை நான் குறித்து நாள் நகர்ந்து விட்டது சதுரான பண்டிதரே. இப்பொழுது சொல்லுங்கள், எந்த நாள் கிளம்பலாம்"

"நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, உங்களுக்கு சூரியன் மிக நல்ல கிரகம், சூரிய ஓரையில், சூரிய திசை நோக்கி அதாவது கிழக்கு நோக்கி சற்று நகர்ந்து விட்டு பிறகு வடக்கு நோக்கி நகருங்கள்"

இந்த கேள்வி வரும் என்று காத்திருந்தது போல சதுரான பண்டிதர் சொல்ல, அவர்கள் மறுபடியும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"வேறு ஏதேனும் கேள்வி இருக்கிறதா"

"ஒரு இடம் நிரம்பாமல் இருக்கிறது" அருள்மொழி உரக்க

குரல் கொடுத்தாள். சபை அவனை நோக்கி திரும்பியது.

தரையிலே நடக்கின்ற போரில் நமக்கு காயம் ஏற்பட்டால் அதற்கு மிகச் சரியான மருந்துகளை நம்முடைய மருத்துவர் குழு வைத்திருக்கிறது. ஆனால் கடல் பயணம் எப்படி என்று நம்மில் பலருக்கு தெரியாது. என்ன மருந்துகள் வேண்டும் என்பதும் நமக்கு அனுபவம் இல்லை. எனவே இதற்கு அனுபவமிக்கவர்கள் யார், எங்கு இருக்கிறார்கள், என்ன மருந்து, என்ன விதமான கடல் நோய்கள் வரும் என்பதை தெரிந்து கொள்ளாமல் போனால் பலஹீனமாக அங்கு போய் இறங்குவோம் என்று தோன்றுகிறது"

"வணிகர்களை கேட்டால் போதுமா அல்லது வைத்தியர்களை கேட்க வேண்டுமா"

"வணிகர்களையும் கேட்போம். வைத்தியர்களையும் கேட்போம். வைத்தியர்களில் முக்கியமான உத்தம சோழ மிலாடுடையாரும், இராஜேந்திர சோழ பிரம்மராயனும், உத்தம சோழ கோனும் நகர்ந்து விட்டார்கள். அவர்கள் வாள் முதுகு படையினர். முன்னே போய் திருவொற்றியூரில் தங்கி விட்டார்கள். எனவே வைத்தியரைத் தான் நாம் அழைக்க வேண்டும்"

"நல்லது. வைத்தியரை அழைத்து வாருங்கள். வணிகர்களிடம் சந்தேகம் கேளுங்கள். இதை கிருஷ்ணன் ராமன் அவர்கள் பொறுப்பாக எடுத்துக் கொள்ளட்டும்" என்று சொல்ல, "சபை கலையலாம்" என்று கட்டியக்காரன் சொல்ல,

எல்லோரும் வெளியே நகர்ந்தார்கள்.

இராஜேந்திரசோழர் சிம்மாசனத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். மெல்ல இறங்கினார். பரவையின் தோளில் கை வைத்து நகர்ந்தார்.

"அருண்மொழி என்னோடு வா" என்றார். அருண்மொழி அந்தப்புரத்துக்குள் நுழைந்தான்.

வேற்று ஆண் மகன் வருகிறான் என்று தெரிந்ததும் பட்டமகிஷியும், இராஜேந்திரர் மனைவியும் மேலே சால்வையை போர்த்திக் கொண்டு எழுந்து நின்றார்கள். சகலரையும் கால் தொட்டு அருண்மொழி வணங்கினான். அவனுக்கு ஆசனம் அளிக்கப்பட்டது.

"கடல் நோய் என்று ஒன்று உண்டா. அப்படி வருமா, நீ சொன்னது எனக்கு புதிராக இருந்தது. யோசிப்பதற்குள் சபை கலைந்து விட்டது. என்னது கடல் நோய்?"



"பலஹீனம் வரும், தலை சுற்றும், ஆடிக் கொண்டே இருப்பதால் வாந்தி வரும். உணவு உள்ளே பிடிக்காது. குளிர் காற்று இருப்பதால் மூக்கில் தடுமன் பிடிக்கும். பிறகு மூச்சிரைப்பு இருக்கும். பிறகு ஜுரம், கண் திறக்க வொட்டாத அளவுக்கு கடும் ஜுரம் இருக்கும். அந்த கடும் ஜுரத்தோடு தரை இறங்கினால் என்ன போர் செய்வது? இதை நிச்சயமாக நமது போர் வீரர்கள் சமாளித்தாக வேண்டும்"

"அடடே, அப்படியானால் இதற்கு உண்டான மருந்துகள் என்ன?"

"தெரியாது. நான் இதுவரை கடற்பயணம் போனதில்லை. ஆனால் இப்படியெல்லாம் தொந்தரவு இருக்கும். வணிகர்கள் சொல்வார்கள்"

"வணிகர்களிடம் மருந்து இருக்குமா?"

"இருக்கலாம். இருபது பேருக்கு முப்பது பேருக்கு மருந்து இருக்கலாம். நாம் நூற்றி இருபது மரக்கலன்களில் போக வேண்டுமென்றால் எத்தனை? எங்கிருந்து? எப்படி?"

"இது முக்கியமான பிரச்சனையாக இருக்கும் போலிருக்கிறது. சரி வைத்தியரை வரவழைத்து விடு. வைத்தியர் குழுவையே வரவழைத்து விடு. நாம் பேசுவோம். நீ மட்டும் பேசுகிறாயா. அல்லது நானும் வரட்டுமா"

"நீங்களும் இருங்கள், புதிது புதிதாக வேறு ஏதேனும் செய்திகளை அவர்கள் தரக்கூடும்"

"ஒரு வேளை அவர்களுக்கு இதில் பரிச்சயம் இல்லாமல் இருந்தால் என்ன செய்வது?" இராஜேந்திரர் கேட்டார்.

"அவர்களுக்கு பரிச்சயம் இல்லாமல் இருக்காது. ஏனெனில் வணிகர்கள் அவர்களிடமிருந்து தான் மருந்துகள் வாங்கிப் போகிறார்கள்.

"வணிகர்களை எப்படி சந்திக்கலாம்"

"நாளை மறுநாள் நாமே போகிறோம். அதனால் நாளை காலையில் சந்திக்கலாம்" அருண்மொழி பட்டன் சொன்னான்.

"போய் வா" அருண்மொழி, "என்ன அவசரமானாலும், எப்போது வேண்டுமானாலும் நீ அழைக்கலாம்" அவர் உள்ளே நகர, அருண்மொழி வெளியே வந்தான்.



# 27

அவனுடைய விரல்கள் அவளுடைய உடம்பு முழுவதும் தடவின. அவள் மயங்கிச் சரிந்தாள். என்னால் முடியாது நீயே ஏதேனும் செய்து கொள் என்பது போல் கிடந்தாள்.

"இவ்வளவு எளிதாக முடியும் என்று நினைத்தாயா?" நாகரத்தினத்தை பார்த்துக் கேட்டான். அவளுடைய சிறிய முலைகளில் முகம் தேய்த்தான். உறுதியானதும், சிவந்த காம்புகளை உடையதுமான அந்த முலைகள் ஆரோக்கியமாக இருந்தன. நரம்புகள் புடைத்திருந்தன. உடம்பு நெகிழ்ந்து கொண்டே இருந்தது. இடுப்பில் கை வைக்க இன்னும் நெளிந்தாள். அந்த நெளிவு அவனுக்கு வெட்கத்தை கொடுத்தது. அவனுக்கு ஆவேசத்தை கொடுத்தது. அவர்கள் திரும்பத் திரும்ப இறுக்கத் தழுவிக் கொண்டார்கள்.

"எனக்கு, நமக்கு திருமணமாகப் போகிறது என்ற சந்தோஷத்தை விட, உங்களோடு நான் போர் முனைக்கு வரப் போகிறேன் என்ற சந்தோஷம் தான் பெரிய குதியலாக இருக்கிறது"

"குதியலாக இருக்கிறது என்று வெறுமே வார்த்தையில் சொன்னால் போதுமா, செய்கையில் காட்டு"

"எப்படி காட்டுவது?"

"இப்படி" அவன் அவள் இதழோடு இதழ் பதித்தான். நாக்கு சுவைத்தான். அவள் மயங்கினாள். எச்சில் ஒழுக அவன் மீது சாய்ந்து கிடந்தாள்.

"அப்பா, என்ன கம்பீரம்" அவள் அவனை வியந்தாள்.

அவன் அவளை மெல்லத் தழுவினான்.



...என்ன குழைவு, என்ன மென்மை. அவனும் வியந்தான். பரஸ்பரம் ...ந்து கொண்டிருந்தார்கள். கலவியில் ஈடுபட தவித்தார்கள். ...னால் முறையாக கலவியில் ஈடுபட அவர்கள் இன்னும் பயில ...ல்லை. அந்த உடம்பு இன்னும் பக்குவப்படவில்லை. ஆனால் ...ந்த தழுவலே, இந்த முத்தமிடலே, இந்த கொஞ்சலே ...வர்களுக்கு மிகப்பெரிய சுகத்தை கொடுத்தது.

வாசலில் குதிரைகள் சத்தம் கேட்க, வைத்தியர் வெளியே கதவு ...றந்து வந்தார். அவர்கள் இருவரும் திடுக்கிட்டு பிரிந்தார்கள். அவன் எழுந்து நின்று உடைகளை அணிந்து கொண்டான். அவளும் தன்னை சீராக்கிக் கொண்டாள். இரண்டு பேரும் என்ன என்று காது கொடுத்து அறை வாசலில் நின்று கேட்டார்கள்.

அவனை தந்தை அழைக்கப் போகிறார் என்று தெரிந்து அவனை முதுகில் தட்டி முன்னே போ என்று சைகை செய்தாள். அவன் முன்னே போய் கூடத்தில் நின்று கொண்டான்.

வைத்தியர் கூடத்திற்கு வந்தார். அவன் நிற்பதை பார்த்து "வெளியே வா. உன்னிடம் வணிகர்கள் பேச வேண்டும் என்கிறார்கள்" என்று சொல்ல, அவர்கள் இருவரும் வந்தார்கள். மற்ற வைத்தியர்களையும் அழைத்து வர ஆள் அனுப்பினார்கள். வணிகர்கள் கூட்டம் திண்ணையில் உட்கார, எதிர் திண்ணையில் வைத்தியர் உட்கார்ந்தார்.

"கடல் தாண்டி போக வேண்டும் என்றால் என்ன மருந்து. என்ன விதமான பிரச்சனைகள் ஏற்படும்?"

"ஒரே ஒரு மருந்து தான். கிச்சிலிக்காய் போதும். எந்த இடத்தில் கிச்சிலிக்காய் கிடைக்கிறதோ, அதை பச்சையாக பறித்து இலையாகவும், காயாகவும் வாங்கிக் கொண்டால் போதும், அதை முகர்ந்தால் போதும். தடுமன் பிடித்தால் அதற்கு உண்டான மருந்துகள் எங்களிடம் இருக்கின்றன. நுரையீரலில் கபம் சேர்ந்தால் அதை நீக்கவும் எங்களுக்கு தெரியும். ஜுரம் இருப்பினும் அதற்கு உண்டான மருந்துகள் இருக்கின்றன. வயிறு பிரட்டி வாந்தி எடுத்தால் அதற்குண்டான மருந்துகளையும் கைவசம் வைத்திருக்கிறோம். ஆனால், பலநூறு மரக்கலன்களில் ஒரு லட்சம் பேர் படை எடுப்பார்கள் என்றால் அத்தனை பேருக்கும் கிச்சலிக்காய் எப்படி போதும்.

மருந்து சேகரிக்க நாளாகுமே, எனவே நாலா திசையிலும் ஆள் அனுப்பி சேர தேசத்திலிருந்தும், பாண்டிய தேசத்திலிருந்தும் அவைகளை கொண்டு வரச் செய்து, போகின்ற இடத்தில் உள்ள மருத்துவர்களை சந்தித்து அவர்களிடமிருந்தும், அந்த மருந்துகளை பறித்துக் கொண்டு வர வேண்டும். அப்படி வந்தால் போருக்கு தாங்குமாறு மருந்துகளை சேகரித்து விடலாம்.

வெறும் பொன், பொருளை கொள்ளையடிப்பது மட்டுமல்லாது மருந்துகளை கொள்ளை அடிக்கவும் நாம் திட்டம் தீட்டியாக வேண்டும்" என்று வைத்தியர் சொன்னார்.

"இந்தப் பிள்ளை ஏதோ சொல்ல விரும்புகிறான் போலிருக்கிறதே" என்று வணிகர் ஞான சம்பந்தனை நோக்கிச் சொன்னார்.

"அய்யா, எலுமிச்சை, கிச்சலி இந்த இரண்டு காய்கள் போதும். இவைகளை மெல்ல கீறி முகர்ந்து பார்த்தால் கொஞ்சம் சிறிய துளை இட்டு வாயில் இட்டுக் கொண்டால், கொஞ்சம் அழுத்தி நெற்றியில் தடவிக் கொண்டால் தலைவலி வராது. வயிறு பிரட்டல் வராது. வாந்தி வராது. தடுமனும் பிடிக்காது. எனவே கிச்சலி இலைகளாகவும், காய்களும் இருந்தால் அது மட்டும் போதும். கிச்சலி காய்கள் பாண்டிய தேசத்தில் ஏகமாய் வளர்கின்றன. சேர தேசத்திலும் உண்டு. இப்பொழுது பறித்தால் இருபது நாளைக்கு கிச்சலி காய்கள் தயாராக இருக்கும். எனவே நீங்கள் எப்பொழுது கிளம்புகிறீர்கள் என்று சொன்னால் அப்போது பறித்துக் கொண்டால் போதுமானது. இப்போது பறித்துக் கொண்டிருக்கிற அவசியம் இல்லை. ஆயினும் சில கிச்சலி காய்களை ஊறுகாயாக போட்டு வைத்து உப்பு பதனிட்டு வைத்துக் கொள்ளலாம். அதில் பெரிதும் பயனில்லை. பச்சை கிச்சலியினுடைய பயன் மிகவும் அரிது.

எப்பொழுது கிளம்பப் போகிறீர்கள், எங்கிருந்து கிளம்பப் போகிறீர்கள் என்று சொன்னால் அதற்கேற்றபடி கிச்சலி காய்கள் சேகரிப்பது நடக்கும்"

"நன்றாக இருக்கிறது இவன் பேசுவது. இப்போதே மூட்டை கட்டி வைத்துக் கொண்டு இடத்தை அடைத்துக் கொள்ள வேண்டாம். சரி நீ யார்?"



"நான் இவருடைய மாப்பிள்ளை, ஞானசம்பந்தன்"

"அவன், எனக்கு மட்டும் மாப்பிள்ளை இல்லை. இராஜராஜ பிரம்மராயருடைய பிள்ளை. சோழ குல சுந்தரிக்கும், இராஜராஜ பிரம்மராயருக்கும் பிறந்த பிள்ளை"

"அடடே, பெரிய இடத்து பிள்ளை அல்லவா. அவனையா மருமகனாக பெற்றிருக்கிறீர். வாழ்க வாழ்க. எங்களுக்கு ஒன்றும் திருமண செய்தி தெரியாதே"

"நாளை தான் திருமணம் நடக்கப் போகிறது"

"அப்படியா வாழ்க வாழ்க வாழ்க. இதோ எங்களால் ஆன சிறிய பரிசு" அவர்கள் சட்டென்று ஒரு சிறிய துணியை வைத்தார்கள். பொற் கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன. யாரோ ஒருவர் தன் கை கடகத்தை அவிழ்த்து கொடுத்து.

"இந்தாரும். வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல அவர்கள் திருமண பரிசாக ஞான சம்பந்தனுக்கு கொடுத்தார்கள். ஞான சம்பந்தன் உள்ளே தலை நீட்டி மனைவியை அழைத்தான். அவள் வெளியே வந்தாள். சபையை நமஸ்கரித்தாள். இரண்டு பேரும் விழுந்து வணங்கி பரிசுப் பொருளை பெற்றுக் கொண்டார்கள்.

"திருமணத்துக்கு முன்பே பரிசு கிடைத்த ஒரே மாப்பிள்ளை நீதான்டா" என்று ஒரு வைத்தியர் சொல்ல, எல்லோரும் வாய் விட்டு சிரித்தார்கள்.

"அய்யா, கடற்பயணம் பற்றிய பயத்தை, அதற்கு உண்டான நோய் தீர்க்கும் மருந்தை என்னிடம் விட்டு விடுங்கள். அருண்மொழி அய்யாவிடம் என்னுடைய வாக்குறுதியைச் சொல்லுங்கள். ஒருவருக்கும் தீங்கு நேரா வண்ணம் நான் அதை செய்கிறேன்"

"அதாவது நீயும் கடற்பயணம் வருகிறேன் என்று சொல்லுகிறாயா?"

"ஆமாம், நானும், என் மனைவியும் புத்த முனைக்கு வருகிறோம். புத்த முனையிலிருந்து திரும்பும் போது நான் கடற்பயணம் மேற்கொள்ளப் போகிறேன். என் மனைவி தஞ்சைக்கு திரும்பி விடுவாள்" என்று சொல்ல, அவர்கள் மறுபடியும் ஆனந்தம் கொண்டார்கள்.

"வாழ்க வாழ்க" என்று வாழ்த்தினார்கள்.

"இப்படி ஒரு மருத்துவன் கூட வருகிறான் என்றால் எங்களுக்கு என்ன பயம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று உற்சாகமானார்கள்.

"நாம் போய் சொல்லி விடுவோம்"

"நாம் போய் சொன்னால் போதாது. இந்த சிறுவனை அழைத்துப் போவோம். அய்யா வைத்தியராய்யா நீரும் வாரும். உமது மாப்பிள்ளை என்று அறிமுகப்படுத்தும்"

அவர்கள் இருவரும் மறுநாள் விடியற்காலையில் அருண்மொழிப் பட்டன் எதிரே நின்றார்கள்.

"எதனால் கடற்பயணத்தின் போது வாந்தி வருகிறது" அருண்மொழிப் பட்டன் கேள்வி கேட்டான். தலைமை வைத்தியர் எப்படி சொல்வது என்று தயங்கினார்.

"நான் சொல்லட்டுமா" அவன் தலைமை வைத்தியரிடம் அனுமதி கேட்டான்.

"சரி" என்று சொன்னார்.

"அய்யா, நாம் இரண்டு கால்களால் நேராக நிற்கிறோம். நிற்கும் பொழுது தலை ஆடாது. நடுவே அமைதியாக இருக்கிறது. நமது காதுக்கு கீழ் பூமி ஆடினால் மேலே இருக்கின்ற மூளையும் ஆடும், மூளை என்பது ஒரு திரவத்தில் மிதக்கிறது. அந்த மிதக்கிற மூளை வேகமாக ஆடினால் தலை சுற்றும், தலை சுற்றினால் வயிறு எதுக்களிக்கும். வயிறு எதுக்களித்தால் அடியில் உள்ள சோறு வெளியே வந்து விடும்.

எனவே, மூளை அசையாமல் இருப்பதற்கு உண்டான ஏற்பாடுகள் நாம் செய்ய வேண்டும். மூளை அசைந்தால் என்ன ஆகும், இம்மாதிரியான விஷயங்கள் ஏற்படும் என்று சொன்னேன். ஆனால் அசையும் என்பதை தவிர்க்க முடியாது. திரும்பத் திரும்ப அசையும். மூளை அசைவதை பழக்கப் படுத்திக் கொள்ளும் வரை இந்த தொந்தரவு இருக்கும். அப்படி இந்த தொந்தரவு இருக்கும் பொழுது கிச்சிலியை முகர்வதோ, எலுமிச்சையை முகர்வதோ, கிச்சலி இலையை பிழிந்து வாயில் போட்டு மெல்வதோ நன்றாக இருக்கும். அது வாந்தியை கட்டுப்படுத்தும். வயிற்றுப் போக்கை சரிப்படுத்தும். மூக்கில் நீர்கோர்த்துக் கொள்வதை சரிப்படுத்தும்.



ஆனால், தலையினுடைய ஆட்டம் நிற்காது. படுத்து தூங்க முடியாது. உறங்க முடியாமல் ஆடிக் கொண்டு இருக்கும். கடல்களில் அலை அதிகமானால், கொந்தளிப்பு இருந்தால் இன்னும் மோசமாக இருக்கும்.

உதாரணத்திற்கு நான் நடித்துக் காட்டவா" அவன் வினவினான். அருண்மொழிப் பட்டன் 'சரி' என்று சொல்ல, இடதும், வலதுமாக ஓடினான். "இப்படித்தான் நாம் பயணப்பட வேண்டியிருக்கும்" இந்த நாற்காலியிலிருந்து எதிர்நாற்காலி வரை ஓடி, அந்த நாற்காலியிலிருந்து இந்த பக்கம் வந்து,

"இப்படி நாம் ஓட வேண்டியிருக்கும். அல்லது இப்படி இறுக்கமாக ஒரு தூணை பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த தூணும் ஆடும். இது கொந்தளிப்பான நேரம், கொந்தளிப்பு இல்லாத நேரத்தில் இவ்விதமான ஆட்டம் இருக்கும்" அவன் மறுபடியும் நடித்து காண்பித்தான்.

அருண்மொழிப் பட்டன் வியப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இராஜராஜ பிரம்மராயன் மகனல்லவா, கூர்மையாக இருக்கிறாய். ஆனால் நீ கடற்பயணம் மேற்கொண்டதுண்டா?"

"இல்லை"

"பிறகு எப்படி தெரிந்தது"

"வணிகர்களிடம் விவரமாக கேட்டு அறிந்தேன். வணிகர்கள் நடித்து காட்டினார்கள். அதை உங்களிடம் நான் திரும்ப செய்து காட்டினேன்.

ஒவ்வொரு மரக்கலத்திலும் ஒவ்வொரு வைத்தியர் இருப்பார், நானும் உங்களோடு பயணப்பட விரும்புகின்றேன். நீங்கள் எந்த கப்பலில் இருக்கிறீரோ அங்கு நானும் இருக்க விரும்புகின்றேன்"

"கடற்பயணம் பற்றி வேறு என்ன தெரியும்?"

"இங்கிருந்து ஸ்ரீ விஜயம் போவதற்கு பல்வேறு வசதிகள் இருக்கின்றன. ஒன்று வான சாஸ்திரம், இன்னொன்று கடலின் ஆழம், மூன்றாவது மூக்குத் திவிலைகள்"

"என்னது?"

"மூக்குத் திமிங்கலங்கள்"

"மூக்கு திமிங்கலங்களா, அப்படியென்றால்"

"சற்று மூக்கு நீளமான மிகப்பெரிய மீன்கள். திமிங்கலத்தின் அளவு பெரியவை. அவை கூட்டம் கூட்டமாக இருக்கும்"

"அவை என்ன செய்யும்?"

"நாம் ஸ்ரீ விஜயத்தை நோக்கித் தான் போகிறோம் என்று புரிந்து கொண்டு நமக்கு அவை வழிகாட்டும். நாம் திசை மாறினால் வந்து வழி மறிக்கும். 'க்விக் க்விக்' என்று சத்தி இடது பக்கம் போக வேண்டும் என்று சொல்லும்"

"இது எப்படி தெரிந்தது?"

"இதையும் வணிகர்கள் எனக்கு சொல்லி இருக்கிறார்கள். அவைகளை நம்பி எங்கு வேண்டுமானாலும் போகலாம்"

"ஸ்ரீ விஜயத்திற்குத் தான் போகிறோம் என்று அவைகளுக்கு எப்படித் தெரியும்?"

"இங்குள்ள நாவாய்கள் அத்தனையும் ஸ்ரீ விஜயம் நோக்கித் தான் போகின்றன. ஸ்ரீ விஜயத்திலிருந்து தான் வருகின்றன. எனவே ஒரு நாவாய் வந்தால் அவை ஸ்ரீ விஜயம் நோக்கி போகின்றன என்று அவைகளுக்குத் தெரியும். ஸ்ரீ விஜயத்தின் பாதையும் அவைகளுக்குத் தெரியும். எனவே, அந்த மூக்குத் திமிங்கலங்களை வழிகாட்டியாக வைத்துக் கொண்டு வணிகர்கள் போவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்"

"வணிகர்களை விட அதிகம் தெரிந்து வைத்திருக்கிறாயே"

"இல்லை. அவர்களிடம் தெரிந்து கொண்டது தான் அதிகம்"

"வேறு என்ன செய்தி?"

"நன்றாக தூங்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு வழி இருக்கிறது"

"என்ன?"

"தூளி கட்டி விடுவது"

"தூளியா?"

"ஆமாம். தரையில் படுத்து உறங்கினால் இடதும், வலதும்



உருளுவோம். அப்படி உருளாமல் இருக்க இரண்டு தூண்களுக்கு நடுவே தூளி கட்டி அதில் ஏறி படுத்துக் கொண்டால் நாம் உருள மாட்டோம். அந்த தூளிக்குள் பொதிந்து பத்திரமாக இருப்போம்"

"அட, இதுவும் அற்புதமாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது உன்னுடைய யோசனைகள்"

"என் யோசனை அல்ல, சேனாதிபதி அவர்களே. இது வணிகர்கள் சொல்கிற யோசனை"

"வணிகர்களை விட மாட்டான். பின் தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பான். அவர்கள் அலுத்துக் கொண்டு துரத்தும் வரை பின்னாலேயே ஓடுவான். அவன் இயல்பு அப்படி?"

"துடிப்பாக இருக்கிறான். சந்தோஷமாக இருக்கிறான், இவனை மாப்பிள்ளையாக பெற்றது உங்களுடைய பாக்கியம். நாளைக்கு திருமணமா"

"இல்லை, இன்று உச்சி வேளைக்கு முன்னால் திருமணம்"

"ஆக, திருமணத்தை விட்டு விட்டா வந்திருக்கிறீர்கள்"

"நீங்கள் அழைத்த பிறகு வராமல் இருக்க முடியுமா"

"அடேய், முதலில் திருமணத்திற்கு போங்கள். இருங்கள்"

ஒரு தட்டு கொண்டு வரச் சொன்னார். தட்டில் மாலைகளும், பொற்காசுகளும் வைத்தார். பட்டுத்துணி வைத்தார். காழகம் என்கிற கரை ஆடையை வைத்தார். அவனிடம் நீட்டினார்.

"வாழ்க வளமுடன், உன்னை போர் முனையில் சந்திக்கிறேன்"

"என்னோடு என் மனைவியும் வருகிறாள். அதற்கும் அனுமதி அளிக்க வேண்டும்"

"எதற்காக மனைவி?"

"அவள் எனக்கு மிகவும் உதவி செய்வாள். அவள் உதவி இருப்பின் என்னால் வைத்தியத்தை விரைவாகச் செய்ய முடியும்"

"நல்லது, அழைத்து வா. இந்தா அவளுக்காக இதைக் கொடு"

இரண்டு வெள்ளித் தண்டைகள் கொண்டு வந்து கொடுக்கப்பட அவற்றையும் தட்டில் வைத்தார்.

"அவர் காலில் விழுந்து வணங்கி, அவைகளை வாங்கிக் கொண்டான். திருமணத்திற்கு முன்பே அதிகமான பரிசுப் பொருள்கள் அதிர்ஷ்ட வசமாக அவனுக்கு வருகிறது என்பதை தலைமை மருத்துவர் புரிந்து கொண்டார். அவனை அணைத்துக் கொண்டார்.

"உன்னைப் பற்றிய பயம் எனக்கு இருந்தது உண்மைடா. ஆனால் அது முற்றிலும் நீங்கி விட்டது. எத்தனை விஷயங்கள் சொல்கிறாய். எவ்வளவு கெட்டிக்காரனாய் இருக்கிறாய். நான் பாக்யசாலி. நான் ஏதேனும் தவறாக பேசி இருப்பின் மன்னித்து விடு"

அவன் அவரை இறுக்க அணைத்துக் கொண்டான்.

"வாருங்கள் போவோம்" என்று கை கோர்த்துக் கொண்டான்.

தோள் பட்டையில் பொன் மூட்டை முடிச்சுடன், மாமனாரும், மாப்பிள்ளையும் வீடு நோக்கி நடந்தார்கள்.

**சுபம்**


இந்த நாவலின் அடுத்த முடிவு புத்தகம் லேடீஸ் நாவலில் வெளிவந்துள்ளது. அதுவும் இப்பொழுதே கடைகளில் கிடைக்கிறது.

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHVARYA PUBLICATION ஆனந்த நாவல், 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

**செல்: 94453 45067**



**ANANDHA NOVAL** Owner & Published by **M.Pon Chandra Sekaran** at 77, Madhavaram High Road, Perambur, Chennai - 600 011. Printed by **M.Pon Chandrasekaran** at Basker Atchagam, No:16, Visaka Thottam Street, Saidapet, Chennai - 600 015.

**Editor: Pon ChandraSekar**

**www.palsuvainovel.com**